# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

# இலங்கை

## நாற்பதாவது வருடாந்த அறிக்கை

# 2018

## உள்ளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூர நோக்கு மற்றும் நோக்கு.... | ii |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ)................................. | iii |
| | அறிமுகம்.............................................................................. | iii |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடமைகள.................... | iii |
| | நிறைவேற்றுச் சுருக்கக் குறிப்பு................................................ | iv |
| | அட்டவணைகளின் பட்டியல்......................................................... | xvi |
| 01 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம் .................... | 1 |
| 02 | பல்கலைக்கழக முகாமைத்துவம்...................................................... | 2 |
| 03 | நிறுவனங்கள்.......................................................................... | 6 |
| 04 | பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்............................. | 8 |
| 05 | கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வி தராதரங்களின் பராமரிப்பு..................... | 18 |
| 06 | நிதி நிர்வாகம்......................................................................... | 27 |
| 07 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் பதவியணியினர் ........ | 33 |
| 08 | மனித வளங்கள் திணைக்களத்தின் முன்னேற்றம்.................................. | 35 |
| 09 | பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்கு உயர் கல்விக்கான உதவி ................ | 38 |
| 10 | உட்கட்டமைப்பு அபிவிருத்தி ......................................................... | 45 |
| 11 | தகவல் தொழில்நுட்ப உதவி ........................................................ | 46 |
| 12 | பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி ....................................... | 48 |
| 13 | முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் அபிவிருத்திச் செயற்பாடுகள்.......... | 50 |
| 14 | தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷேட ஒதுக்கீடுகள் ................................ | 51 |
| 15 | சட்ட விவகாரங்கள................................................................... | 51 |
| 16 | பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை (ருளுயுடீ)............................ | 54 |
| 17 | மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்............................ | 54 |
| 18 | வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள்.................................................. | 55 |
| 19 | தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலின் வகிபாகம் மற்றும் பங்கு (ஞயுஊ)..................... | 55 |
| 20 | பால் நிலைப் பங்கு மற்றும் சமத்துவம்.............................................. | 61 |
| 21 | 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள | 64 |
| 22 | சிறப்பான சேவைகளுக்காக வேண்டி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வசதிகளை மேம்படுத்தல் | 67 |
| 23 | 2018 ஆம் ஆண்டுப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்............................................ | 68 |
| 24 | பல்கலைக்கழகங்கள் ஓய்வூதிய நிதியத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதி நிலைமைக் கூற்றுக்கள்............................................................ | 96 |
| 25 | பல்கலைக்கழகங்கள் சேமலாப நிதியத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிநிலைமைக்கூற்றுக்கள்.................................................... | 109 |

26. இணைப்பு


1. பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2017/2018 சாதாரண ஏற்பாட்டின்கீழ் பல்வேறு பட்டநெறிகளுக்கு தெரிவான மாணவர் எண்ணிக்கை மாவட்டம் மற்றும் கற்கைநெறி ரீதியிலான வகைப்படுத்தல் 120

***(இணைப்பு I)***

2.பல்கலைக்கழக அனுமதி - கல்வியாண்டு 2017/2018 சாதாரண மற்றும் விஷேட ஏற்பாட்டின்கீழ் தெரிவான மாணவர் எண்ணிக்கை 126

***(இணைப்பு II)***

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தூர நோக்கு மற்றும் நோக்கு

## தூர நோக்கு

2020 இல் ஆசியாவில் இலங்கை உயர் கல்வி மையமாகவும் பிராந்தியத்தின் தலைவராகவும் இருத்தல்.

## நோக்கு

நல்லாட்சி மற்றும் முகாமைத்துவம் ஊடாக, தேசிய அபிவிருத்தி பாதையில் நியாயமான கல்வியூட்டல், கற்றல், உயர் தாக்கமுள்ள ஆய்வு, புதுமையான தொழில் முயற்சி, ஆக்கமுள்ள சமுதாய ஈடுபாடு, சமாதானமும் ஒற்றுமையும், மற்றும் இலக்குள்ள சர்வதேச கூட்டுறவு ஆகியவற்றிற்கு அர்ப்பணிப்புள்ள உறுதியானதும், பரந்த அளவிலும் பாராட்டப்படவும், அணுகவும் கூடிய உயர் கல்வி முறைமையை வழிகாட்டி, நிறுவி விருத்தி செய்தல்.

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ)

## அறிமுகம்

இலங்கை பல்கலைக்கழக முறையின் வழிகாட்டுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொழிற்பாட்டின் உச்ச சபையாக செயற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (ப.மா.ஆ) 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் 1978 ம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதி அன்று நிறுவப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புக்களாக பல்கலைக்கழக கல்வியைத் திட்டமிடலும் ஒன்றிணைத்தலும், உயர்கல்வி நிறுவனங்களுக்கான உயர் கல்வி நிறுவகங்களுக்கான நிதிகளை ஒதுக்குதல், கல்விசார் தரங்களைப் பேணுதல், உயர்கல்வி நிறுவனங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான மாணவர்களின் அனுமதியினை ஒழுங்குபடுத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் சகல அரச உயர்கல்வி நிறுவகங்களின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்குப் பங்களிப்பச் செய்தல் ஆகியனவாகும்.

இதன் தலைவர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் செயற்படும் அதே வேளை ஆணைக்குழு விவகாரங்களின் தினசரி நிர்வாகத்ததைக் கட்டுப்படுத்தக் கூடியவராகவும், ஆணைக்குழுக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவராகவும் உள்ளார். ப.மா.ஆ வினது செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதற்கும் சீரமைப்பதற்குமாக ப.மா.ஆ வில் தத்தமக்கென ஒதுக்கப்பட்ட கடமைகள் மற்றும் செயற்பாடுகளுடன் பல்வேறு திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள் என்பவை காணப்படுகினறன. பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அரச உயர் கல்வி நிறுவனமானது 15 பல்கலைக்கழகங்கள்,11 பட்டப்பின் கல்வி நிறுவனங்கள் மற்றும் 7 நிறுவகங்களைக் கொண்டுள்ளது.ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் நிருவாக அதிகாரியாக பேரவை இருக்கும் அதேவேளை செனட் ஆனது கல்விச் செயற்பாட்டின் அதி உச்ச சபையாக செயற்படுகின்றது. ஒரு பல்கலைக்கழகத்தினதும் மற்றும் நிறுவனத்தினதும் பிரதான நிறைவேற்று அதிகாரியாக முறையே உப வேந்தர் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் செயற்படுகின்றனர்.

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கடமைகள்

1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவானது பின்வரும் பிரதான பொறுப்புக்கள் மற்றும் நோக்கங்களைக் கொண்டுள்ளது.

1. தேசிய கொள்கைகளை உறுதிப்படுத்துவதற்காக பல்கலைக்கழக கல்வியைத்திட்டமிடலும் ஒருங்கிணைத்தலும்.
2. பல்கலைக்கழக கல்வி தொடர்பாக பாராளுமன்றத்தில் வாக்களிக்கப்பட்ட நிதியை பகிர்ந்தளித்தலும் அத்தகைய உயர் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றினதும் செலவுகளைக் கட்டுப்படுத்துதல்.
3. உயர் கல்வி நிறுவனங்களின் கல்வித் தரங்களைப் பேணுதல்.
4. உயர் கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவத்தை சீராக்குதல்.
5. 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டவாறும் ஒப்படைக்கப்பட்டவாறும், விதிக்கப்பட்டவற்றின் படியும் ஒவ்வொரு உயர் கல்வி நிறுவனங்களின் மாணவர் அனுமதியை ஒழுங்கமைத்தல், கடமைகள் செயற்பாடுகள் அதிகாரங்கள் என்பவற்றை கையளித்தல், செயற்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

# நிறைவேற்றுச் சுருக்கக் குறிப்பு

இவ்வருடாந்த அறிக்கை 2018 ஆம் வருடத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்கின்றது. 2018 ஆம் வருடத்தின் போது முக்கிய அம்சங்களாகவும் சாதனை அடைவுகளாகவும் அமைவன:- பல்கலைக்கழகங்களுக்கு மாணவர் அனுமதி, கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்தி, ஆளணியினர் விருத்தி, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி (IT), தர உறுதிப்பாடு, நிதி நிர்வாக மற்றும் முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் கல்விசார் கூட்டுறவும் ஆய்விற்கான ஒத்துழைப்பு ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

2013-2017 தந்திரோபாயத் திட்டத்தின் 2018 ஆம் ஆண்டுக்காக விரிவாக்கம் செய்யப்பட்ட வருடாந்த அறிக்கையுடன், 2018 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் போது, 2013-2017 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழு தந்திரோபாயத் திட்டத்தின் இலக்கு, நோக்கம் மற்றும் பிரதான அடைவுக் குறிகாட்டிகள் (KPI), நாட்டினுடைய தேவைகள் செயற்பாடுகள் , அறிவை மையப்படுத்திய பொருளாதாரத்தில் பிரேரிக்கப்பட்ட மனித தேவைகள் மற்றும் இலங்கை அரசாங்கத்தின் கொள்கைகள் ஆகியவை கவனத்திற் கொள்ளப்பட்டன.

## 2017/2018 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழகங்கள்/உயர் கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2017 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 2017/2018 கல்வியாண்டுக்குத் தகைமை பொருந்திய மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2018 ஜனவரி மாதம் விண்ணப்பங்களைக் கோரியது.அதனடிப்படையில், சாதாரண அனுமதியின் கீழ் ஒவ்வோர் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டத்திற்குமான மாணவர் தெரிவானது இறுதி செய்யப்பட்டு 2018 ஜூலை மாதத்தில் வெட்டுப் புள்ளிகளும் வெளியிடப்பட்டன. அதே வேளை, மீளாய்வாண்டின் போது விஷேட ஒதுக்கீடுகளின் அனுமதிக்கப்படும் மாணவர்களுக்கான தெரிவும் இறுதி செய்யப்பட்டிருந்தது.

2017/2018 கல்வியாண்டின் பல்கலைக்கழக அனுமதிக்குரிய பிரதான தகவல்கள் கீழே சுருக்கமகக் குறப்பிடப்பட்டுள்ளன;

| | |
|---|---|
| 2017 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை | 253,357 |
| வெளியிடப்பட்ட க.பொ.த உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் 2017/2018 கல்வியாண்டிற்காக பல்கலைக்கழக அனுமதிக்குத் தகுதி பெற்ற மாணவர்கள் | 163,160 |
| தெரிவு செய்யப்பட்ட / அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை :<br>(1) சாதாரண<br>(2) விஷேட உள்ளெடுப்பு [1] | <br>30,141<br>409 |
| **தெரிவு செய்யப்பட்ட / அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்கள் எண்ணிக்கை :** | **30,550** |

**குறிப்பு:** [1]**விஷேட ஆட்சேர்ப்புக்கள்:** கற்கை சார் விடயங்களுக்குப் புறம்பாக தேசிய /சர்வதேச மட்டங்களில் திறமை காட்டிய மற்றும் இதர வகைப்பாடுகளான வெளிநாட்டுத் தகைமைகள், இராணுவ மற்றும் பொலிஸ் படையினர், பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளிகள்,ஆசிரியர்கள் மற்றும் அனுமதிக்கான மேள்முறையீடுகள் ஆகிய விஷேட ஒதுக்கீடுகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களையே இது குறித்து நிற்கின்றது. இருப்பினும், 2017/2018 கல்வியாண்டில் விஷேட பாடங்களுக்காக **மேலதிக அனுமதியின்** கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் இது வரை இறுதிசெய்யப்படவில்லை என்பதால் இதில் உள்ளடங்கப் பெறாது. பல்கலைக்கழக அனுமதியினை அதிகரிக்கும் முகமாக, பல்கலைக்கழக முறைமையின் கங்கைநெறிப் பட்டியலுக்கு 2018 ஆம் ஆண்டில் புதிய கற்கை நெறியொன்று சேர்க்கப்பட்டு 2017/2018 கல்வியாண்டில் அது கீழ் காட்டப்பட்டிருக்கும் விதத்தில் அமுலாக்கம் செய்யப்பட்டது.

**கற்கை நெறியின் பெயர்:** நிதிப் பொறியியல்
**பல்கலைக்கழகம்:** மொறட்டுவ பல்கலைக்கழகம்
**அனுமதி:** 50

## கல்விசார் மற்றும் ஆய்வு அபிவிருத்திகள்

உயர்கல்வியில் பரந்துபட்ட பங்கேற்பு மற்றும் சமமான அணுகுமுறையினை வழங்கும் நோக்கத்துடன் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்கள் என்பன தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் ஆன புதியமற்றும் புத்தாக்கபூர்வமான கற்கைநெறிகள்இ பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காக ஊக்கப்படுத்தப்பட்டது.இதற்கு ஆதரவளிக்கும் முகமாக 2018 ஆம் ஆண்டின் போது பின்வருவனவற்றுக்கான அனுமதியானது வழங்கப்பட்டது;

- இலங்கை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் சபரகமுவ பல்கலைக்கழகங்களில் பீடங்கள்- இரண்டு (02)
- புதிய கற்கைத் திணைக்களங்கள்- இருபத்தியேழு (27)
- புதிய கற்கைநெறி- ஒன்று(01)
- புதிய இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்- பன்னிரண்டு (12)
- புதிய வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்- ஒன்று (01)
- புதிய பட்டப் பின் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்- ஏழு (07)

மேலும் மாணவர்களுக்கு அதிகமான வாய்ப்புக்களை வழங்கும் முகமாக, ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு புதிய அறிவு மற்றும் திறமைகளை அளித்து அதனை நாட்டின் தற்காலத் தேவைகளுக்கு ஏற்றாற் போல் மீள்கட்டமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.அதனடிப்படையில், 2018 ஆம் ஆண்டில் இரண்டு (02) திணைக்களங்களின் பெயர்கள் மற்றும் நாற்பத்தியாறு (46) இளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டின் போது பல்வேறு துறைகளுக்குமாக அவ்வவ் துறைகளில் உயர்கல்வியுடன் தொடர்பான அறிக்கையிடல் மற்றும் உயர்கல்வியுடன் தொடர்பான விடயங்களில் ஆணைக்குழுவிற்கு பரிந்துரைகளை மேற்கொள்வதற்கென பதினெட்டு (18) நிலையான குழுக்கள் மற்றும் பிற ஒரு (01) குழுவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவில் தொழிற்பாட்டில் இருந்தன.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2018 ஜனவரி மாதம் 26 ஆந் திகதி ‘தேசிய சட்ட விரிவுரையாளர்கள் மாநாட்டினை’ துவங்கி வைத்தது என்பதுடன் முதன் முதலாக நாட்டின் பிரதம நீதியரசர் இலங்கை அரச பல்கலைக்கழங்களின் உச்ச சபைக்கு

வருகை தந்த நிகழ்வு இது என்பதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பல்கலைக்கழக முறைமையில் உள்ள சட்ட விரிவுரையாளர்களுக்கான இத்தகையதொரு மாநாடு இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்ட முதல் தடவை இதுவேயாகும். மாநாட்டின் தொனிப்பொருளாவது ''சட்டக் கல்வியின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்தல்''என்பதாகும். இம் மாநாட்டின் கீழ் பங்கேற்பாளர்கள் வழங்கப்பட்ட தலைப்பின் கீழ் ஒன்பது (09) பிரதான பகுதிகளை இனங்கண்டதுடன் விரிவான கலந்துரையாடல்கள் மூலம் பத்து (10) பரிந்துரைகளை இறுதியில் முன்கொணர்ந்த ஒரு பிரதான தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செயலமர்வாக இதனைக் கருத்திற் கொள்ளலாம்.

மீளாய்வாண்டின் போது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் அரச பல்கலைக்கழகங்களின் இளமாணிப் பட்டதாரிகளுக்காக நடத்தப்படும் தேசிய மட்ட பரீட்சையான ''ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சை'' (UTEL) இனை நடத்துவதற்காக கொழும்புப் பல்கலைக்கழத்தில் அதற்குரிய ''UTEL பரீட்சைச் சேவைகள்''(UTEL Testing Services) எனும் பெயரில் ஒரு நிலையத்தினை ஸ்தாபிப்பதற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது முன்னெடுத்தது.

## நிதி நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வேண்டுகோளிற்கு இணங்க, 2018 ஆம் ஆண்டிற்காக வேண்டி திறைசேறியினால் அங்கீகரிக்கப்பட்ட ரூபா. 56,239,50 மில்லியன் தொகையானது ஒதுக்கீடு செய்யப்பட்டது.இத் தொகையானது மீண்டெழும் செலவினம் ரூபா.36,785.50 மற்றும் மூலதன மானியம் ரூபா.19,454.00 இனைக் கொண்டது. 2018 ஆம் ஆண்டு இறுதியில் முறையே 97.6 % மற்றும் 72.4 % ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதித்தொகையிலிருந்து மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களுக்காக வேண்டி பயன்படுத்தப்பட்டதுடன் இதில் ரூபா.50,033.00 மில்லியன் தொகையானது 88.9 % கூட்டிணைந்த பயன்பாட்டினைக் காட்டியது.

மீளாய்வாண்டின் போது, திறைசேறியினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த முகாமைத்துவ நடைமுறைகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் சகல முக்கியத்துவம் வாய்ந்த நிர்வாக மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளையும் கண்காணிக்கும் நோக்கத்துடன் ஐந்து (05) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சந்திப்புக்கள் நடைபெற்றன.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தினால் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், கடமைகள், மற்றும் தொழிற்பாடுகள் அடிப்படையில் 2018 ஆம் ஆண்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 26 ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் 18 ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள் வெளியிடப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் சுமுகமான தொழிற்பாட்டிற்குத் தேவையான ஆணைக்குழுக் கூட்டங்களில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மற்றும் கொள்கைகளுடன் தொடர்புடைய தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக இச் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டன.

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆளணி நடவடிக்கைகள் முகாமைத்துவம்

2018 ஆம் ஆண்டில் நிர்வாக மற்றும் நிர்வாகம் சாரா ஊழியர்களை இணைத்து பல்கலைக்கழகச் செயலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த பதவியணியினர்களின் எண்ணிக்கை 306 ஆகும். 2018 டிசம்பர் 31 ஆந் திகதியிற்கு, ப.மா.ஆ செயலகத்தில் பணியாற்றியோர் மொத்த எண்ணிக்கை 250 ஆக இருந்ததுடன் பூரணப்படுத்தப்படாத வெற்றிடங்கள் 18% ஆகவும் காணப்பட்டது. மீளாய்வாண்டில் ஆணைக்குழு 36 புதிய நபர்களை சேவைக்கு இணைத்துக் கொண்டது. அது உயர்கல்வி நிறுவகங்களுக்கு 33 புதிய நியமனங்களையும் 03 இடமாற்றீடுகளையம் கொண்டிருந்தது. இன்னொரு பக்கத்தில், 30 பேர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் சேவையாற்றுவதிலிருந்து பதவி விலகிக் கொண்டனர். இதற்குரிய காரணங்களாக உயர்கல்வி நிறுவகங்களுக்கான இடமாற்றம் கிடைக்கப் பெறல், இதர உயர்கல்வி நிறுவகங்களுக்கு அல்லது பிற அரசாங்க நிறுவகங்களுக்கு விடுவிக்கப்படல்,ஓய்வுபெறல், தாமாகவே பதவி விலகல் மற்றும் பதவிக்கால விடுமுறை மற்றும் சேவை ஒப்பந்தகால முடிவு என்பனவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினுள், 2018 ஆம் ஆண்டின் போது 14 பதவியயர்வுகள், 12 சேவை நிரந்தரமாக்கல்கள், ஊழியர் மாற்றம் 01 மற்றும் 15 உள்ளக ரீதியான இடமாற்றீடுகள் என்பன பதிவு செய்யப்பட்டிருந்தன. அதேவேளை, பல்கலைக்கழக முறைமையில் 25 ஆண்டு காலத்திற்கு மேலாக சேவையாற்றியோருக்கு அவர்களின் அத்தகைய நீண்ட புனிதமான சேவையினை கௌரவித்து நிதி மாணியங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அதனுடைய ஆளணியினருக்கு தமது திறமைகள் மற்றும் பணியாற்றும் அனுபவத்தினை மேம்படுத்திக் கொள்வதற்காக தொடர்ச்சியாக பல வாய்ப்புக்களை வழங்கி வந்தது. மீளாய்வாண்டின் போது, நிர்வாகம் சார் ஊழியர்கள் 11 பேர் மற்றும் நிர்வாகம் சாரா உறுப்பினர்கள் 43 பேர்கள் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட குறுகிய கால பயிற்சி மற்றும் அபிவிருத்திச் செயலமர்வில் கலந்து கொண்டனர். அதே வேளை, நிர்வாக ஆளணியினரில் 12 பேர்களுக்கு குறுகிய கால வெளிநாட்டுப் பயிற்சி யும் வழங்கப்பட்டது. மேலும், நிர்வாக ஆளணியினரில் 03 பேர்களுக்கு தமது தொழிற் தகைமை அபிவிருத்தியினை பணியாற்றும் அறிவு மற்றும் வெளிப்படுதன்மை ஆகியவற்றின் மூலம் மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்காக வேண்டி வணிக நிர்வாக முதுமாணி (MBA) கற்கைககளை அவர்கள் தொடர்வதற்குரிய நிதிதவியானது வழங்கப்பட்டது.

மேலும் 2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சகல நிரந்தர ஊழிய உறுப்பினர்களுக்குமாக கவர்ச்சிகரமான மற்றும் நியாயமான கட்டணத்தில் தனியாள் கணக்கின் மூலம் குடும்பத்தினையும் ஆவண செய்யும் அமைப்பில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட சலுகைகள் உள்ளடக்கிய சுகாதாரக் காப்புறுதிக் காப்பீடானது வழங்கப்பட்டது.

## பல்கலைக்கழக முறைமையில் மனித வளங்கள் பங்களிப்பு

2018 ஆம் ஆண்டு, பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் (DMS) மொத்தமாக 958 புதிய ஆளணிப் பதவிகள் அனுமதிக்கப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பேரிலே இதத்கைய அதிகரித்த பதவியணியினர் எண்ணிக்கையானது வழங்கப்பட்டது என்பதுடன் கடந்த 05 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிலேயே உயர்ந்தபட்ச எண்ணிக்கையிலான புதிய பதவியணிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் நிர்வாகத் தர நியமனங்கள் / பதவியுயர்வுகள் என்பவற்றுக்குப் பொறுப்பாகவுள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2018 ஆம் ஆண்டின் போது 139 நியமனங்களையும் 23 பதவியுயர்வுகளையும் வழங்கியது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது இதர ஆளணித் தரங்களைக் கொண்ட பதவிகளிலும் 7 நியமனங்கள் 8 பதவியுயர்வுகள் என்பவற்றை வழங்கியது என்பதுடன் மொத்தமாக பல்கலைக்கழக முறைமையினுள் 218 இடமாற்றீடுகளை இவ்வாண்டின் போது மேற்கொண்டது.

2018 ஜனவரி முதல் டிசம்பர் வரையிலான 12 மாத காலப்பிரிவினுள் பல்கலைக்கழகங்கள்/ உயர்கல்வி நிறுவகங்களிடமிருந்து சலுகை அடிப்படையிலான மோட்டார் வதாகன அனுமதிப் பத்திரங்களுக்காக மொத்தமாக 2102 விண்ணப்பங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பெற்றுக் கொண்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில் நகர்த்திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வியமைச்சானது அதனை செயன்முறைப்படுத்தும்.

## பல்கலைக்கழகக் கல்வியியளாளர்களின் உயர் கல்வித் தேவைகளுக்கான உதவி மற்றும் ஆதரவு

மீளாய்வாண்டின் போது, கல்விசார் ஊழியர்களின் குறிப்பாக இளைய பல்கலைக்கழகக் கல்வியியலாளர்கள் தமது உயர்கல்வித் தேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக சிரத்தையுடன் பணியாற்றியது. இத்தகைய முயற்சிகளானவை ஆய்வுப் பிரிவு மற்றும் சர்வதேச கூட்டுத்தபானம் (DRIC) இனால் முதன்மையாக ஆரம்பிக்கப்பட்டதுடன் அவை பின்வருமாறு;

- 2018 ஆம் ஆண்டு விண்ணப்பித்திருந்த முதல் சுற்று விண்ணப்பதாரிகளுள் 18 அரச பல்கலைக்கழக / உயர்கல்வி நிறுவகங்களின் விரிவுரையாளர்களுக்கு தமது முதுமாணித்துவ மற்றும் கலாநிதிப் பட்டக் கற்கைகளை பெற்றுக் கொள்வதற்காக ( வருடாந்தம் 3.5 மில்லியன் தொகை வரையில் வாழ்க்கைச் செலவுகள் உட்பட) நிதி மானியங்கள் வழங்கப்படல். இரண்டாம் சுற்று விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்வதானது தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தில் (QUT) பட்டப்பின் கற்கைத் திட்டத்தினை மேலும் முன்னேற்றி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் குயின்ஸ்லாந்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்திற்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டதுடன் அதன் மூலம் குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தின் மூலம் பல்கலைக்கழகக் கல்வியியலாளர்களின் கலாநிதிப் பட்டத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலமாக வருடாந்த ஆய்வுப் பயிற்சி நெறி நிகழ்ச்சித்திட்ட ஈடு செய்யும் கட்டணம் (சர்வதேச) அனுசரணையுடன் 12 வரை வழங்கப்படுகிறது.

- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழு மற்றும் சர்வதேச ஜப்பான் பல்கலைக்கழகம் (IUJ) பட்டப்பின் புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 விண்ணப்பதாரிகளை கலாநிதிப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2 விண்ணப்பதாரிகளை முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக தெரிவு செய்தல்.

- அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபின் பல்கலைக்கழகம் (GUQ) இலங்கை பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழவிற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டு அது 2019 ஆம் ஆண்டின் முதல் பகுதியில் ஆணைக்குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதில் ஒப்பமிடப்பட்டதன் பின்னர் அதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள உயர்கல்வி

நிறுவகங்களின் கல்வி சார் உறுப்பினர்களுக்கு அவர்களின் கலாநிதிப் பட்ட தேவையினை பூர்த்தி செய்வதற்குரிய வசதி வாய்ப்புக்களை குயின்ஸ்லாந்து கிரிபின் பல்கலைக்கழகமானது வழங்கும்.

- ஜேர்மன் ஹய்டல்பேர்க் பல்கலைக்கழக தெற்காசிய நிறுவகத்தில் (SAI) இலங்கைத் தமைமையகத்தினை நடத்துவதற்காக நிதியுதவி வழங்குவதன் மூலம் இலங்கை அரசாங்கம் மற்றும் ஜேர்மன் ஹய்டல்பேர்க் பல்கலைக்கழகத்திற்கும் இடையில் கையொப்பமிடப்பட்ட புரிந்தணர்வு உடன்படிக்கையினை நடைமுறைப்படுத்தல்.

- ஐக்கிய இராச்சியத்தின் பொதுநலவாய மருத்துவத் தோழமைகள்- 2018 ஆம் ஆண்டிற்காக 04 அபேட்சகர்களை வரை வரையறுத்து பெயர் குறிப்பிடுதல்.

- 'உயர்கல்விக் கருத்திட்டம் மற்றும் அபிவிருத்தியினை துரிதப்படுத்தல்' (AHEAD) நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் அறிமுகச் செயலமர்வொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கேட்பொர் கூடத்தில் நடத்துதல்.உலக வங்கி அதிகாரிகளின் உதவி ஒத்தாசையுடன் இது அரம்பிக்கப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழக உபவேந்தர்கள மற்றும் சகல பல்கலைக்கழகங்களின் சிரேஷ்ட கல்வியியலாளர்கள் சிலபேர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் உரிய அதிகாரிகளுடன் இதில் இணைந்து கொண்டனர்.

- 2019 ஆம் ஆண்டில் அரச பல்கலைக்கழக பதவியணியினருக்கு மேலதிக உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்குவதன் பொருட்டு எராஸ்மஸ் + நிகழ்ச்சித்திட்டம் மற்றும் இலங்கை உயர்கல்விப் பிரிவிற்கு மத்தியில் கூட்டிணைப்பிற்காக கலந்துரையாடல்களை ஆரம்பித்தல்

- வேறுபட்ட அமைப்பிலான புலமைப்பரிசில், தோழமைகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் வேறுபட்ட நிறுவகங்களிடமிருந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்ற இருபத்தியாறு (26) அறிவித்தல்கள் தொடர்பில் சகல / உரிய பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களைத் தொடர்பு கொள்ளுதல்.

## உயர்கல்வி நிறுவகங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள்

புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் புதிய கட்டுமானங்கள், செயற்பாட்டில் இருக்கின்ற கருத்திட்டங்கள;, புனரமைக்கப்பட்ட கருத்திட்டங்கள், கையகப்படுத்தல் மற்றும் அடிப்படை வசதிகளுக்காகவும் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் பல்கலைக்கழக / உயர்கல்வி நிறுவகங்களின் இயலுமையினை அதிகரிப்பதற்கும் மீளாய்வாண்டினுள் ஒதுக்கப்பட்டிருக்கும் மொத்த தொகை ரூபா.மில்லியன் 19,469 ஆகும். எவ்வாறிருப்பினும், நிதியினை விடுவிக்கும் போது திறைசேறியினால் விடுக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகள் காரணமாக வருட இறுதியாகும் போது பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கு கிடைக்கப் பெற்றிருப்பதானது ரூபா.மில்லியன் 14,098 ஆகும்.

பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் மூலம் புதிய கருத்திட்ட 48 முன்மொழிவுகள் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்றிருப்பதுடன்இ அதில் 26 கருத்திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு (NPD) முன்வைக்கப்பட்டுள்ளது. புதிய 14 கருத்திட்டங்களுக்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அனுமதியபானது வழங்கப்பட்டிருப்பதுடன், முன்னைய ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்ட முன்மொழிவு உட்பட 19 கருத்திட்டங்கள் மிளாய்வாண்டினுள் அனுமதிக்கப்பட்டது. மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா.மில்லியன் 30,248 பெறுமதியான 98 கருத்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்டு பல்கலைக்கழக முறைமைக்கு கையளிக்கப்பட்டிருப்பதுடன் புதிய 11 கருத்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் பௌதீக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. ரூபா.மில்லியன் 47,783 பெறுமதியான

90 கட்டுமானக் கருத்திட்டங்கள் வருட இறுதியாகும் போது பல்கலைக்கழக முறைமையினுள் வேறுபட்ட திட்மிடல்கள் மற்றும் கட்டுமானப் படித்தரங்களில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

கீழ் காட்டப்பட்டிருப்பதானது 2018 ஆம் ஆண்டினுள் செயற்பட்டுக் கொண்டிருக்கும் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களின் அடிப்படை வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டமாகும்;

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தின் பல்நோக்குக் கட்டிடம்- ரூபா மில்லியன; 1,364
- ஸ்ரீ ஜயவர்தனபர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் பல்நோக்குக் கட்டிடம்- ரூபா.மில்லியன் 1,761
- தொழில்நுட்ப பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 2,087
- தொழில்நுட்ப பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 2,640
- திரவிய விஞ்ஞானங்கள் மற்றும் பொறியியல் திணைக்களக் கட்டடிடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 439
- இயந்திரப் பொறியியல் விஞ்ஞானக் கட்டிடம்,மொறட்டுவ பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 247
- கணினி விஞ்ஞானத் திணைக்களக் கட்டிடம்,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 240
- இணைந்த சுகாதார விஞ்ஞானங்களுக்கான கலைக் கட்டடத் தொகுதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 1,125
- மருத்துவ பீடத்தின் 12 மாடிக் கட்டிடம், உறுகுணை பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 1,179
- மருத்ததுவ பீடத்தின் 10 மாடிகளைக் கொண்ட வோட் தொகுதி,உறுகுணைப் பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 1,300
- FAMS இற்கான மருத்துவ சாயனக் கட்டிடம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 896
- கழிவு நீர் மற்றும் கழிவகற்றல் தொகுதி,இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 200
- மருத்துவ பீடம், இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்-ரூபா.மில்லியன் 3,229.4

## தகவல் தொழில்நுட்ப உதவி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினுள் ஆரோக்கியமான மற்றும் தொடர்ந்தேர்ச்சையான கணினி முறைமையொன்றை நடத்திச் செல்வதற்காக வேண்டி தகவல் தொழில்நுட்பப் பிரிவின் மூலம் தொடர்ச்சியான முகாமைத்துவ உதவியானது வழங்கப்படுகிறது. வழமையான மற்றும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளுக்கு மேலதிகமாக, நடைமுறையில் இருக்கும் வியாபார பிரயோகங்களை செயற்படுத்துதல் மற்றும் நடத்தாட்டுதல் மற்றும் இணையதள நிர்வாகம் மற்றம் அதனை நடத்துதல் மற்றும் இ-நிர்வாக பிரயோகங்கள் மற்றும் ஒன்லைன் கொடுப்பனவு வாயில் என்பன கணினிப் பிரிவினால் வழங்கப்படுகின்ற சேவைகளாகும்.

2019 ஆம் ஆண்டில் உயர்கல்வியில் தர உறுதிப்பாட்டுக்கான முகவர்களின் சர்வதேச வலைப்பின்னல் (INQAAHE) இற்காக ஈராண்டு மாநாடு மற்றும் ஆசிய பசுபிக் தர வலைப்பின்னல் (APQN) வருடாந்த கல்வி மாநாட்டினை நடத்துவதற்கு திட்டமிட்டிருப்பதுடன்

இலங்கையில் நடைபெறும் சர்வதேச செயலமர்வு / கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு விரும்புகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வெளிநாட்டுப் பணத்தினைச் செலுத்துவதனை இலகுவாக்குவதன் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்காக புதிய கொடுப்பனவு வாயில் மொடியூல் ஒன்றை 2018 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. மேலும், INQAAHE செயலமர்வு 2019 மற்றும் APQN செயலமர்வு 2019 இற்காக மாநாட்டு இணையப்பக்கங்கள் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

முன்மொழிவு முகாமைத்துவ முறைமையில் (PMS) ஒன் லைன் பிரயோகம் (Online application), 2018 ஆம் ஆண்டில், இறுதி அபிவிருத்திக் கட்டத்தில் மேற்கொள்ளப்படும் சில பரிசோதனைகளுக்கு உள்ளானதுடன் 2018 ஆம் ஆண்டில் மனித வளங்கள் பிரிவின் நடவடிக்கைகளுக்காக உதவி வழங்கும் ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவ முறைமை (CMS) மென்பொருளின் பணியானது ஆரம்பிக்கப்பட்டதுடன் அது நடைமுறையில் செயற்பாட்டில் இருந்து வருகிறது.

## பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

2018 ஆம் ஆண்டினுள் வேறாக்கப்பட்ட / பெறப்பட்ட ரூபா.மில்லியன் 1,803 தொகைப் பணமானது, பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவியாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டதுடன் அதில் ரூபா மில்லியன் 1,268 தொகையானது மகாபொல புலமைப்பரிசில் எனவும் ரூபா மில்லியன் 535 தொகையானது மாணவர் நிதியுதவித் திட்டத்தின் கீழும் வழங்கப்பட்டது.

சொல்லப்பட்ட காரணங்களுக்கு அப்பால் 30 மாணவர்களுக்கு மிட்சுபிஷி கூட்டுத்தாபனத்தின் சர்வதேச புலமைப்பரிசில் வழங்கப்பட்டதுடன் மேலும் 03 மாணவர்களுக்கு பொலிஸ் சி.டபிள்யு.சி நலன்புரித் திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## முகாமைத்துவ தகவல் முறைமை (MIS) மற்றும் உதவி

2018 ஆம் ஆண்டில், 2017 இலங்கை பல்கலைக்கழகப் புள்ளிவிபரவியல், 2017 கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் இளமாணிப் பட்டதாரியொருவரக்குரிய மீண்டெழும் அலகுச் செலவினப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் உயர்கல்வி நிறுவகங்களின் உடன்படிக்கை மீறியோர் தொடர்பில் ஆளணியினரிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்குரிய முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவின் மூலம் முக்கியமான கூற்றுக்கள் / மூன்று அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

மீளாய்வாண்டினுள்இ தசிய முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் இலாபம் காணப்படுகின்ற மூன்று கருத்திட்டங்களை பூரணப்படுத்துவதன் மூலம் முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலம் தேசிய விஞ்ஞான நிலையம் மற்றும் சுகாதார அமைச்சிற்கு வழங்கப்படும் ஆதரவானது நீடிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்காக மத்திய மயப்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமையொன்றின் தேவையினைப் பகுப்பாய்வு செய்வது எவ்வாறு என்பது தொடர்பில் கொரியன் அனுபவங்களின் மூலம் கற்கும் நோக்கத்துடன், 2018 ஆம் ஆண்டினுள் முகாமைத்துவ தகவல் முறைமைப் பிரிவானது, கொரியன் கல்வி அபிவிருத்தி நிறுவகம் (KEDI) உடன் தொடர்பொன்றினைப் பேணத் தொடங்கியது.

## சட்ட விவகாரங்கள்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் 13 கட்டளைகள் மற்றும் 03 கட்டளைச் சட்டங்கள் ஆகியவற்றை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. ஆணைக்குழுவிற்கு எதிராக வேறுபட்ட தரப்பினர்களால் சட்ட மன்ற நீதிமன்றம் மற்றுழ் நியாயாதிக்க சபைகளில் தொகுக்கப்பட்ட 96 வழக்குகளை 2018 ஆம் ஆண்டில் சட்டப்பிரிவினால் கையாளப்பட்டது. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டுச் சபையில் (USAB) தாக்கல் செய்யப்பட்டிருந்த 31 வழக்குகள் இதற்குள் உள்ளடங்கும்.ஆண்டினுள், சட்டப்பிரிவினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினுள் மற்றும் அதன் வெளியில் வேறு செயற்பாடுகளுக்காக உதவி மற்றுழ் ஒத்தாசையானது வழங்கப்பட்டது.

## தர உறுதிப்படுத்தல் மன்ற நடவடிக்கைகள் (QAC)

ஆணைக்குழுத் தீர்மானத்திற்கு ஏற்ப, அரச பல்கலைக்கழகங்களில் கல்வித்தரங்களை நடத்திச் செல்வதற்குரிய பொறுப்புடன் 2005 இல் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரஉறுதிப்படுத்தல் மற்றும் அங்கீகாரமளித்தல் மன்றம் (QAAC), 2018 ஏப்ரில் மாதத்தில் தர உறுதிப்படுத்தல் மன்றம் (QAC) ஆக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் தர உறுதிப்படுத்தல் மன்றமானது தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பின்வரும் செயற்பாடுகளை மேற்கொண்டது;

- உள்ளகத் தர உறுதிப்படுத்தல் அலகுகளில் (IQAU) காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளைப் பெறுதல் மற்றும் இலக்குகளை எய்தப் பெறுவதனை உறுதிப்படுத்துவதற்காக செயலாற்றல் புள்ளியறிக்கையினை கண்காணித்தல்.
- அரச பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை படமாக்கல் செய்யும் நோக்கத்துடன் இலங்கை தகைமை மட்ட நியமம் (SLQF) படமாக்கல் உபகரணத்தினை முன்னேற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சான்றிதழ்இ டிப்ளோமா, மற்றும் உயர் டிப்ளோமாக் கற்கைநெறி உட்பட அரச பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் SLQF 05 ஆவது மட்டத்திற்கு கீழுள்ள நிகழ்ச்சிகள் குறித்த விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதல்.
- மீளாய்வு நடவடிக்கைகளுக்குரிய Benchmarks இனை அபிவிருத்தி செய்யும் விடய உள்ளடக்கம் மற்றும் நோக்கம் ஆகியவற்றை இனங்காண்பதற்காக ஒரு உப குழுவொன்றினை ஸ்தாபித்தல் மற்றும் பாட Benchmarks புள்ளிகளுக்காக பொது மாதிரியொன்றினை அபிவிருத்தி செய்தல்.
- 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற நிறுவன மீளாய்வு 04 இனுள் 03 இனுடைய அறிக்கைகளை பூரணப்படுத்துதல் மற்றும் இணையதளத்தில் பதிவு செய்தல் மற்றும் இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் 2018 ஆம் திட்டமிடப்பட்ட நிறுவன மீளாய்வுடன் முன்னே சென்று, 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் 04 இற்காக திட்டமிடப்பட்டிருக்கும் நிறுவன மீளாய்விற்குரிய ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- 2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு (PR) 41 அறிக்கைகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் இணையதளத்தில் பிரசுரித்தல், வியாபாரம் மற்றும் நிதி, முகாமைத்துவம், வணிகம், கல்வி, நீதி மற்றும் அரங்கேற்றற் கலைகள் பீடங்களில் 2018 ஆம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகள் 58 இனைத் தொடர்ந்து எதிர்காலத்திலும் செய்தல் மற்றும் 2019 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டிருக்கும் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் 2020 ஆம் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு இடம்பெற வேண்டிய பீடத்தினைப் பரிந்துரை செய்தல்.

- புதிய பீடங்கள் மற்றும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கற்கைசார் பிரிவின் மூலம் பயன்படுத்தப்படும் விண்ணப்பப் படிவ மாதிரியினை மீள மீள்கட்டமைப்பதற்குரிய திருத்தத்தினை முன்மொழிவு செய்தல்.
- அங்கீகாரத்திற்காக கிடைக்கப்பெற்ற 69 விடயங்களுக்காக அங்கீகாரக் குழுவின் ஊடாக பரிந்துரைகளை முன்வைத்தல்.
- பட்ட நிகழ்ச்சித்திட்ட முன்மொழிவுகள் 119 மற்றும் புதிய பீடங்கள்/நிறுவக முன்மொழிவுகள் 02 இனை மதிப்பீடு செய்தல்.
- இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் (OUSL) நிகழ்ச்சித்திட்ட மீளாய்வு மற்றும் நிறுவக மீளாய்விற்காக பதிப்புச் செய்யப்படட கையேடுகளை உருவாக்குதல்.
- தர உறுதிப்படுத்தல் செயற்பாடுகளுக்காக தூதரக ஆளணியினராக விஷேட திறமையுள்ள மாணவர்களின் பங்கேற்பினைப் பெற்றுக் கொள்வதற்காக அம் மாணவர்களை இனங்காண்பதற்கு வழிகாட்டுதல் ஆவணத்தினைப் பூர்த்தி செய்தல்.
- "AHEAD" நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டிற்குரிய செயற்பாடுகளை முன்மொழிவு செய்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தினை கண்காணித்தல்.
- பல்கலைக்கழகங்கள் மூலம் கல்விசார் நம்பகத்தன்மையினை வளர்ப்பதற்கு உபகரணமொன்றை உருவாக்குவதற்காக உள்ளகச் சுற்றறிக்கையினை உருவாக்குதல் மற்றும் நம்பகத்தன்மைப் படிவத்தினை தயார்படுத்துவதற்காக அரச பல்கலைக்கழகங்கள் 12 இலிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளுதல்.

## 2019 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள சர்வதேச மாநாடுகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நடைபெறவிருக்கின்ற கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் 02 சர்வதேச மாநாடுகளும் 2019 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ளது.

(1) INQAAHE (உயர் கல்வியில் தர உறுதிப்பாட்டுக்கான முகவர்களின் சர்வதேச வலைப்பின்னல்) மாநாடு 2019இ மார்ச் மாதம் 25 அந் திகதி தொடக்கம் 28 ஆந் திகதி வரை "பூகோளமயப்படுத்தப்பட்ட உலகத்தில் தர உறுதிப்படுத்தலை மேற்கொள்ளல், தகைமை மற்றும் அங்கீகாரமளித்தலில் நம்பிக்கையினை ஏற்படுத்தல்" ஆகிய பிரதான மாநாட்டுத் தொனிப்பொருள்களில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.இம் மாநாட்டினை ஒழுங்குபடுத்துதல் மற்றும் திட்டமிடுவதற்காக, 2018 ஆம் வருடத்தில் மொரிசஸில் இடம்பெற்ற INQAAHE 11 ஆவது ஈராண்டு மாநாட்டுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் சிலர் கலந்து கொண்டனர். INQAAHE செயலகக் காரியாலயம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மத்தியில் உடன்படிக்கையொன்று 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கைச்சாத்திடப்பட்டது. INQAAHE செயலகக் காரியாலயத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல் அடிப்படையில், 2019 ஆம் ஆண்டில் இடம்பெறுவதற்கு குறிப்பிட்ட மாநாட்டுக்கு ஏற்ப, 2018 ஆம் ஆண்டினுள் மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள செய்றபாடுகள் இனங்காணப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பிரதேச ஒழுங்குபடுத்தல் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் அதன் வழிகாட்டுதலின் கீழ், வெற்றிகரமான மாநாடொன்றினை நடத்துவதற்காக செயற்பாடுகளைத் திட்டமிடும் போது மற்றும் ஒழுங்குபடுத்தும் போது கருத்திற் கொள்ளப்பட வேண்டிய உதவி ஒத்தாசையானது பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

(2) 2018 ஆம் அண்டில் இந்தியாவில், நாக்பூரில் இடம்பெற்ற ஆசிய பசுபிக் தர வலைப்பின்னல் மாநாட்டுக்கு கலந்து கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் கையொப்பமிடப்பட்ட ஆசிய பசுபிக் தர வலைப்பின்னல் மாநாட்டின் 2019 உடன்படிக்கைக்க இணங்க, ஆசிய பசுபிக் தர வலைப்பின்னலின் கல்வி மாநாடு (APQN AAC) மற்றும் வருடாந்த குழுக் கூட்டம்-2019இ 2019 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 28 ஆந் திகதி முதல் 31 ஆந் திகதி வரை நடைபெறவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட பிரதேச ஒழுங்குபடுத்தல் குழுவின் கீழ் இம் மாநாட்டினை திட்டமிடும் பொழுது மற்றும் ஒழுங்குபடுத்தும் போது 2018 ஆம் ஆண்டில் நிலையான முன்னேற்றத்தினைப் பெற்றுள்ளது. 2019- ஆசிய பசுபிக் தர வலைப்பின்னலுக்காக முன்வைக்கப்பட்டுள்ள ஆவணங்களை மதிப்பீடு செய்வதற்காக குழுவின் தீர்மானமெடுக்கும் பொறுப்பு பல்கலைக்கழக மனியங்கள் ஆணைக்குழுவின் தர பாதுகாப்பு கவுன்சிலிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம் (GEE), பாலியல் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் (SGBV) மற்றும் பகிடிவதைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பக்க உட்பட்ட பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களில் உள்ள சகல உறுப்பினர்களுக்கும் தகுந்த, பால் நிலை சமத்துவத்துடன் பணியாற்றுகின்ற மற்றும் கற்கை சூழலொன்றை உருவாக்குவது, நிறுவகத் திறமையானது இருக்கின்றது என்பதனை உறுதி செய்வதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம் தொடர்பான நிலையம் (CGEE) மூலமாக விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் முக்கிய செயற்பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டன. அவை கீழே காட்டப்பட்டுள்ளன;

- பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையுடன் தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைப்பதற்கான முறைப்பாட்டு வாயில்இ பகிடிவதை தொடர்பில் முறைப்பாடுகளை முன்வைக்க முடியுமான முறைப்பாட்டு வாயில் (www.ugc.ac.lk/rag) மற்றும் 24/7 அழைப்பு நிலையம் மற்றும் பகிடிவதை, பாலியல் மற்றும் பால்நிலை வன்முறையுடன் தொடர்புடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரவுத் தளம் உட்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மன உளைச்சல்களை நீக்கும் பொறிமுறை இயந்திரமொன்றினை உருவாக்குதல் மற்றும் அதனை நடத்திச் செல்லுதல்.2018 ஆம் ஆண்டு காலப்பகுதியினுள் 250 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருப்பதுடன் அது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆளணியினருக்கு அவசர நிலைமைகளின் போது உதவியினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக, 2018 ஜுன் மாதத்தில் அவசரப் பாதுகாப்பு கையடக்க பிரயோகம் ஒன்றினை ஆரம்பித்தல் மற்றும் 2018 ஆகஸ்ட் தொடக்கம் டிசம்பர் காலப்பகுதியில் அதனை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- அச்சு / இலத்திரனியல் ஊடகத்தினைப் பயன்படுத்தி பகிடிவதை மற்றும் பால்நிலை, பாலியல் சமத்துவத்துடன் தொடர்பான வன்முறை தொடர்பில் பல்கலைக்கழக முறைமையினுள் விழிப்புணர்வூட்டுதல் அதனைப் பகிரங்கப்படுத்துதல்.

- பல்கலைக்கழகத்தினுள் பகிடிவதைக் கொடுமையினைத் தடுத்தல் மற்றும் இல்லாதொழித்தலுக்கான தெளிவான நோக்கத்துடன் 2017 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட நீதிபதித் திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள்

உள்ளடங்கலான பல்துறை சார் அதிகாரிகளின் முயற்சிகள் மற்றும் அவர்களின் பங்கேற்பினை தொடர்ந்து நிலைபெறச் செய்தல்.

- சிரேஷ்ட கல்விசார் ஊழிய அங்கத்தவர்கள் தலைமை வகிக்கும் நிலையங்கள், அலகுகள், குழுக்கள் ஆகிய விஷேடமான பால்நிலை தொடர்பிலான கேந்திர நிலையம் ஒன்றினை பல்கலைக்கழக முறைமையினுள் ஸ்தாபித்தல்
- விழிப்புணர்வூட்டும் மற்றும் உணர்வுபூர்வமான நிகழ்ச்சிகள், பயிற்சி செயலமர்வுகள், பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள், புதிய தலைமைத்துவம் மற்றும் பாலியல் சமத்துவ மற்றும் சமநிலை தொடர்பான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஆய்வு கற்கைகள் மூலம் பாலியல் சமத்துவம் தொடர்பில் வலுப்படுத்தலை உறுதிப்படுத்தல்.
- பால் நிலைப் பங்கு / சமத்துவம், பகிடிவதை மற்றுும் பாலியல் மற்றும் பால்நிலை தொடர்பான வன்முறை தொடர்பில் கொள்கை அபிவிருத்தி செய்வதற்கு பல்கலைக்கழகங்களை உற்சாகப்படுத்துதல் மற்றும் பங்களிப்புச் செய்தல்.

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வசதி வாய்ப்புக்களை மேம்படுத்துதல்

மேம்படுத்தப்பட்ட தொடர்பாடல் மற்றும் அழைப்பு சேவைகளை வழங்குவதற்காக வேண்டி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2018 ஆம் ஆண்டில் எனலொக் தொலைபசி முறைமையானத டிஜிட்டல் தொலைபேசி முறைமை ஒன்றாக மாற்றீடு செய்யப்பட்டது. மேலும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு வருகை தரும் மக்களின் வசதியினை உறுதிப்படுத்துவதற்காக அவர்கள் தங்கி நிற்பதற்குரிய இடமொன்று மற்றும் மக்கள் தொடர்புக் காரியாலயம் (PRO) இற்காக புதிய கட்டிடமொன்றை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகள் 2018 இல் ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கு மேலாக, விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் டிஜிட்டல் வாசிகசாலைச் சம்மேளனமொன்று ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஒட்டு மொத்த பல்கலைக்கழக முறைமையின் சகல தரப்பினர்களதும் பிரயோசனத்திற்காக கட்டுரைத் திருட்டுக்கு எதிரான மென்பொருள் ஒன்று Anti-Plagiarism software) விலைக்கு வாங்கப்பட்டது.

# அட்டவணைகளின் பட்டியல்


| அட்டவணை | | பக்க எண் |
|---|---|---|
| அட்டவணை 4.1 | சாதாரண மற்றும் விஷேட ஒதுக்கீடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள் | 10 |
| அட்டவணை 4.2 | 2017 ∴2018 கல்வியாண்டு: கற்கை நடவடிக்கைகள் தவிர்த்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் திறமை காட்டிய மாணவர்கள் | 14 |
| அட்டவணை 4.3 | 2017 ∴2018 கல்வியாண்டு : இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான வெளிநாட்டுத் தகைமையுள்ள மாணவர் அனுமதி | 15 |
| அட்டவணை 4.4 | 2017 ∴2018 கல்வியாண்டு: மேன்முறையீடுகள் ∴முறைப்பாடுகள் மூலமான அனுமதிகளின் எண்ணிக்கை | 16 |
| அட்டவணை 5.1 | நிலையான குழுக்கள் மற்றும் 2018 ஆம் இடம் பெற்ற நிலையான குழுச் சந்திப்புக்களின் எண்ணிக்கை | 18 |
| அட்டவணை 5.2 | 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட பீடங்கள் | 19 |
| அட்டவணை 5.3 | 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களங்கள | 19 |
| அட்டவணை 5.4 | 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள | 20 |
| அட்டவணை 5.5 | 2018 இல் அங்கீகரிக்கப்ட்ட வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | 21 |
| அட்டவணை 5.6 | 2018 இல் அங்கீகரிக்கப்ட்ட பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள | 21 |
| அட்டவணை 5.7 | 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களப் பெயர் மாற்றங்கள் | 21 |
| அட்டவணை 5.8 | 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர் மாற்றங்கள் | 22 |
| அட்டவணை 5.9 | 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய ∴ வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரக் கடிதங்கள் | 27 |
| அட்டவணை 6.1 | இருப்பில் உள்ள மொத்த நிதியம் : 2017 ரு 2018 | 28 |
| அட்டவணை 6.2 | ஒதுக்கீட்டுச் சுருக்கம் ∴ நிதிப் பயன்பாடு : 2017 ரு 2018 | 30 |
| அட்டவணை 6.3 | (2013 – 2018) வரையிலான அரசாங்க நிதி ஒதுக்கீடுஇ செலவினங்கள் மற்றும் மாணவர் நிதித் தொகை | 31 |
| அட்டவணை 6.4 | (2016 – 2018) வரையிலான மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களின் ஒதுக்கீடு | 31 |
| அட்டவணை 7.1 | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நடைமுறையில் உள்ள பதவியணியினர் | 33 |
| அட்டவணை 8.1 | 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் ∴ உயர்கல்வி நிறுவகங்கள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணியினர் | 35 |
| அட்டவணை 8.2 | (2014 – 2018) வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள் ∴ உயர்கல்வி நிறுவகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்கள் | 36 |
| அட்டவணை 8.3 | 2018 ஆம் ஆண்டின் நிர்வாகத் தரங்களுக்கான நியமனங்கள் | 37 |
| அட்டவணை 8.4 | 2018 ஆம் ஆண்டின் நிர்வாகத் தரங்களுக்கான பதவி உயர்வுகள் | 37 |
| அட்டவணை 8.5 | 2018 ஆம் ஆண்டில் நிர்வாகத் தரமல்லாத வேறு தரங்களில் உள்ள பதவிகளுக்கான நியமனங்கள் | 37 |
| அட்டவணை 8.6 | 2018 ஆம் ஆண்டில் இதர ஆளணித் தரப் பதவிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பதவியுயர்வுகள் | 37 |
| அட்டவணை 10.1 | 2018 வரையிலான காலப்பகுதியில் முன்மொழிவுக் கருத்திட்டங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னேற்றம் | 46 |
| அட்டவணை 12.1 | 2018 ஆண்டு பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் மகாபொல மற்றும் அறக்கொடை நிதியக் கொடுப்பனவு | 49 |
| அட்டவணை 21.1 | 2018 இல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் | 64 |
| அட்டவணை 21.2 | 2018 இல் வெளியிடப்பட்ட ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள் | 66 |

## 1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முகாமைத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒட்டு மொத்த முகாமைத்துவத்திற்கும் பொறுப்பான ஆணைக்குழுவானது 2018 ஆம் ஆண்டில் பின்வரும் உள்ளடக்கத்தைக் கொண்டது;

| | |
|---|---|
| தலைவர் | **பேராசிரியர். மொஹான் .த சில்வா**<br>எம்.எஸ்,எப்.ஆர்.சி.எஸ். எடின் எப்.சி.எஸ்.எஸ்.எல்<br>அறுவைச்சிகிச்சை சிரேஷ்ட பேராசிரியர் மற்றும் தலைவர்-<br>அறுவைச் சிகிச்சை மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்.<br>வைத்திய ஆலோசகர் - கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை) |
| உப-தலைவர் | **பேராசிரியர். பீ.எஸ்.எம் குணரத்ன**<br>பீ.எஸ்.சீ (பஸ்.எட்),(எஸ்,ஜே.பீ) எம்.பீ.ஏ(கொழும்பு)எம்.எஸ்.சி. மற்றும் பி.எச்.டி (டிசுகுபா- ஜப்பான் பொது நலவாய உறுப்பினர் (யோகோஹோமா- ஜப்பான்)<br>மான்செஸ்டர் (ஐ.இ), ஜே.எஸ்.பி.எஸ் உறுப்பினர் (யொகொஹோமா-ஜப்பான்)<br>நிதியியல் பேராசிரியர்,கொழும்பு பல்கலைக்கழகம் |
| அங்கத்தவர்கள் | **பேராசிரியர் மலிக் ரணசிங்க**<br>பி.எஸ்.சி(பொறியியல்), (சிறப்பு), எம்.ஏ.எஸ்.சி(யு.பி.சி)<br>பி.எச்.டி(யு.பி.சி),சி.இங்.இன்ட்பி.இ.எப்.ஐ.இ(இலங்கை),<br>எப்.என்.ஏ.எஸ்(இலங்கை) |
| | **பேராசிரியர். கே.குமாரவடிவேல**<br>பி.எஸ்.சி.(சிறப்பு) பி.எச்.டி (பிரிஸ்டல்) |
| | **பேராசிரியர் ஹேமாந்த சேனாநயக்க,**<br>எம்.பி.பி.எஸ்,எம்.எஸ்(மகப்பேறுமற்றும் பெண்நோயியல்),எப்.ஆர்.சி.ஓ.ஜி.,<br>எப்.எஸ்.எல்.ஓ.ஜி எப்.ஆர்.சி எஸ்.ஈ.டி |
| | **டாக்டர் றுவைஸ் ஹனிபா**<br>எம்.பி.பி.எஸ், டி.எப்.எம், பிக் டிப்ளோமா, எம்.எஸ்.சி. எம்.டி, எப்.சி.ஜி.பி,<br>எம்.ஆர்.சி.ஜி.பி |
| | **டாக்டர். விக்ரம வீரசூரிய (08.11.2018 முதல் 04.12.2018 இல் இறக்கும் வரை)** எல்.எல்.பி.(இலங்கை), பி.எச்.டி(லண்டன்), சட்டத்தரணி |
| | **வணக்கத்திக்குரிய பேராசிரியர் மஹிந்த சங்கரகித்த தேரர்** (09.11.2018)<br>கலாநிதிப் பட்டம். முதுமாணிப்பட்டம் (தில்லி) இ பீ.ஏ (சிறப்பு) (இலங்கை) |
| திறைசேறியின் பிரதிநிதிகள | **பேராசிரியர். பீ.கே. ஹரிச்சந்திரா (24.04.2016 முதல் 31.10.2018 வரை)**<br>பொருளியல் பேராசிரியர் மான்செஸ்டர் பல்கலைக்கழகம்,ஐ.இ,<br>எம்.எஸ்.சி.-பொருளியல், மான்செஸ்டர் பல்கலைக்கழகம்,ஐ.இ, எம்.பி.ஏ.<br>கொழும்பு பல்கலைக்கழகம், பி.கொம்.களனிப்பல்கலைக்கழகம் |
| | **கலாநிதி. கபில சேனாநாயக்க** (30.11.2018 முதல் )<br>பொருளியல் கலாநிதிப் பட்டம் (UNSW, அவுஸ்திரெலியா),<br>பொதுக்கொள்கையில் முதுதத்தவமாணி(ஹிட்டோஷ்சுபாசி பல்கலைக்கழகம், ஜப்பான்), பட்டப்பின் டிப்ளோமா(முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்), பீ.கொம் (சிறப்பு), களனிப் பல்கலைலைக்கழகம் |
| செயலாளர் | **குலாநிதி. ப்ரியந்த பிரேமகுமார**<br>பி.எஸ்.சி (ஹொன்ஸ்), எம்.பி.எ (கொழும்பு பல்கலைக்கழகம்),<br>கலாநிதிப் பட்டம் (வுஹன) |

## 2. பல்கலைக்கழக முகாமைத்துவம்

### 2.1 கொழும்பு பல்கலைக்கழகம்

**வேந்தர்**
அதிவணக்கத்துக்குரிய அருள்திரு பேராசிரியர் ஒஸ்வால்ட் கோமிஸ், எமிரடிஸ் ஆக்பிஷொப்

**உப வேந்தர்**
பேராசிரியர். லக்ஸ்மன் திசாநயக்க (2018 ஆகஸ்ட் மாதம் 06 ஆந் திகதி மீள நியமிக்கப்பட்டார்)

**பிரதி உப வேந்தர்**
வெற்றிடம்

**பதிவாளர்**
திரு.கெ.எ.எஸ். எட்வர்ட்

### 2.2 பேராதனை பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர். கெ.எம்.த சில்வா

**உப வேந்தர்**
பேராசிரியர். யு.பி திசாநாயக்க
பேராசிரியர். யு.பி திசாநாயக்க (2018 ஆகஸ்ட் மாதம் 01 ஆந் திகதி மீள நியமிக்கப்பட்டார்)

**பிரதி உப வேந்தர்**
பேராசிரியர். எஸ்.எச்.பி பராக்கரம கருணாரத்ன

**பதிவாளர்**
திரு.யு.டி தொடன்வல (2018 ஏப்ரில் 01 வரை)
திரு.கெ.எ.பி தமுனுபொல (2018 ஏப்ரில் 24 வரை)
திரு.சமன் ராஜபக்ஷ (2018 ஜூன் 01 வரை)

### 2.3 ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய. பேராசிரியர். பெலன்வில விமலரத்ன தேரர் (2018 பெப்ரவரி 03 வரை)

**உப வேந்தர்**
பேராசிரியர் சம்பத் அமரதுங்க

**பதிவாளர்**
திரு.ஜி. பிறிட்டோ

### 2.4 களனி பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய வெலமிடியாவெ குசலதம்ம தேரர்

**உப வேந்தர்**
பேராசிரியர். டி.எம். சேமசிங்ஹ

**பிரதி உப வேந்தர்**
பேராசிரியர். எல் செனவிரத்ன

**பதிவாளர்**
திரு.டபிள்யு.எம் கருணாரத்ன

## 2.5 மொறட்டுவ பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர். கெ.கெ.வய்.டபிள்யு பெரேரா

**உப வேந்தர்**
பேராசிரியர் கெ.கெ.சி.கெ பெரேரா

**பிரதி உப வேந்தர்**
பேராசிரியர் ஆர். எ அத்தலகே (2018 மார்ச் 07 வரை)
பேராசிரியர் பி.கெ.எஸ் மகானாம (2018 மார்ச் 08 வரை)

**பதிவாளர்**
திரு. எம்.எ.எல். ஜெளபர் சாதிக் (2018 நவம்பர் 21 வரை)
திருமதி. விசாகா குலசேகர (2018 நவம்பர் 22 வரை)

## 2.6 யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**வேந்தர்**
பேராசிரியர் எஸ் பத்மநாதன்

**உப வேந்தர்**
பேராசிரியர். ஆர் விக்னேஷ்வரன்

**பதிவாளர்**
திரு.வி காண்டீபன்

## 2.7 உறுகுணை பல்கலைக்கழகம்

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய பல்லதர சுமனஜோதி தேரர்

**உப வேந்தர்**
பேராசிரியர். காமினி சேனானாயக்க

**பிரதி உப வேந்தர்**
கலாநிதி. எ.எம்.என் அழகியவண்ண

**பதிவாளர்**
செல்வி. பி.எஸ் கலுகம

## 2.8 கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

**வேந்தர்**
கலாநிதி.வி. விவேகானந்தராசா

**உப வேந்தர்**
கலாநிதி. டி. ஜயசிங்கம்

**பிரதி உப வேந்தர்**

கலாநிதி. கெ.இ கருணாகரன்

**பதிவாளர்**
திரு.எ பய்ரதன்

**2.9 இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர். அச்சி எம். இஸ்ஹாக்

**உப வேந்தர்**
பேராசிரியர் எம்.எம்.எம் நாஜிம் (2018 ஜுன் 17 வரை)
பேரசிரியர் எம்.எம்.எம் நாஜிம் (2018 ஆகஸ்ட் 09 மீள நியமிக்கப்பட்டார்.)

தகுதி வாய்ந்த அதிகாரி
பேராசிரியர். உமா குமாரசுவாமி (2018 ஜுன் 18 மதல் 2018 ஆகஸ்ட் 09 வரை)

**பதிவாளர்**
திரு. எச் அப்துல் சத்தார்

**2.10 இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
கலாநிதி. லீல் குணசேகர

**உப வேந்தர்**
பேராசிரியர். ரஞ்சித் விஜேயவர்தன

**பதிவாளர்**
திரு.எம்.எம்.ஜி.பி அபயசிங்ஹ

**2.11 சபரகமுவ பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய பேராசிரியர் கம்புருகமவெ வஜிர தேரர்

**உப வேந்தர்**
பேராசிரியர்.எம் சுனில் சாந்த

**பதிவாளர்**
திரு.வி.டி கிதிசிறி

**2.12 இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர். கெ.டி.த சில்வா

**உப வேந்தர்**
பேராசிரியர். இ.எம்.பி ஏக்கநாயக்க

**பதிவாளர்**
திரு.டபிள்யு.எ சித்ராநந்த

**2.13 இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
வணக்கத்திற்குரிய பேனகமுவ ஸ்ரீ தம்மாதின்ன தேரர்

**உப வேந்தர்**
கலாநிதி. ஜெ.எல் ரத்னசேகர

**பதிவாளர்**
திரு.எம்.எப்.எச் கரீம்

**2.14 இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர். கொல்வின் குணரத்ன

**உப வேந்தர்**
பேராசிரியர் எஸ். எ ஆரியதுரை

**பிரதி உப வேந்தர்**

பேராசிரியர்.கமல் பி.குணஹேரத்

**பதிவாளர்**
செல்வி.டபிள்யு எல்.வி ஜயசேன

**2.15 கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகம்**

**வேந்தர்**
பேராசிரியர் சனத் நன்தசிறி

**உப வேந்தர்**
பேராசிரியர்.சரத் சர்த்ரஜீவ

**பதிவாளர்**
செல்வி ஆர்.டி.எம் ரணதுங்க (2018 ஜனவரி 31 வரை)
திருபி.எம் தயாவன்ச (2018 பெப்ரவரி 01 வரை )

## 3. நிறுவகங்கள்

### 3.1 விவசாயப் பட்டப் பின் கற்கை நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர். ஸி.எம்.பி.தெமடவெவ

### 3.2 தொல் பொருளியல் பட்டப்பின் கற்கை நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர். பி குணவர்தன (தகுதி வாய்ந்த அதிகாரி 2018 ஜுன் 30 வரை)
பேராசிரியர். டி.அர் பிரேமதிலக

### 3.3 முகாமைத்தவப் பட்டப்பின் கற்கை நிறுவகம

**பணிப்பாளர்**
பேராசிரயர் அஜந்த தர்மசிறி

### 3.4 மருத்துவப் பட்டப்பின் கற்கை நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர். எச். ஜனக த சில்வா

### 3.5 பாளி மற்றும் பௌத்தக் கற்கைகள் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்

**பணிப்பாளர்**
வணக்கத்திற்குரிய பேராசிரியர் கொடபிடிய ராகுல தேரர்

### 3.6 விஞ்ஞானப் பட்டப்பின் கற்கை நிறுவகம்

**பணிப்பாளர்**
பேராசிரியர். எச்.எம்.டி.ஜி.எ பிடவல (2018 ஜனவரி 02 முதல்)

### 3.7 ஆங்கிலப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி.எச் ரப்புக்கவெல்ல

### 3.8 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பட்டப்பின் கற்கை நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி. ஆனந்த ஜயவிக்ரம

### 3.9 சுதேச மருத்துவ நிறுவகம்

**பணிப்பாளர்**
கலாநிதி. திருமதி. எஸ்.டி ஹப்புஆரச்சி (2018 பெப்ரவரி 09 வரை)
பேராசிரியர் பி.எ பரணகம (2018 பெப்ரவரி 10 வரை)

### 3.10 மனித வள மேம்பாட்டு நிறுவனம்

**பணிப்பாளர்**
பேராசிரியர். ஜெ.எ.எஸ்.கெ. ஜயகொடி (2018 ஆகஸ்ட் 25 வரை)

**3.11 கொழும்புப் பல்கலைக்கழக கணினிக் கற்கைகள் நிறுவகம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர். கெ.பி ஹேவாகமகே

**3.12 கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயர்வேத நிறுவகம**

**பணிப்பாளர்**
கலாநிதி.எஸ்.டி பிலபிடிய (2018 ஒக்தோபர் 18 வரை)
பதிவாளர், களனிய பல்கலைக்கழகம் (2018 ஒக்தோபர் 19 வரை)

**3.13 நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய நிறுவகம்**

**பணிப்பாளர்**
திரு.பிரசன்ன ரணவீர

**3.14 மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம்**

**பணிப்பாளர்**
கலாநிதி.திருமதி. ப்ரியங்கனி சமரசேகர

**3.15 உயிர் இரசாயன மூலக்கூற்று உயிரியல் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம்**

**பணிப்பாளர்**
கலாநிதி. சிரோமா ஹந்துனெத்தி

**3.16 மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர் பி.எஸ்.எம் குணரத்ன (2018 மே 31 வரை)
பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி (2018 ஜுன் 01 வரை)

**3.17 சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகம்**

**பணிப்பாளர்**
கலாநிதி.எஸ் ஜெயசங்கர்

**3.18 கொழும்புப் பல்கலைக்கழக விவசாயத் தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் நிறுவகம்**

**பணிப்பாளர்**
பேராசிரியர் எஸ் சுபசிங்ஹ

## 4. பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்

2017 / 2018 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக் கைந்நூலினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிடப்பட்டது. அதனுடைய வழிகாட்டுதலை அடிப்படையாக வைத்துஇ 2017 / 2018 கல்வியாண்டுக்காக பல்கலைக்கழக அனுமதிக்கு மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2017 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரிகளிடமிருந்து 2018 ஜனவரி மாதம் விண்ணப்பங்களைக் கோரியது.அதனடிப்படையில், ஒல்வொரு இளமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்குமான சாதாரண அனுமதி இறுதிசெய்யப்பட்டு வெட்டும் புள்ளிகள் 2018 ஜுலை மாதம் வெளியிடப்பட்டன. மேலும், விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் விஷேட ஒதுக்கீட்டின் கீன மாணவர்கள் தெரிவும் இறுதிசெய்யப்பட்டது.

2017 ஆகஸ்ட் மாதம் இடம்பெற்ற க.பொத உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றினை அடியொட்டிஇ 2017 / 2018 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தற்குத் தகுதிபெற்ற விண்ணப்பதாரிகள் மொத்த எண்ணிக்கை 163,160 ஆக இருந்தது. 2017 / 2018 கல்வியாண்டில் சாதாரண ஒதுக்கீட்டின் கீழ் முன்மொழிவு செய்யப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை 30,513 ஆக இருந்ததுடன் அதில் 30,141 மாணவர்களே பல்கலைக்கழகங்ளுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இதற்கு மேலதிகமாக, 2017 / 2018 கல்வியாண்டிற்காக அரச பல்கலைக்கழங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த மாணவர்கள் எண்ணிக்கை 30,550 ஆக இருந்த அதே வேளை விஷேட ஒதுக்கீட்டின் கீழ் வித்தியாசமான வகைப்பாடுகளின் கீழ் மொத்தமாக மாணவர்கள் 409 பேர்கள் அனுமதிக்கப்பட்டனர். அட்டவணை 4.1 இல் அனுமதித் தகவல்கள் மற்றும் அதனுடன் இணைந்ததாக 2016 / 2017 கல்வியாண்டுடன் தொடர்புடைய புள்ளிவிபரங்கள் ஒப்பீட்டு நோக்கத்திற்காக சுருங்கக் கூறப்பட்டிருக்கின்றன.

### 4.1 2017/2018 கல்வியாண்டு – சாதாரண ஒதுக்கீட்டின் கீழான மாணவர் அனுமதிகள்

சாதாரண ஒதுக்கீட்டின் கீழ் 15 அரச பல்கலைக்கழகங்களுக்கும் அனுமதிக்கப்பட்ட 30,141 மாணவர்களைத் தெரிவு செய்யும் செயன்முறையில் பின்வரும் அனுமதிக் கொள்கைகள் கையளாள்ப்பட்டிருந்தன.

**4.1.1.** 2017 இல் நடைபெற்ற க.பொ.த(உ/த) பரீட்சையின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகளுக்கு அமைவாக மாணவர்கள் சராசரி- Z பள்ளிகளின் மீதான தர வரிசையின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களின் தெரிவு தீர்மானிக்கப்பட்டது.

**4.1.2.** கலைப் பாடநெறியைப் பொறுத்தவரை, (அதாவது, கலை, கலை (SP), கலை (SAB), தொடர்பாடல் கற்கைகள், சமாதானமும் முரண்பாடுகளை தீர்த்தலும், இஸ்லாமிய கற்கைகள், அரபு மொழி மற்றும் இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) அனுமதியானது நாடளவிய ரீதியாக சிறப்புப் புள்ளி அடிப்படையிலான விடய நிபந்தனையின் கீழ் தீர்மானிக்கப்படும். அதாவது கொடுக்கப்பட்ட மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையானது 1993/1994 கல்வியாண்டு அல்லது 2002/2003 கல்வியாண்டில் இதில் எத் தொகை உயர்ந்ததோ அத் தொகையை விட குறையாமல் இருக்கும்.

**4.1.3.** மேலே 4.1.2 இல் குறிப்பிட்டது தவிர, எல்லாப் பாடநெறிகளுக்குமான அனுமதி ஒரு இரட்டைப் பிரமாண முறையில் அமைந்ததாக இருக்கும். அதாவது:

- அகில இலங்கை சிறப்புத் தரம்
- மாவட்ட அடிப்படையிலான சிறப்புத் தரம்

**4.1.4** கிடைக்கக் கூடிய இடங்களில் 40% வரையான இடங்கள் அகில இலங்கை சிறப்புத் தர அடிப்படையிலான z புள்ளி வரிசை அடிப்படையில் நிரப்பப்படும்.

**4.1.5** எஞ்சியுள்ள 60% ஆன இடங்களில், ஒவ்வொரு கற்கை நெறியிலும் உள்ள 55 சதவீதமான இடங்கள் மாவட்ட அடிப்படையிலான சிறப்புத் தரத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அதாவது தரப்பட்ட மாவட்டம் ஒன்றிற்கு, அகில இலங்கை சிறப்புத் தர அடிப்படையிலான z புள்ளி வரிசை அடிப்படையில் ஏலவே ஒதக்கப்பட்டுள்ள இடங்களுக்கு மேலதிகமாக (40%), 55 சதவீதமான இடங்கள் மாவட்ட அடிப்படையிலான சிறப்புத் தரத்தின் அடிப்படையில் மேலதிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், நாட்டின் மொத்த சனத்தொகையின் வெவ்வேறு மாவட்டத்தினதும் விகிதாசாரத்திற்கு அமைவாக 25 நிர்வாக மாவட்டங்களுக்கும் 55% இடங்கள் ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் ஒதுக்கப்பட்டது.இது 16 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையின் அடிப்படையிலாகும்.

**4.1.6** ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் உள்ள 5% ஆன இடங்கள் கல்விசார் சாதகமற்ற சூழ்நிலை நிலவும் கீழ் குறிப்பிடப்பட்ட 16 மாவட்டங்களுக்கு இடையில் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையின் விகிதாசார அடிப்படையில் 16 மாவட்டங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அத்தகைய 16 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையின் அடிப்படையிலே இடங்கள் ஒதுக்கப்பட்டன. இது 16 மாவட்டங்களினதும் மொத்த சனத்தொகையில் ஒவ்வொரு மாவட்டத்தின்தும் சனத்தொகையின் அடிப்படையிலாகும்.

| | |
|---|---|
| 1.நுவரெலியா | 9. மட்டக்களப்பு |
| 2. ஹம்பாந்தோட்டை | 10. அம்பாறை |
| 3. யாழ்ப்பாணம் | 11. புத்தளம் |
| 4. கிளிநொச்சி | 12. அநுராதபுரம் |
| 5 மன்னார் | 13. பொலன்னறுவை |
| 6. முல்லைதீவு | 14. பதுளை |
| 7. வவுனியா | 15. மொனராகலை |
| 8. திருகோணமலை | 16. இரத்தினபுரி |

**4.1.7** மேலும், கலைக் கற்கைநெறிகளைப் போன்றே, எந்தவொரு மாவட்டத்தினதும் குறிப்பிட்ட கற்கை நெறி ஒன்றிற்காக ஒதுக்கப்பட்ட மாவட்ட கோட்டா (Quota) ஆனது, 1993/1994 அல்லது 2002 / 2003 கல்வியாண்டில் அதே கற்கை நெறிக்காக ஒதுக்கப்பட்டுள்ள மாவட்டக் கோட்டாவினை விட இதில் எத் தொகை உயர்ந்ததோ அத் தொகையை விடக் குறையாமல் இருக்கும்

## 4.2 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கற்கைநெறிகள்

2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக முறைமையில் உள்ள கற்கை நெறிகளின் பட்டியலுக்கு புதிய கற்கைநெறியொன்று உள்வாங்கப்பட்டதுடன் அது 2017/2018 கல்வியாண்டின் போது அமுலாக்கம் செய்யப்பட்டது.

புதிதாக உள்வாங்கப்பட்ட கற்கைநெறியின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கற்கை நெறியின் பெயர் | : | நிதியியல் பொறியியல் |
| பல்கலைக்கழகம் | : | களனிய பல்கலைக்கழகம் |
| உள்ளெடுப்பு | : | 50 |

| கற்கை நெறி | 2017/2018 கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்டோர் தொகை | 2016/2017 கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்டோர் தொகை |
|---|---|---|
| 1. மருத்துவம் | 1449 | 1290 |
| 2. பல் விஞ்ஞானம் | 77 | 78 |
| 3. விலங்கு விஞ்ஞானம் | 78 | 79 |
| 4. விவசாயம் | 625 | 599 |
| 5. உணவு விஞ்ஞானமும் ஊட்டச்சத்தும் | 108 | 108 |
| 6. உயிரியல் விஞ்ஞானம் | 1283 | 1501 |
| 7. பிரயோக விஞ்ஞானம் (உயிரியல்) | 293 | 293 |
| 8. இயந்திரவியல் | 1731 | 1681 |
| 9. இயந்திரவியல் - (EM) | 49 | 48 |
| 10. இயந்திரவியல்- (TM) | 58 | 58 |
| 11. கணிய அளவையியல் | 123 | 124 |
| 12. கணினி விஞ்ஞானம் | 446 | 427 |
| 13. பௌதீக விஞ்ஞானம் | 1880 | 2148 |
| 14. அளவீட்டு விஞ்ஞானம் | 98 | 78 |
| 15. பிரயோக விஞ்ஞானம் (பௌதீக) | 559 | 550 |
| 16. முகாமைத்துவம் | 4386 | 4200 |
| 17. தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும் | 58 | 58 |
| 18. வர்த்தகம் | 642 | 641 |
| 19. கலை | 5866 | 5850 |
| 20. கலை (sp)ஊடகம் | 78 | 78 |
| 21. கலை (SAB) | 221 | 223 |
| 22. முகாமைத்துவக் கற்கைகள் (TV)- A | 136 | 101 |
| 23. கட்டடக்கலை | 58 | 58 |
| 24. வடிவமைப்பு | 58 | 58 |
| 25. சட்டம் | 366 | 346 |
| 26. தகவல் தொழிநுட்பம் | 198 | 198 |
| 27. முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழிநுட்பம் | 98 | 98 |
| 28. பொது முகாமைத்துவம் (விஷேடம்) | 83 | 73 |
| 29. தொடர்பாடல் கற்கைகள் | 148 | 98 |
| 30. பட்டினமும் நாடு நட்டமிடலும் | 48 | 48 |
| 31. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 33 | 33 |
| 32. ஆயுர்வேத மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சை | 296 | 296 |
| 33. யூனானி மருத்துவம் மற்றும் அறுவைசிகிச்சை | 58 | 58 |
| 34. நவநாகரீக வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி | 48 | 48 |
| 35. உணவு விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 169 | 178 |
| 36. சித்த மருத்துவம் | 149 | 139 |
| 37. தாதியியல் | 342 | 377 |
| 38. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பம் | 158 | 148 |
| 39. விவசாய தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 199 | 198 |
| 40. முகாமைத்துவக் கற்கைகள் (TV)-B | 137 | 100 |
| 41. கலை (SP) / செயற்பாட்டுக் கலை | 78 | 78 |
| 42. .சுகாதார அபிவிருத்தி | 49 | 48 |
| 43. .மருந்தகவியல் | 143 | 158 |
| 44. மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் | 138 | 153 |
| 45. ஊடுகதிர்ப் படமெடுப்பு | 43 | 43 |
| 46. இயன் மருத்துவம் | 63 | 59 |
| 47. சுற்றாடல் பாதுகாப்பும் முகாமைத்துவமும் | 58 | 59 |

| | | |
|---|---|---|
| 48. வசதிகள் முகாமைத்துவம் | 48 | 48 |
| 49. போக்குவரத்து மற்றும் சேவைகள் விநியோக ஒழுங்மைப்பு முகாமைத்துவம் | 59 | 59 |
| 50. மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் இரசாயனம் | 58 | 58 |
| 51. கைத்தொழில் புள்ளி விபரவியலும் கணிதவியல் நிதியும் | 88 | 88 |
| 52. புள்ளிவிபரவியல் மற்றும் செயற்பாட்டு ஆராய்ச்சி | 48 | 68 |
| 53. கணிப்பீடும் முகாமைத்துவமும் | 48 | 48 |
| 54. கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் | 58 | 58 |
| 55. இஸ்லாமியக் கற்கைகள் | 248 | 248 |
| 56. விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 59 | 63 |
| 57. கணினி விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 58 | 58 |
| 58. தொழில் முயற்சி மற்றும் முகாமைத்துவ கற்கைகள் | 63 | 63 |
| 59. விலங்கு விஞ்ஞானம் | 64 | 58 |
| 60. சங்கீதம் | 415 | 398 |
| 61. நடனம் | 360 | 344 |
| 62. கலையும் வடிவமைப்பும் | 33 | 33 |
| 63. நாடகமும் அரங்கியலும் | 96 | 86 |
| 64. கட்புலனும் தொழிநுட்பக்கலையும் | 48 | 48 |
| 65. ஏற்றுமதி விவசாயம் | 63 | 59 |
| 66. தேயிலை தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 64 | 58 |
| 67. கைத்தொழில் தகவல் தொழிநுட்பம் | 59 | 58 |
| 68. கனிப்பொருள் வளமும் தொழிநுட்பமும் | 58 | 63 |
| 69. வியாபார தகவல் முறைமைகள் (சிறப்பு) | 48 | 48 |
| 70. முகாமைத்துவமும் தகவல் தொழிநுட்பமும்(இ.தெ.கி.ப) | 118 | 119 |
| 71. கணிப்பீடு மற்றும் தகவல் முறைமைகள் | 98 | 99 |
| 72. உடற்றொழில் கல்வி | 48 | 48 |
| 73. விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் | 103 | 93 |
| 74. பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானம் | 48 | 48 |
| 75. அறபு மொழி | 198 | 198 |
| 76. கட்புலக் கலை | 95 | 96 |
| 77. விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடியும் | 48 | 49 |
| 78. உணவு உற்பத்தி மற்றும் தொழிநுட்ப முகாமைத்துவம் | 83 | 84 |
| 79. நீர் வளங்களும் தொழிநுட்பமும் | 63 | 58 |
| 80. பனை இனத்தாவர தொழிநுட்பமும் பெறுமதி சேர்ப்பும் | 60 | 58 |
| 81. விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 63 | 63 |
| 82. தகவல் தொழிநுட்பம் மற்றும் முகாமைத்துவம் | 98 | 98 |
| 83. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவம் | 118 | 118 |
| 84. விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழிநுட்பம் | 149 | 149 |
| 85. விவசாய வர்த்தக முகாமைத்துவம் | 54 | 49 |
| 86. பசுமைத் தொழிநுட்பம் | 48 | 48 |
| 87. தகவல் முறைமைகள் | 98 | 98 |
| 88. தரைத்தோற்ற வடிவமைப்பு கட்டடக்கலை | 46 | 46 |
| 89. மொழிப்பெயர்ப்பு கற்கைகள் | 74 | 73 |
| 90. மென்பொருள் பொறியியல் | 48 | 48 |
| 91. திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி கற்கைகள் | 48 | 48 |

| | | |
|---|---|---|
| 92. செயற்றிட்ட முகாமைத்துவம் (புதிய) | 58 | 48 |
| 93. பொறியியல் தொழிநுட்பம் (புதிய) | 931 | 857 |
| 94. உயிர்முறைமைகள் தொழிநுட்பம் (புதிய) | 842 | 717 |
| 95. தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் (புதிய) | 461 | 436 |
| 96. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் (TESL) | 48 | 48 |
| 97. கடல் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் (புதிய) | 48 | 48 |
| 98. உணவு வியாபார முகாமைத்துவம் (புதிய) | 78 | 78 |
| 99. உடற்றொழில் விஞ்ஞானம்-ICT (புதிய) | 118 | 103 |
| 100.வர்த்தக விஞ்ஞானம் | 98 | 98 |
| 101. நிதியியல் பொறியியல் | 48 | - |
| **சாதாரண ஒதுக்கீட்டின் கீழ் தெரிவான மொத்த எண்ணிக்கை** | **30,141** | **29,696** |
| **பிரேரிக்கப்பட்ட மொத்தத் தொகை** | **30,513** | **29,333** |
| **<u>சாதாரண மற்றும் ஒதுக்கீட்டின் கீழ் தெரிவான மொத்த எண்ணிக்கை</u>** | | |
| (அ) கல்விசார் நடவடிக்கைளுக்கு மேலதிகமாக வேறு துறைகளில் தேசிய சர்வதேச மட்டங்களில் திறமை காட்டியுள்ள மாணவர்கள் | 179 | 170 |
| (ஆ) வெளிநாட்டுத் தகைமையுள்ள மாணவர்களுக்கான அனுமதி | 26 | 05 |
| (இ) ஆயுதப்படை பொலிஸ் சேவை மற்றும் சிறப்புப்பணிப்படையின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பணியாளர்கள் | 17 | 17 |
| (ஈ) விஷேட பாடங்களுக்கான மேலதிக உள்வாங்களின் கீழான அனுமதி | - | 573 |
| (உ)கண் பார்வையற்ற மற்றும் மாற்றுத் திறனாளிகள | 105 | 105 |
| (ஊ) ஆசிரியர்களுக்கான அனுமதி | 10 | 01 |
| (எ) முறையீடுகள் | 72 | 101 |
| சாதாரண மற்றும் விஷேட ஒதுக்கீட்டின் கீழ் தெரிவான மொத்த மாணவர்கள் எண்ணிக்கை | **30,550** | **30,668** |

**அட்டவணை 4.1** சாதாரண மற்றும் விஷேட ஒதுக்கீடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள்

## 4.3 2017/2018 கல்வியாண்டு – சாதாரண விஷேட ஒதுக்கீடுகளின் கீழான பல்கலைக்கழக அனுமதிகள்

### அ) கல்விசார் நடவடிக்கைளுக்கு மேலதிகமாக வேறு துறைகளில் தேசிய சர்வதேச மட்டங்களில் திறமை காட்டியுள்ள மாணவர்கள்

சகல கற்கை நெறிகள் தொடர்பாகவும் 0.5% மான இடங்கள் அல்லது ஒரு இடம் அதாவது கட்புல அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட பாட நெறிகளைத் தவிர்த்து எது கூடியதோ அது 1ம் 2ம் அல்லது 3ம் இடத்தில் தேசிய மட்டத்தில் அல்லது சர்வதேச மட்டத்தில் அத்துறையில் அதாவது விளையாட்டு கலைகள் சார் செயற்பாடுகள் (உதாரணம்: நடனம், வர்ணம் பூசுதல், சங்கீதம் மற்றும் இலக்கியம் போன்ற) சாரணியம் மற்றும் இராணுவப் பயிற்சி, சமூக செயல் மற்றும் ஏனைய மிகைக்கூறான செயற்பாடுகள் குறித்தொதுக்கப்பட்ட ஆனால் புள்ளி பற்றாக்குறை காரணமாக, சாதாரண உள்வாங்களின் கீழ் அனுமதியை பெறத் தவறிய விண்ணப்பதாரிகள் ஒதுக்கப்பட்டனர்.

கட்புல அரங்கேற்றப் பல்கலைக்கழகம் விடயம் தொடர்பில், 4% மான இடங்கள் முன்மொழியப்பட்ட உள்வாங்குதலின் வெவ்வேறு பாடநெறிக்காகவும் இவ்வகையின் கீழ் மாணவர்களுக்காக அனுமதி ஒதுக்கப்பட்டதுடன், இது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புள்ளியில் திட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழக மானிய ஆனைக்குழுவினால் நியமிக்கப்பட்ட ஒரு தெரிவுக்குழுவினால் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

அட்டவணை 4.2 இல் தெரிவு செய்யப்பட்டோர்கள் எண்ணிக்கை தரப்பட்டுள்ளது.

| **2017 /2018 கல்வியாண்டு** | |
|---|---|
| **கற்கை நெறி** | **தெரிவ செய்யப்பட்டோர் எண்ணிக்கை** |
| 1. மருத்துவம் | 7 |
| 2. பல் அறுவைச் சிகிச்சை | 1 |
| 3. விலங்கு மருத்துவ விஞ்ஞானம் | 1 |
| 4. விவசாயம் | 4 |
| 5. உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | 1 |
| 6. உயிரியல் விஞ்ஞானம் | 6 |
| 7. பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) | 1 |
| 8. பொறியியல் | 9 |
| 9. பொறியியல் (EM) | 1 |
| 10. பொறியியல்(TM) | 1 |
| 11. கணிய அளவையியல் | 1 |
| 12. கணனி விஞ்ஞானம் | 2 |
| 13. பௌதீக விஞ்ஞானம் | 10 |
| 14. அளவையியல் விஞ்ஞானம் | 1 |
| 15. பிரயோக விஞ்ஞானங்கள்(பௌதீக விஞ்ஞானம்) | 2 |
| 16. முகாமைத்துவம் | 21 |
| 17. சொத்து முகாமைத்துவமும் மதிப்பீடும் | 1 |
| 18. வணிகவியல் | 3 |
| 19. கலை | 29 |
| 20. கலை(SP) | 1 |
| 21. கலை(SAB) | 1 |
| 22. முகாமைத்துவக் கற்கைகள்(TV) - A | 1 |
| 23. சட்டம் | 2 |
| 24. தகவல் தொழில்நுட்பம் | 1 |
| 25. முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | 1 |
| 26. முகாமைத்துவம் (பொது) சிறப்பு | 1 |
| 27. தொடர்பாடல் கற்கைகள் | 1 |
| 28. பட்டினமும் நாடும் திட்டமிடல் | 1 |
| 29. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் | 1 |
| 30. ஆயர்வேத மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் | 2 |
| 31.உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 1 |
| 32..சித்த மருத்துவம் | 1 |
| 33..தாதியியல் | 1 |

| | |
|---|---|
| 34.விவசாயத் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும் | 1 |
| 35.முகாமைத்துவக் கற்கைகள் (TV)-B | 1 |
| 36.கலை (SP) / அரங்கேற்றற் கலை | 1 |
| 37.கலை (SAB)-B | 1 |
| 38.மருந்தகவியல் | 1 |
| 39.மருத்துவ ஆய்வு கூட விஞ்ஞானங்கள் | 1 |
| 40.ஊடுகதிரப்படமெடுப்பு | 1 |
| 41.இயன் மருத்துவம் | 1 |
| 42.சூழல் பேணலும் முகாமைத்துவமும் | 1 |
| 43.போக்குவரத்தும் தேவைகள் விநியோக ஒழுங்கமைப்பு முகாமை | 1 |
| 44.மூலக்கூற்று உயிரியலும் உயிர இரசாயனவியலும் | 1 |
| 45.கைத்தொழில் புள்ளவிபரவியலும் கணிதவியல் நிதியும் | 1 |
| 46.புள்ளிவிபரவியலும் செயற்பாட்டு அராய்ச்சியும் | 1 |
| 47.கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 1 |
| 48.இஸ்லாமியக் கற்கைகள் | 1 |
| 49.தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | 1 |
| 50.விலங்கு விஞ்ஞானம் | 1 |
| 51.நடனம் (இராமநாதன்) | 1 |
| 52.இசை (சுவிகஅறி) | 10 |
| 53.நடனம் (சுவிகஅறி) | 10 |
| 54.நாடகமும் அரங்கமும் (சுவிகஅறி) | 2 |
| 55.கட்புலக் கலை | 2 |
| 56.தேயிலைத் தொழில்நுட்பமம் பெறுமதி சேர்ப்பும் | 1 |
| 57.கனிப்பொருள் வளங்களும் தொழில்நுட்பமும் | 1 |
| 58.முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் (இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்) | 1 |
| 59.கணக்கிடலும் தகவல் முறைமைகளும் | 1 |
| 60.உடற்றொழில் கல்வி | 1 |
| 61.விளையாட்டு விஞ்ஞானமம் முகாமைத்துவமும் | 1 |
| 62.நீர் வாழ் வளங்கள் தொழில்நுட்பம் | 1 |
| 63.விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் | 1 |
| 64.தகவல் தொழிநுட்பமும் முகாமைத்துவமும் | 1 |
| 65.சற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத்துவமும் | 1 |
| 66. விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் | 1 |
| 67.பசுமைத் தொழில்நுட்பம் | 1 |
| 68.மென்பொருள் பொறியியல் | 1 |
| 69.திரைப்படமும் தொலைக்காட்சிக் கற்கைகள் | 1 |
| 70.செயற்திட்ட முகாமைத்துவம் | 1 |
| 71.பொறியியல் தொழில்நுட்பம் | 1 |
| 72.உணவு வணிக முகாமைத்துவம் | 1 |
| 73.வணிக விஞ்ஞானம் | 1 |
| 74. நிதியியல் பொறியியல் | 1 |
| **2017 /2018 கல்வியாண்டுக்காக தெரிவு செய்யப்பட்ட மொத்த மாணவர்கள் எண்ணிக்கை** | **179** |

**அட்டவணை 4.2 2017 /2018 கல்வியாண்டு: கற்கை நடவடிக்கைகள் தவிர்த்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் திறமை காட்டிய மாணவர்கள்**

**ஆ.வெளிநாட்டு தகைமைகளைக் கொண்ட மாணவர்களை இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்தல்**

ஏற்கெனவே சட்ட ஒழுங்குகளுக்கு ஏற்ப விமர்சனங்களுக்குரிய ஆண்டின் பல்கலைக்கழக அனுமதிக்கு வெளிநாட்டு தகைமைகளை உடைய தேர்வு நாடிகளுக்கான அனுமதியானது, மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.இதற்கமைவாக இலங்கையின் க.பொ.த (உ/த) பரீட்சைகள் சமமாக காணப்படும். வெளிநாட்டுப் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற தேர்வு நாடிகள் பிரிவின் கீழ் விளைவிக்க ஏற்புடையவர் ஆவார்.ஒவ்வொரு விமர்சனத்துக்குரிய காலப்பகுதியில் கீழ் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தெரிவு இடம்பெற்றது.

இவ் ஒதுக்கீட்டின் கீழ் , பின்வரும் முன்னுரிமை ஒழுங்குமுறையானது பின்பற்றப்பட்டது:

- ஏனைய நாடுகளில் இருக்கும் இலங்கை தூதரக ஆளணியினரின் பிள்ளைகள்.
- இலங்கையில் கடமை புரியும் வெளிநாட்டு தூதரக ஆளணியினரின் பிள்ளைகள்
- சார்க் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள்
- மேலே (அ) இல் கீழ் பூர்த்தி செய்யப்படாத இலங்கை மாணவர்கள்
- மேலே (ஆ) அல்லது (இ) இன் கீழ் பூர்த்தி செய்யப்படாத ஏனைய வெளிநாட்டு மாணவர்கள்

இவ் ஏற்பாடுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் (அ) இல் குறிப்பிட்டது நீங்கலாக ஏனையவர்கள் கட்டண வசூல் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டார்கள்.

அதனடிப்படையில்இ வெளிநாட்டுத் தகைமை கொண்ட மாணவர்களுக்காக அனமதிக் கைந்நூலில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுடன், வெளிநாட்டுத் தகைமையுள்ள மாணவர்களின் கற்கை நெறிக்காக மொத்த இடங்களில் 0.5% வரையிலான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

2011 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாடுகளில் தகைமைகளை பெற்ற வெளிநாட்டு மாணவர்களுக்கும் உள்நாட்டு மாணவர்களுக்கும் வெவ்வேறு பாடநெறிக்குமாக ஒதுக்கப்பட்ட,**முன்மொழியப்பட்ட உள்வாங்கலுக்கு மேலதிகமாக,** 4.5% சதவீதமான இடங்களில் **கட்டணம் அறவிடப்படும் அடிப்படையில் பின்வருமாறு** ஒதுக்கப்பட்டன.

அதனடிப்படையில், அட்டவணை 4.3 இல் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் 2017.:.2018 கல்வியாண்டுக்காக, மொத்தமாக 26 மாணவர்கள் இவ் ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்டனர்.

| கற்கை நெறி | 2017/2018 கல்வியாண்டில் 0.5% இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | 2017/2018 கல்வியாண்டில் 4.5% இன் கீழ் தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 1. மருத்துவம் | 07 | 13 |
| 2. பொறியியல் | 02 | - |
| 3. கலை | 03 | - |
| 4. பட்டினமம் நாடும் திட்டமிடல் | 01 | - |
| **ஒவ்வொரு வகைப்பாட்டுக்குமான மொத்தம்** | **13** | **13** |
| **2017 / 2018 கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கை** | **26** | |

**அட்டவணை 4.3 2017 /2018 கல்வியாண்டு : இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கான வெளிநாட்டுத் தகைமையுள்ள மாணவர் அனுமதி**

**(இ) பாதுகாப்பு சேவை நிமித்தம் நியமிக்கப்பட்ட பணிப்பாளர் தொகுதி**

இவ் ஏற்பாட்டின் கீழ் ஆயுதப் படை, பொலீஸ் சேவை, விஷேட சேவைப் படை ஆகியவற்றில் ஆளணியினரின் மருத்துவம், பல் அறுவை சிகிச்சை, பொறியியல் ஆகிய பாடநெறிகளுக்குரிய இடங்களில் 0.5% வரையான இடங்களில் பிரேரிக்கப்பட்ட உள்வாங்கலாக அமைந்தன.

**(உ) ஆசிரியர்களின் அனுமதி**

குறிப்பிட்ட எண்ணிக்கையுடைய கீழ்க்காணும் தொகுதிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் கலை, உயிரியல் விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், மற்றும் பிரயோக விஞ்ஞானம் போன்ற கற்கை நெறிகளுக்கு ஒவ்வொரு கல்வியாண்டிலும் அனுமதியிற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1 'கலைப்பிரிவு'- கற்கை நெறியைக் கற்பதற்கு 2013 ஆம் ஆண்டில் அல்லது அதன் பின்னரோ பொ.வி.த (வெளிவாரி) பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாக கொண்டு இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்களாவர்.

2 2011 ஆம் ஆண்டிலோ அல்லது அதன் பின்னரோ விஞ்ஞான இளமானி (வெளிவாரி) பட்ட நிகழ்ச்சித் திட்ட முதல் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்கள், உயிரியல் விஞ்ஞானம், மற்றும் பௌதீக விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம், போன்ற கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையவர்கள் ஆவார்.

இதன் பிரகாரம் 2017/2018 கல்வியாண்டிற்காக கலைப் பிரிவு கற்கைநெறி கற்கையின் நிமித்தம் இத்தொகுதியின் கீழ் மொத்த எண்ணிக்கையின் **10** மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

**(ஊ) பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான மேன்முறையீடுகள்**

ஒவ்வொரு வருடமும் ப.மா.ஆ பல்கலைக்கழக அனுமதி தொடர்பான மேன்முறையீடுகளைக் கவனிக்கவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரணை செய்யவும் ஒரு குழுவினை நியமிக்கும். இதற்கமைய கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகளையும் புகார்களையும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பேராசிரியர் மொஹான் த சில்வா (தலைவர்/ப.மா.ஆ)-பேராசிரியர்.பி.எஸ்.எம்குணரத்ன(உபதலைவர்-ப.மா.ஆ) உறுப்பினர்,பேராசிரியர்.மலிக்ரணசிங்க(உறுப்பினர்/ப.மா.ஆ)-உறுப்பினர்,பேராசிரியர்.எஸ்.ஜி.ஜெ.என் சேனானாயக்க(துணை வேந்தர்/உறுகுணை பல்கலைக்கழகம்,தலைவர்-**CVCD**)-உறுப்பினர்,கலாநிதி.பிரியந்த பிரேமகுமார (செயலாளர்/ப.மா.ஆ)-- உறுப்பினர்,டிஷான் ஜயன்த /மேலதிக செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்)-உறுப்பினர் மற்றும் செல்வி நிஷான்தா கம்புராதெனிய / உதவிச் செயலாளர் (பல்கலைக்கழக அனுமதிகள்)-உறுப்பினர் மற்றும் செயலாளர் ஆகியோர் 2017/2018 கல்வியாண்டின் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் குழுவின் உறுப்பினர்களாவர்.

அதனடிப்படையில், 201/2018 கல்வியாண்டில் இக்குழுவுக்கு மொத்தமாக 1,537மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றன. இவற்றுள் மாணவர்களால் பின்வரும் கற்கைநெறிகள் குறித்து மேன்முறையீடு செய்யப்பட்ட 72 மேன்முறையீடுகளே பரிசீலிக்க அனுமதிக்கப்பட்டன.அவை அட்டவணை 4.4 இல் கீழே காட்டப்பட்டுள்ளது:

| **2017/2018 கல்வியாண்டு** | |
|---|---|
| மாணவர் மேன்முறையிடுகளின் / அனுமதிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | மாணவர் மேன்முறையிடுகளின் / அனுமதிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
| மருத்துவம் | 1 |

| | |
|---|---|
| விலங்கு மருத்துவ விஞ்ஞானம் | 1 |
| விவசாயம் | 2 |
| விவசாயம் | 2 |
| விவசாயம் | 1 |
| உணவு விஞ்ஞானமும் போசாக்கும் | 1 |
| உயிரியல் விஞ்ஞானம் | 1 |
| உயிரியல் விஞ்ஞானம் | 1 |
| உயிரியல் விஞ்ஞானம் | 2 |
| உயிரியல் விஞ்ஞானம் | 1 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம்) | 1 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (உயிரியல் விஞ்ஞானம | 1 |
| பொறியியல் | 1 |
| கணணி விஞ்ஞானம் | 1 |
| கணணி விஞ்ஞானம் | 1 |
| கணணி விஞ்ஞானம் | 1 |
| பௌதீக விஞ்ஞானம் | 2 |
| பௌதீக விஞ்ஞானம் | 1 |
| பௌதீக விஞ்ஞானம் | 1 |
| பௌதீக விஞ்ஞானம் | 1 |
| பௌதீக விஞ்ஞானம் | 1 |
| பௌதீக விஞ்ஞானம் | 2 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதீக விஞ்ஞானம்) | 1 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதீக விஞ்ஞானம்) | 1 |
| பிரயோக விஞ்ஞானங்கள் (பௌதீக விஞ்ஞானம்) | 1 |
| முகாமைத்துவம் | 1 |
| முகாமைத்துவம் | 3 |
| வர்த்தகம் | 1 |
| கலை | 1 |
| கலை | 4 |
| முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 1 |
| தொடர்பாடல் கற்கைகள் | 1 |
| ஆயர்வேத மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும் | 1 |
| ஆயர்வேத மருத்துவமும் அறுவைச் சிகிச்சையும | 2 |
| உணவு விஞ்ஞானமம் தொழில்நுட்பமும் | 1 |
| உணவு விஞ்ஞானமம் தொழில்நுட்பமும் | 1 |
| சித்த மருத்துவம் | 1 |
| தாதியியல் | 1 |
| தாதியியல் | 1 |
| முகாமைத்துவக் கற்கைகள் (TV) | 1 |
| கலை (SAB) | 1 |
| சுகாதார விருத்தி | 1 |
| மருந்தகவியல் | 1 |
| மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் இரசாயனவியல் | 2 |
| கடற்றொழில் மற்றும் கடல்சார் விஞ்ஞானம் | 2 |
| விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 1 |

| | |
|---|---|
| கணிணி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 1 |
| ஏற்றுமதி விவசாயம் | 1 |
| கணக்கிடல் மற்றும் முகாமைத்துவ முறைமைகள் | 1 |
| உடற்றொழில் கல்வி | 1 |
| உணவு உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவம் | 1 |
| விவசாய வள முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்பம் | 1 |
| பொறியியல் தொழில்நுட்பம் | 1 |
| உயிர்முறைமைகள் தொழில்நுட்பம் | 3 |
| இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் | 1 |
| கடல்சார் மற்றும் நன்னீர் விஞ்ஞானம் | 1 |
| உணவு வணிக முகாமைத்துவம் | 1 |
| **2017 / 2018 கல்வியாண்டுக்கான மொத்தம்** | **72** |

**அட்டவணை 4. 4 2017 /2018 கல்வியாண்டு: மேன்முறையீடுகள் /முறைப்பாடுகள் மூலமான அனுமதிகளின் எண்ணிக்கை**

## 5. கல்வி அபிவிருத்தி மற்றும் கல்வித் தராதரங்களின் பராமரிப்பு

### 5.1 நிலையான குழுக்கள்

நிலையான குழுக்கள் 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 4(2) ம் பிரிவின் திருத்தங்களின் பிரமாணங்களுக்கு அமைவாக ஸ்தாபிக்கப்படுகின்றன. உயர் கல்வி தொடர்பாக குறிப்பிட்ட துறைகளில் ஆணைக்குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்பது மற்றும் ஆலோசனைகள் வழங்குவதே ஒவ்வொரு நிலையான குழுக்களினதும் பொறுப்பாகும். அதற்கிணங்க 2018 ஆம் ஆண்டில் பல்வேறுபட்ட துறைகளுடன் தொடர்பான (18) நிலையான குழுக்களும் (1) ஏனைய சபையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு நிலையான குழுக்களும் மேற்கொண்ட சந்திப்புகளின் எண்ணிக்கை பின்வருமாறு அட்டவணை 5.1 இல் தரப்பட்டுள்ளது.

| இல | நிலையான குழுவின் பெயர் | 2018 இல் இடம்பெற்ற சந்திப்புக்கள் |
|---|---|---|
| 01. | தொழில் வழிகாட்டல் தொடர்பான நிலையான குழுக்கள் | 02 |
| 02. | மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் தொடர்பான நிலையான குழுக்கள் | 06 |
| 03. | சுதேச வைத்தியம் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 04. | விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 05. | விவசாயம் விலங்கு மருத்துவம் மற்றும் விலங்கு விஞ்ஞானம் தொடர்பான நிலையான குழுக்கள் | 02 |
| 06. | பட்டப்பின் கற்கைகள்மற்றும் ஆய்வு தொடர்பான நிலையான குழுக்கள் | 03 |
| 07. | பொறியியல் மற்றும் கட்டடக்கலை தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 08. | தொழிநுட்பத்துறை தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 09. | மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 03 |
| 10. | கல்வி தொடர்பான நிலையான குழுக்கள் | 03 |
| 11. | இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பான நிலையான குழுக்கள் | 04 |
| 12. | முகாமைத்துவக் கற்கைகள் தொடர்பான நிலையான குழுக்கள் | 04 |
| 13. | வெளிவாரிப்பட்டங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 14. | கணிப்பீடு தொடர்பான நிலையான குழுக்கள் | 05 |
| 15. | சட்டக்கற்கைகள் தொடர்பான நிலையான குழுக்கள் | 01 |
| 16. | நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞானங்கள் தொடர்பான | 04 |

| | | |
|---|---|---|
| | நிலையான குழுக்கள் | |
| 17. | நுண்கலை தொடர்பான நிலையான குழுக்கள் | 01 |
| 18. | இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் தொடர்பான நிலையான குழுக்கள் | 02 |
| | | |
| 19. | பட்டம் வழங்கும் நிறுவனங்களின் தகைமைகளது அங்கீகாரத்திற்கான விண்ணப்பங்களை ஆய்வதற்குரிய ஆளணி அபிவிருத்தி தொடர்பான நிலையான குழு | 04 |

**அட்டவணை 5.1 நிலையான குழுக்கள் மற்றும் 2018 ஆம் இடம் பெற்ற நிலையான குழுச் சந்திப்புக்களின் எண்ணிக்கை**

## 5.2 2018 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட பீடங்கள் / திணைக்களங்கள் / இளமாணிப்பட்ட , வெளிவாரி மற்றும் பட்டப்பின் படட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

உயர் கல்விக்கான வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கத்துடன், 2018 ஆம் ஆண்டின் போது பீடங்கள் இரண்டும், 27 புதிய திணைக்களங்களும், 12 புதிய இளமாணிப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களும், வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் ஒன்றும் மற்றும் பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள் ஏழும் அறிமுகப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டன.இவற்றின் விவரங்கள் முறையே அட்டவணைகள் 5.2 மற்றும் 5.6 இல் காட்டப்பட்டுள்ளன.

| இல | பீடத்தின் பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழுவின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | இந்துக் கற்கைகள் பீடம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது.)* | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | **996** |
| 2. | மருத்தவ பீடம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | **988** |

**அட்டவணை 5.2: 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட பீடங்கள்**

| இல | பீடத்தின் பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழுவின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | குடும்ப மருத்துவத் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | கொழும்புப் பல்கலைக்கழகம் | **999** |
| 2. | பொலிமர் விஞ்ஞானத் திணைக்களம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **992** |
| 3. | சைவ சித்தாந்த திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | **996** |
| 4. | ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | **996** |
| 5. | ஊடகக் கற்கைகள் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | **997** |
| 6. | ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களம் (DELT) | உறுகுணை பல்கலைக்கழகம் | **984** |
| 7. | கணிப்பிடல் திணைக்களம் | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | **983** |
| 8. | உடற்கூற்றியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | **988** |
| 9. | உயிர் இரசாயனவியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | **988** |
| 10. | இயன் மருத்துவ திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | **988** |
| 11. | ஒட்டுண்ணியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | **988** |
| 12. | நுண்ணுயிரியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ | **988** |

| | | | |
|---|---|---|---|
| | | பல்கலைக்கழகம் | |
| 13. | தடயவியல் மருத்துவ திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 14. | நோயியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 15. | சமூக மருத்துவ திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 16. | குடும்ப மருத்துவ திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 17. | மருந்தகவியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 18. | அறுவைச் சிகிச்சையியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 19. | மருத்துவத் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 20. | குழந்தைகள் நலன் மருத்துவத் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 21. | மகப்பெற்று மற்றும் மகளிர் நலன் மருத்துவத் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 22. | உளவியல் திணைக்களம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 23. | ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களம் (DELT) | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 984 |
| 24. | பௌதீகவியல் விஞ்ஞானங்கள் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 995 |
| 25. | இரசாயன விஞ்ஞானங்கள் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 995 |
| 26. | சுற்றுலாத் துறை கற்கைகள் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 998 |
| 27. | பொருளியல் திணைக்களம் *(வர்த்தமானி அறிவித்தல் இடப்படவுள்ளது)* | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 998 |

**அட்டவணை 5.3: 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களங்கள்**

| இல | பீடத்தின் பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழுவின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | கொரியன் கற்கைகள் கலைமாணி (கௌரவ) பட்டம் (கொரியன் கற்கைகள்) | களனிய பல்கலைக்கழகம் | 990 |
| 2. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | 996 |
| 3. | பொறியியல், கடற் பொறியியல் மற்றும் கட்டடக்கலையில் விஞ்ஞானமாணிப் பொறியியல் ஹொன்ஸ் பட்டம் (விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பொறியியல்) | உறுகுணை பல்கலைக்கழகம் | 984 |
| 4. | உளவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 979 |
| 5. | பிரயோக பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் விஞ்ஞானமாணிப் பட்டம் | கிழக்குப் பல்கலைக்கழகம்,இலங்கை (திருகோணமலை வளாகம்) | 983 |
| 6. | பௌதீகவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | இலங்கை திறந்த பல்கலைக்கழகம் | 996 |
| 7. | மருத்துவமாணி மற்றும் அறுவைச் சிகிச்சைமாணிப் பட்டம் | இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 988 |
| 8. | மருத்துவமாணி மற்றும் அறுவைச் சிகிச்சைமாணிப் பட்டம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 995 |
| 9. | சமாதானம் மற்றும் முரண்பாடு | களனிய பல்கலைக்கழகம் | 997 |

| | | | |
|---|---|---|---|
| | தீர்த்தல் கலை இளமாணி ஹொன்ஸ் பட்டம் (பீ.எ ஹொன்ஸ் (சமாதானம் மற்றும் முரண்பாடு தீர்த்தல்) | | |
| 10. | கணக்காய்வு மற்றும் பொரன்சிக் கணக்கியலில் வணிக முகாமைத்துவமாணி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 11. | சமூகப் பணிகள் இளமாணி ஹொன்ஸ் பட்டம் (ச.ப.இ ஹொன்ஸ்) | பேராதனைப் பல்கலைக்கழகம் | **998** |
| 12. | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணிப் பட்டம் (பி.ஐ.சி.டி) | கொழும்புப் பல்கலைக்கழகம் | **998** |

**அட்டவணை 5.4: 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

| இல | பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழுவின் இல |
|---|---|---|---|
| 1. | உணவுத் தர முகாமைத்துவ விஞ்ஞானமாணிப் பட்டம் | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | **998** |

**அட்டவணை 5.5:** 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

| இல | பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழுவின் இல |
|---|---|---|---|
| 1. | ஊடக ஆராய்ச்சி முதுமாணிப் பட்டம் (எம்.ஏ ஊடக ஆராய்ச்சி) | கொழும்பு பல்கலைக்கழகம் | **984** |
| 2. | வாய்வழி மருத்துவம் மற்றும் வாய்வழி கதிர் வீச்சு முதுமாணிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | **978** |
| 3. | வாய்வழி மருத்துவம் மற்றும் வாய்வழி கதிர்வீச்சு முதுவிஞ்ஞானமாணிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | **978** |
| 4. | கட்டுமான மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ பொறியியல் முதுவஞ்ஞானமாணிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | **989** |
| 5. | சர்வதேச உறவுகள் முதுமாணிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | **996** |
| 6. | நிலையான சுற்றுலாத் துறையில் முதுமாணிப் பட்டம் | பேராதனைப் பல்கலைக்கழகம் | **997** |
| 7. | நிலையான சுற்றுலாத் துறையில் முதுவிஞ்ஞானமாணிப் பட்டம்(எம்.எஸ்.சி நிலையான சுற்றுலாத் துறை) | பேராதனைப் பல்கலைக்கழகம் | **997** |

**அட்டவணை 5.6: 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்கள்**

## 5.3 2018 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களங்கள் மற்றும் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பெயர் மாற்றங்கள்

கீழே அட்டவணை 5.7 மற்றும் 5.8 இல் காட்டப்பட்டிருக்கும் அட்டவணைகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில், திணைக்களங்கள் இரண்டினதும் (02) மற்றும் இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 46 இனதும் பெயர் மாற்றங்கள் முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| இல | திணைக்களத்தின் பெயர் | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட புதிய பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழு இல |
|---|---|---|---|---|
| 1. | சமஸ்கிருத திணைக்களம் | சமஸ்கிருதம் மற்றும் கீஸேத்தேய கற்கைகள் திணைக்களம் | களனிய பல்கலைக்கழகம் | **978** |
| 2. | பௌதீகவியல் திணைக்களம் | பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் | களனிய பல்கலைக்கழகம் | **999** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களம் | | |

**அட்டவணை 5.7: 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட திணைக்களப் பெயர் மாற்றங்கள்**

| இல | பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட புதிய பெயர் | பல்கலைக்கழகம் | ஆணைக்குழு இல |
|---|---|---|---|---|
| 1. | பி.எஸ்.சி | விஞ்ஞானமாணிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 2. | பௌதீகவியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பி.எஸ்.சி பட்டம் | பௌதீகவியல் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணிப் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 3. | இரசாயனவியல் பி.எஸ்.சி. (சிறப்பு) பட்டம் | இரசாயனவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 4. | தாவர உயிர்த் தொழில்நுட்பத்தில் பி.எஸ்.சி சிறப்புப் பட்டம் | தாவர உயிர்த் தொழில்நுட்பத்தில் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 5. | நுண்ணயிரியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | நுண்ணயிரியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 6. | தாவர உயிரியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | தாவர உயிரியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 7. | விலங்கியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | விலங்கியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 8. | நீர் வளங்கள் முகாமைத்துவ பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | நீர் வளங்கள் முகாமைத்துவம் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 9. | சூழல் முகாமைத்துவம் மற்றும் வனவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | சூழல் முகாமைத்துவம் மற்றும் வனவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 10. | கணிதவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | கணிதவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 11. | பிரயோகக் கணிதவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | பிரயோகக் கணிதவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 12. | பௌதீகவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | பௌதீகவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 13. | புள்ளிவிபரவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | புள்ளிவிபரவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 14. | கணணி விஞ்ஞானம் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | கணணி விஞ்ஞானம் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 15. | உயிரியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | உயிரியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 16. | நிறுவக இரசாயனவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | நிறுவக இரசாயனவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 17. | பொலிமர் இரசாயனவியல் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | பொலிமர் இரசாயனவியல் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 18. | உணவு விஞ்ஞானம் மற்றும் | உணவு விஞ்ஞானம் | ஸ்ரீ ஜயவர்தனபுர | **998** |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொழில்நுட்பம் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | மற்றும் தொழில்நுட்பம் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | பல்கலைக்கழகம் | |
| 19. | விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 20. | பிரயோக விஞ்ஞானங்கள் பி.எஸ்சி (சிறப்பு) பட்டம் | பிரயோக விஞ்ஞானங்கள் விஞ்ஞானமாணி ஹொன்ஸ் பட்டம் | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | **998** |
| 21. | கணனி வலைப்பின்னல் தொழில்நுட்பத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானி | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பமானி (பி.ஐ.சி.டி) | களனிய பல்கலைக்கழகம் | **996** |
| 22. | இரசாயனவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | இரசாயனவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 23. | பௌதீகவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | பௌதீகவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 24. | கணித பௌதீகவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | கணித பௌதீகவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 25. | விலங்கியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | விலங்கியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 26. | தாவரவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | தாவரவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 27. | மூலக் கூற்று உயிரியல் மற்றும் தாவர உயிர் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | மூலக் கூற்று உயிரியல் மற்றும் தாவர உயிர் தொழில்நுட்பவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 28. | நுண்ணயிரியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | நுண்ணயிரியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 29. | புள்ளிவிபரவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | புள்ளிவிபரவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 30. | கணிதவியல் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | கணிதவியல் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 31. | பீ.ஏ மெய்யியல் சிறப்புப் பட்டம் | கலைமாணி மெய்யியல் ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 32. | பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானம் விஞ்ஞானமானி சிறப்புப் பட்டம் | பேச்சு மற்றும் செவிமடுத்தல் விஞ்ஞானம் விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 33. | பீ.ஏ உளவியல் சிறப்புப் பட்டம் | பீ.ஏ உளவியல் ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 34. | பீ.ஏ புவியியல் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | பீ.ஏ புவியியல் ஹொன்ஸ் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 35. | பீ.ஏ அபிவிருத்திக் கற்கைகள் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | பீ.ஏ அபிவிருத்திக் கற்கைகள் ஹொன்ஸ் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 36. | பீ.ஏ அரசியல் விஞ்ஞானம் சிறப்புப் பட்டம் | பீ.ஏ அரசியல் விஞ்ஞானம் ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 37. | பீ.ஏ சர்வதேசக் கற்கைகள் சிறப்புப் பட்டம் | பீ.ஏ சர்வதேசக் கற்கைகள் ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 38. | பீ.ஏ பொருளியல் சிறப்புப் | பீ.ஏ பொருளியல் | களனிய | **998** |

| | பட்டம் | ஹொன்ஸ் பட்டம் | பல்கலைக்கழகம் | |
|---|---|---|---|---|
| 39. | பீ.ஏ சமூகப் புள்ளவிபரவியல் சிறப்புப் பட்டம் | பீ.ஏ சமூகப் புள்ளவிபரவியல் ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 40. | பீ.ஏ தொல்பொருளியல் சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | பீ.ஏ தொல்பொருளியல் ஹொன்ஸ் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 41. | பீ.ஏ சுற்றுலாத் துறை மற்றும் கலாச்சார வள முகாமைத்துவ சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | பீ.ஏ சுற்றுலாத் துறை மற்றும் கலாச்சார வள முகாமைத்துவ ஹொன்ஸ் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 42. | பீ.ஏ விளையாட்டு மற்றும் புத்தாக்க சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | பீ.ஏ விளையாட்டு மற்றும் புத்தாக்க ஹொன்ஸ் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 43. | பீ.ஏ வரலாறு சிறப்புப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | பீ.ஏ வரலாறு ஹொன்ஸ் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 44. | பீ.ஏ சமூகவியல் சிறப்புப் பட்டம் | பீ.ஏ சமூகவியல் ஹொன்ஸ் பட்டம் | களனிய பல்கலைக்கழகம் | **998** |
| 45. | விவசாய விஞ்ஞானமாணி பட்டம் | விவசாய விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் (பி.எஸ்.சி ஹொன்ஸ் விவசாயம்) | இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | **998** |
| 46. | விவசாய விஞ்ஞானமாணி பட்டம் (பி.எஸ்.சி விவசாயம்) | விவசாய விஞ்ஞானமானி ஹொன்ஸ் பட்டம் (பி.எஸ்.சி ஹொன்ஸ் விவசாயம்) | இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | **998** |

**அட்டவணை 5.8: 2018 இல் அங்கீகரிக்கப்பட்ட இளமாணிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர் மாற்றங்கள்**

### 5.4 'தேசிய சட்ட ஆசிரியர்கள் மாநாடு 2018' – தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செயலமர்வு

சட்டக் கற்கைகள் நிலையான குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ' தேசிய சட்ட ஆசிரியர்கள் மாநாடு' இனை ஆரம்பித்து வைத்ததுடன் அதனுடைய முதலாவது மாநாடானது 2018 ஜனவரி மாதம் 26 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இந் நாட்டின் அரச பல்கலைக்கழகங்களின் உச்ச சபையான பல்கலைக்கழக ஆணைக்குழுவிற்கு பிரதான நீதியரசர் வருகை தந்த முதல் நிகழ்வாகும். மேலும் ஜனாதிபதி கவுன்சலரும் பிரதம நீதியரசராகிய திரு.பிரசாத் டெப் அவர்கள் ' தேசிய சட்ட ஆசிரியர்கள் மாநாட்டின்' உடைய பிரதான ஆரம்ப நிகழ்வு உரையினையும் வழங்கினார்.

ஏனைய அதிதிப் பேச்சாளர்களாக கலாநிதி ஹர்ஷ கப்ரால் (ஜனாதிபதிக் கவுன்சல்), கலாநிதி, தீபிகா உடகம (தலைவர் , மனித உரிமைகள் ஆணைக்குழு) , கலாநிதி, ஜெ.எம் சுவாமிநாதன் (சிரேஜ்ட பங்காளர் , ஜுலியஸ் கிரீசி சட்ட நிறுவகம் ) , திரு அலி சப்ரி (ஜனாதிபதி கவுன்சல் மற்றும் பிரதித் தலைவர் , இலங்கை சட்ட சங்கம்) மற்றுமு் கலாநிதி. விக்ரம வீரசூர்ய (ஆணைக்கழு உறுப்பினர் , பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) இதற்கு மேலதிகமாக திரு யு.ஆர். த சில்வா (ஜனாதிபதி கவுன்சல் மற்றும் தலைவர் , இலங்கை சட்ட சங்கம்) திரு. ஜெப்ரி அழகரத்னம் (ஜனாதிபதி கவுன்சல் மற்றும் முன்னாள் தலைவர் , இலங்கை சட்ட சங்கம்) மற்றும் திருமதி. இந்திரா சமரசிங்ஹ ((ஜனாதிபதி கவுன்சல் மற்றும் அதிபர், இலங்கை சட்டக் கல்லூரி) ஆகியோர்கள் நிகழ்வின் கௌரவ அதிதிகளாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.

இலங்கை பல்கலைக்கழக முறைமையில் உள்ள சட்ட ஆசிரியர்களுக்கு இத்தகையதொரு மாநாட்டினை ஏற்பாடு செய்த முதல் தடவை இதுவாகும் என்பதுடன் இந் நிகழ்வானது மாபெரும் வெற்றியாக அமைந்ததுடன் சகல பங்கேற்பாளர்களாளும் மனமாரப் பாராட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ் ஒரு நாள் செயலமர்வில் 80 பேர் கலந்து கொண்டனர்

என்பதுடன் விஷேட அதிதிகளாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் , பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் , மற்றும் பேராசிரியர் உமா குமாரசுவாமி அவர்கள் (முன்னாள் உப வேந்தர் , இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் பணிப்பாளர் , பால் நிலை மற்றும் பால்நிலைப் பங்கு நிலையம் , பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு) ஆகியோர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

" சட்டக் கல்வியின் பொருத்தப்பாட்டினை மதிப்பீடு செய்தல்" என்பதே இச் செயலமர்வின் கருப்பொருளாக இருந்ததுடன் அரச பல்கலைக்கழக முறைமையில் சட்டக் கல்வியில் தர உறுதிப்பாட்டின் முக்கியத்துவம் குறித்த பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை வலியுறுத்துவதாக இருந்தது.

பின்வரும் பரப்புக்களில் இம் மாநாடானது தனது கவனத்தினைச் செலுத்தியது:

- சட்டக் கல்வியுடன் தொடர்பான சரியான பாதையில் தான் நாம் பயணிக்கின்றோமா?
- அரச சட்ட பீடங்களில் உள்ள சட்டப் பட்டதாரிகள் நன்னடத்தை மற்றும் காலத்திற்கேற்றாற் போன்ற சவால்களை எதிர்கொள்வதற்குரிய துணிச்சலைப் பெற்றுள்ளார்களா?
- சட்டப் பட்டதாரிகளக்கு அவர்கள் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் கூடிய பெறுமதியான தொழில் வாய்ப்புக்களை சட்டத் துறையில் அல்லது இதர துறைகளில் நமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வித்திலான தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியுமா?
- சட்ட மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் பாடங்கள் பொருத்தமானது மற்றும் நடைமுறைப் பெறுமதியானதா?
- பாடத்திட்டங்கள் திருப்திகரமானதா அல்லது அவற்றுக்கு மீட்டல் மற்றும் மாற்றங்கள் தேவையா?
- சட்ட ஆசிரியர்கள் / மாணவர்களுக்கு பரிந்துரை செய்வதற்குரிய பாடப்புத்தகங்கள் இதர விடயங்கள் போதுமானதாக உள்ளதா?
- கற்பித்தல் ஊடகம் யாதாக இருப்பது சிறந்தது? ஆங்கிலம் / சிங்களம் /தமிழ் ?
- வெளிநாட்டுச் சட்டப் பட்டங்களை உடைய இலங்கை மாணவர்கள் இலங்கையில் சட்டப் பட்டப்ப படிப்பை பூர்த்தி செய்த சட்ட மாணவர்களுடன் போட்டியிடுகின்றனரா?
- வெளிநாட்டில் சட்டப் படிப்பை முடித்த மாணவர்கள் உள்நாட்டில் சட்டப் படிப்பை பூர்த்தி செய்யும் மாணவர்களை விட எண்ணிக்கையில் அதிகமானவர்களா?

மேற்சொன்ன பரப்புக்களின் மற்றும் விரிவான கலந்துரையாடல்களின் அடிப்படையில், பின்வரும் பத்துப் பரிந்துரைகள் செயலமர்வின் போது எடுக்கப்பட்டன;

1. சட்டத்துடன் தொடர்புடைய இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு அறிமுகப்படுத்துவதற்குரிய புதிய மற்றும் பொருத்தமான பாடங்களுக்காக பாடத்திட்ட அபிவருத்திக் குழுவானது மும்முரமாக இயங்குதல் அவசியமா?

2. புதியதுறைகளில் பட்டப் பின் டிப்ளோமா மற்றும் முதுமாணி மட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

3. சட்டக் கற்கைக்குரிய கற்பித்தல் ஊடகமாக ஆங்கில மொழியானது அறிமுகப்படுத்தப்படல் வேண்டும்.

4. அரச பல்கலைக்கழக சட்டப் பட்டதாரிகள் மற்றும் சட்டக் கல்லூரிகளில் இருந்து வெளியாகிய சட்ட மாணவர்கள் சரியான தொழில் வாய்ப்புக்களில் உள்வாங்கப் பட்டிருக்கின்றனரா? என்ற நிலைப்பாட்டினைப் பரசீலித்துப் பார்ப்பதற்குரிய தொழில்வாய்ப்பு மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.

5. சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

6. சட்டக் கல்வியில் மாணவர்கள் தமது வெளிப்பாட்டினைக் காட்டுவதற்கு தொழில் பயிற்றுவிப்பாளர்களை நாடுவதற்குரிய வாய்ப்பினை பீடங்கள் மற்றும் திணைக்களங்கள் ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

7. அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் அரச சார்பற்ற சட்ட கல்வி மற்றும் பட்டமளிக்கும் நிறுவகங்களின் அடைவு (Directory) ஒன்று பராமரிக்கப்படல் வேண்டும்.

8. சட்ட நிலையான குழுவின் அனுசரனையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வழக்குப் புத்தகங்களைஒரு தரவுத்தளமாக அறிமுகப்படுத்தப் பட வேண்டியதன் தேவைப்பாடு உள்ளது.

9. சட்ட மாணவர்களுக்குரிய அதிகமான மென் திறன்கள் பயற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டு நடத்தப்படல் வேண்டும்.

10. சட்டக் கல்வியின் கால எல்லை மற்றும் வழங்கப்படும் பாடங்கள் ஆகியன மிளக் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பூகோள உள்ளடக்கத்தில் இடம்பெறும் மாற்றங்களுக்கு நிகரான விடங்களுடன் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

அரச பல்கலைக்கழகங்களில் சட்டப் பட்டதாரிகளுக்கு கற்பித்துக் கொடுக்கும் சட்ட ஆசிரியர்கள் அனைவரும் இவ் ஒரு நாள் செயலமர்வில் பங்குபற்றியதுடன் அவர்களுக்கு பங்கேற்புக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### 5.5 'ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழக பரீட்சையினை நடத்துதல்' (UTEL)- பல்கலைக்கழக முறைமையில் முன்போடிப் பரீட்சை 2018 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் அரச பல்கலைக்கழங்களில் உள்ள இளமாணிப் பட்டதாரிகளுக்கு நடத்தப்படுகின்ற ஒரு தேசிய மட்டப் பரீட்சையே ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சை (UTEL) ஆகும். அரச பல்கலைக்கழகங்களில் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில மொழிக்கான தேசிய மட்டத்திலான பரீட்சை முறைமையொன்றினை உருவாக்கி அதனூடு ஆங்கில மொழியில் அங்கீகரிக்கப்பட்ட தகைமையினை அடைவதன் மூலம் பட்டதாரி மாணவர்கள் தொழிற் சந்தைக்கு ஏற்றாற் போல் தம்மைத் தயார் படுத்திக் கொள்வதற்குரிய சிறப்பான வாய்ப்புக்களை உருவாக்குதலே ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சை (UTEL) ஆகும்.

தேசிய பல்கலைக்கழக முறைமையில் ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சை (ருவுநுடு) ஆனது 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் உலக வங்கியின் நிதி உதவியுடன் எச்.இ.டி.சி கருத்திட்டத்தின் (HETC) மூலம் முதன் முதலில் நடாத்தப்பட்டன.இருப்பினும், இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் என்ற நிலையான குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம், 'UTEL பரீட்சைச் சேவைகள் ' என்னும் நிலையான அமைப்பொன்றினை ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சையினை நடத்துவதற்காக வேண்டி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் உருவாக்குவதற்குரிய ஆரம்ப கட்ட முயற்சிகளை மேற்கொண்டன. இதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நிதியுதவி வழங்கப்பட்டது.

இரண்டாம் மொழியாக ஆங்கிலம் கற்பித்தல் நிலையான குழுவின் உப குழுவான 'ருவுநுடு பரீட்சைச் சேவைகளை உருவாக்குவதற்கான இயக்கக் குழு' ஆனது ஆங்கில மொழிக்கான பல்கலைக்கழகப் பரீட்சையின் முன்னோடிப் பரீட்சையினை 2018 நவம்பர் 26 ஆந் திகதி முதல் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியில் நடத்தி முடிந்தது. இம் முயற்சியின் நோக்கமாவது UTEL இனை வழங்குவதில் உள்ள செயலாக்கத்தினை சரி பார்ப்பதற்காக உருவாக்கப்படவுள்ள 'UTEL பரீட்சைச் சேவைகள் நிலையம்' கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கொலேஜ் ஹவுஸ் இல் ஸ்தாபிக்கப்படவுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட முன்னோடிப் பரீட்சையானது, மேற்சொல்லப்பட்ட காலப்பகுதியில்இ ஒவவ்வொரு உயர் கல்வி நிறுவகத்திலிருந்தும் 100 மாணவர்களும், அண்ணளவாக 1500 மாணவர்கள் ஒட்டு மொத்த முறைமையில் இருந்தும் பரீட்சைக்குத் தோற்றினர். இம் மாணவர்கள் அனைவரும் உயர் கல்வி நிறுவகங்களின் ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களங்கள் (DELTs) அல்லது ஆங்கில மொழி கற்பித்தல் அலகுகள்( ELTUs) மூலம் தெரிவு செய்யப்பட்டனர் / பெயர் குறிப்பிடப்பட்டனர். இம் முன்னோடிப் பரீட்சைக்குரிய மொத்தச்

செலவினமானது ரூபா.2.88 மில்லியனாக இருந்ததுடன் UTEL பரீட்சையின் ஒன்லைன் பரீட்சைகளின் தொழிற்பாடுகள் யாவும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் கணினிக் கல்லூரியின் (UCSC) மூலம் நடத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டன.

### 5.6 1992 மார்ச் 13 ஆந் திகதிய பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம 16/92 இன் ஒதுக்கீடுகளின் பிரகாரம் உள்ளக மற்றும் வெளிநாட்டுப் பல்கலைககழகங்களின் அங்கீகாரம்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கற்கை சார் நடவடிக்கைகள் திணைக்களமானது ஏறக்குறைய 3500 கோரிக்கைகளை தாம் கல்வி சார் தகைமைகளைப் பெற்ற அத்தகைய உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கற்ற இலங்கை மாணவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டது. 2018 டிசம்பர் 31 ஆந் திகதிக்கு பல்கலைக்கழக அங்கீகாரக் கடிதங்களின் தகவல்கள் அட்டவணை 5.9 இல் காட்டப்பட்டுள்ளன.

| **பெறப்பட்ட கோரிக்கைகளின் வகை** | **வெளியிடப்பட்ட கடிதங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் | 2510 |
| உள்ளகப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் | 1111 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளம் மூலமாக வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்திற்கான ஒன்லைன் கோரிக்கைகள் | 2 |
| பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளம் மூலமாக உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரத்திற்கான ஒன்லைன் கோரிக்கைகள் | 8 |
| **மொத்தம்** | **3631** |

**அட்டவணை 5.9: 2018 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய / வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் அங்கீகாரக் கடிதங்கள்**

## 6. நிதி நிர்வாகம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் 2013-2017 வரையிலான மூலோபாயத் திட்டமானது 2018 ஆம் ஆண்டின் தொடர்ச்சிக்குரிய பொருத்தமான மற்றும் தேவையான விடயமாக பல்கலைக்கழக முகாமைத்துவத்தினால் கருதப்படுகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இலங்கையில் உயர் கல்வியின் கொள்கை வழிகாட்டிகளை அடைந்து கொள்ளும் நோக்குடன், பின்வருமாறு வரிசைப்படுத்தப்பட்டவாறு 2018 ஆம் ஆண்டுடைய வெற்றிடத்தால் நிதியளிக்கப்படுவதற்காக 8 (எட்டு) தந்திரோபாய இலக்குகளை அறிமுகப்படுத்தியது.

- உயர் கல்விக்கு பரந்த பங்களிப்பு மற்றும் சமமான செயற்பாடு.
- கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் மற்றும் பொருத்தப்பாட்டை முன்னேற்றுதல்.
- ஆய்வு, புதுமை, தொழில் முயற்சி ஆகியவற்றை வலுப்படுத்துதல்.
- சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமாதானமும் நல்லிணக்கம் ஆகியவற்றில் தந்திரோபாய பங்காளர்களாக உயர் கல்வி நிறுவகங்களின் கடமைகளை அதிகரித்தல்.
- சர்வதேச கூட்டுறவு மற்றும் போட்டித்தன்மையை அதிகரித்தல்.
- உடலியல் மற்றும் அழகியற் சூழல் மற்றும் பங்குதாரர் திருப்தி ஆகியவற்றை அதிகரித்தல்.
- நிதி முகாமைத்துவம் மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றை அதிகரித்தல்.
- நல்லாட்சியை மேம்படுத்தல்

இலங்கை பாரளுமன்றமானது 2018 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தை அங்கீகரித்ததுடன் தேசிய வரவு செலவு திட்டத் திணைக்களமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு

செலவுத் திட்டத்தை விடுவித்தது. குறித்த காலத்தில் திறைசேரியானது மேலதிக ஒதுக்கீடாக 4,135.5 மில்லியன்கள் மற்றும் 3,254.0 மில்லியன்கள் ஆகியவற்றை முறையே மூலதனம் மற்றும் மீண்டெழும் மானியமாக விஷேடமாக வரவு செலவுத்திட்ட முன் மொழிவுகளின் அமுலாக்கத்துக்கு நிதியளிப்பதற்காக மேற்கொண்டது.

அட்டவணை 6.1 ஆனது 2018 ஆம் ஆண்டுக்கான பாதீடு மற்றும் மேலதிக மானியங்களை , உள்ளக வருமானம் அல்லது பிற மானியங்களை உள்ளடக்கிய மொத்த நிதியத்தனை சுருக்கமாகக் காட்டியுள்ளது. ஒப்பீட்டு நோக்கத்திற்காக வேண்டி 2017 ஆம் ஆண்டிற்காக முந்தைய நிதியும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வகை / விடயத்தலைப்பு | 2017 ஆம் அண்டு | 2018 ஆம் ஆண்டு |
|---|---|---|
| *மீண்டெழும் மானியங்கள் (பாதீட்டில் அனுமதிக்கப்பட்ட தொகை + மேலதிக திறைசேறி ஒதுக்கீடு)* | 30,597.05 | 36,785.50 |
| மூலதன / அபிவிருத்தி மானியங்கள் - பொது *(பாதீட்டில் அனுமதிக்கப்பட்ட தொகை + மேலதிக திறைசேறி ஒதுக்கீடு)* | 11,540.06 | 19,454.00 |
| **மொத்த நிதி ஒதுக்கீடு** | **42,137.11** | **56,239.50** |
| உள்ளக வருமானம் / இதர மானியங்கள் | 4,015.48 | 4,604.97 |
| **மிகுதியாகவுள்ள மொத்த நிதியம்** | **46,152.59** | **60,844.47** |

**அட்டவணை 6.1 இருப்பில் உள்ள மொத்த நிதியம் : 2017 & 2018**

### 6.1 மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களுக்கான ஒதுக்கீடு

திறைசேறியினால் மேலே குறிப்பிட்டவாறு அங்கீகரிக்கப்பட்ட மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்கள், பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவனங்களினால் 2018 ஆம் ஆண்டிற்காக, ப.மா.ஆ.வினால் அங்கீகரிக்கப்பட்ட நிதியிடல் கொள்கையின் அடிப்படையில் மீண்டெழும் தொகுதி மானியங்களாகவும், மூலதன தொகுதி மானியங்களாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### 6.2 நிதியிடல் கொள்கை -மீண்டெழும் மானியங்களுக்கான ஒதுக்கீடு(RBG)

பல்கலைகழகங்கள் மற்றும் இளமாணிப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களுக்கான 2018 ஆம் ஆண்டுக்கான மீண்டெழும் மானியங்கள் கீழ்க்காணும் நிதியீட்டல் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. ப.மா.ஆ வினால் கீக் காணும் சூத்திரத்தின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மீண்டெழும் மானியம் = ஒரு மாணவருக்கு வடிவமைக்கப்பட்ட செலவு (MCPS) X மாணவர் சேர்வு (SE)**

மாணவர் ஒருவருக்கு வடிவமைக்கப்பட்ட செலவு பின்வரும் கொள்கைக் காரணிகளைக் கவனத்திற் கொண்டு கணிப்பிடப்பட்டது.

- உண்மையான பதவியணி அடிப்படையில் வருடாந்த சம்பள உயர்வு.
- ஏனைய மீண்டெழும் செலவினம் மீதான பணவீக்கம்.
- ஏனைய மீண்டெழும் செலவினம் மீதான கொள்திறன் விரிவாக்கம்.
- கொள்கைக் காரணி – நிதியீட்டல் விகிதம் (தேசிய வரவு செலவுத் திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டதன்படி)

## 6.3 நிதியீட்டல் கொள்கை -மூலதன மானிய ஒதுக்கீடு (CG)

### 6.3.1 மூலதன தொகுதி மானியங்கள் (CBG)

கட்டுமான செயற்றிட்டங்கள் மீதான மூன்று வருடத் திட்டம் மற்றும் நிதிப்பாவனையின் முன்னேற்றம் ஆகியவற்றைக்கருத்திற் கொண்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கு மூலதன தொகுதி மானியங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதனடிப்படையில் பல்கலைக்கழகங்கள்/உயர்கல்வி நிறுவனங்கள் மூலதன கருத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை கீழ்வரும் வகைப்பாட்டுக்குள் மேற்கொண்டது;

a) கட்டுமானச் செயற்திட்டங்கள் - ரூபா. 5,656.1 மில்லியன்
b) நிலையான சொத்தின் புணர்நிர்மாணம் மற்றும் முன்னேற்றம் - ரூபா. 1,710.2 மில்லியன்
c) நிலையான சொத்தின் கையகப்படுத்தல் -ரூபா. 2,529.6 மில்லியன்
d) மனித மூலதன அபிவிருத்திக் கருத்திட்டங்கள் -ரூபா. 414.0 மில்லியன்
e) ஆய்வு மற்றும் அபிவிருத்தி -ரூபா 439.9 மில்லியன

ப.மா.ஆ / என்.சி.எ.எஸ் இனால் நிதியளிக்கப்படும் பட்டப்பின்/ கலாநிதிக் கருத்திட்டங்களும் மனித மூலதன அபிவிருத்தி கருத்திட்டங்களுக்குள்ளே வரும்.

### 6.3.2 பாதீட்டு முன்மொழிவுகள்

கௌவர நிதி அமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மற்றும் முன்னைய ஆண்டின் வரவ செலவுத் திட்ட முன்மொழிவுகளின் தொடர்ச்சியினைக் கருத்திற் கொண்டு பின்வரும் விடயங்களை நிர்வகிப்பதற்குரிய நிதியானது ஒதுக்கப்பட்டது;

| | |
|---|---|
| பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பீடங்களின் உருவாக்கம் | - ரூபா. 3,050 மில்லியன் |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தொழில்நுட்ப பீடத்தின் உருவாக்கம் | -ரூபா 500 மில்லியன் |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தின் உருவாக்கம் | ரூபா. 50 மில்லியன் |
| பல்கலைக்கழகங்களில் உள்ள பீடங்களின் ஆளணியினருக்கான வதிவிட வசதிகள்- | -ரூபா. 80 மில்லியன் |
| புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகள்: மருத்து பீடம் (முகப்பு I), இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | - 1,200 மில்லியன் |
| சர்வதேசத் தரம் வாய்ந்த தொழில்வாண்மை நிறுவகங்களுடன் தர உறுதிப்படுத்தலுக்கு ஊக்கமளித்தல் | - ரூபா.20 மில்லியன் |
| கொழும்புப் பல்கலைக்கழகத்தின் புள்ளிவிபரவியல் பீடத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆரம்பகட்ட படிமுறை முயற்சிகள் | -ரூபா. 250 மில்லியன் |
| வணிகத்துடன் தொடர்புடைய மேம்பட்ட கல்லூரிப் பாடசாலைகளுக்கான தர உறுதிப்பாட்டை வழங்குவது தொடர்பில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு ஆதரவு வழங்குதல் | -ரூபா. 100 மில்லியன் |
| வவுனியா வளாகத்தில் கலை நூலக வசதி மற்றும் கணிணித் தொழில்நுட்ப நிலையத்தின் உருவாக்கம் | -ரூபா. 200 மில்லியன் |

### 6.3.3மூலதன மானியங்களின் தொகுப்பு-2018




### 6.4 பல்கலைக்கழக முறைமையில் நிதி ஒதுக்கீடு / பாவனை

முன்னைய அண்டு 2017 உடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்ட மொத்த நிதயங்களின் தொகையானது கீழே அட்டவணை 6.2 இல் காட்டப்பட்டுள்ளது.

| மானியங்கள் | 2017 ஆம் ஆண்டு | | | 2018 ஆம் ஆண்டு | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த நிதி ஒதுக்கீடு (ருபா. மில்லியன் | விடுவிக்கப்பட்டமொத்த நிதி (ருபா. மில்லியன்) | விடுவிக்கப்பட்ட/ பாவனை மொத்த ஒதுக்கீட்டின் பாவனை அடிப்படையில் | மொத்த நிதி ஒதுக்கீடு (ருபா. மில்லியன்) | விடுவிக்கப்பட்ட மொத்த நிதி (ருபா. மில்லியன்) | விடுவிக்கபட்ட/ பாவனைமொத்த ஒதுக்கீட்டின் விகிதாசார அடிப்படையில் |
| மீண்டெழும் மானியங்கள் | 30,597.05 | 29,873.70 | 97.6% | 36,785.50 | 35,935.00 | 97.6% |
| மூலதனம் | 11,540.06 | 10,477.91 | 90.8% | 19,454.00 | 14,098.00 | 72.4% |
| மொத்தம் | **42,137.11** | **40,351.61** | **95.7%** | **56,239.50** | **50,033.00** | **88.9%** |

**அட்டவணை 6.2 ஒதுக்கீட்டுச் சுருக்கம் / நிதிப் பயன்பாடு : 2017 & 2018**

### 6.5 அரச நிதிய ஒதக்கீடுகள், செலவினம் மற்றும் மாணவர் நிதியுதவி தொடர்பிலான வரலாற்றுத் தரவுகள் (2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலமாக பல்கலைக்கழகங்களுக்கு மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுக்கு கடந்த ஆறு ஆண்டு காலமாக வழங்கப்பட்ட அரச நிதிய ஒதக்கீடுகள், செலவினம் மற்றும் மாணவர் நிதியுதவி தொடர்பிலான தகவல்களை கீழ்வரும் அட்டவணை 6.3 வழங்குகின்றது.

| குறிப்பு | ரூபா. மில்லியன் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| 1. அரசாங்க ஒதுக்கீடு | | | | | | |
| மீண்டெழும் | 18,317 | 20,841 | 25,898 | 29,029 | 30,597 | 36,786 |
| மூலதனம் | 8,524 | 10,945 | 8,860 | 19,797 | 11,540 | 19,454 |
| 2. செலவு | | | | | | |
| மீண்டெழும் | 16,932 | 20,638 | 25,761 | 27,999 | 29,874 | 35,935 |
| மூலதனம் | 5,820 | 10,000 | 8,735 | 15,162 | 10,478 | 14,098 |
| 3. மாணவர் நிதியுதவி | | | | | | |
| மஹாபொல | 94 | 109 | 576 | 912 | 859 | 1,268 |
| உதவுதொகை | 386 | 414 | 466 | 832 | 539 | 535 |

குறிப்பு: வரவு செலவுத்திட்ட முன்மொழிவின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியானது வருடாந்த ஒதுக்கீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 6.3 (2013 – 2018) வரையிலான அரசாங்க நிதி ஒதுக்கீடு, செலவினங்கள் மற்றும் மாணவர் நிதித் தொகை**

## 6.6 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களின் ஒதுக்கீடு

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எவ்விதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களின் ஒதுக்கீடு இடம்பெற்றத என்பதனை ஒப்பீட்டு நோக்கத்திற்காக முன்னைய இரண்டு ஆண்டுகளின் தகவல்களுடன் கீழே அட்டவணை 6.4 இல் தரப்பட்டுள்ளது.

| பல்கலைக்கழகங்கள் / நிறுவனங்கள் / பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு | மீண்டெழும் மானியங்கள் (ரூபா.மில்லியன்) | | | மூலதன மானியங்கள் (ரூபா.மில்லியன்) | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு 2016 | பாதீடு 2017 | பாதீடு 2018 | பாதீடு 2016 | பாதீடு 2017 | பாதீடு 2018 |
| பேராதெனிய | 4,370.0 | 4,444.3 | 5,399.0 | 1,563.0 | 800.0 | 1,535.0 |
| கொழும்பு | 2,472.0 | 2,568.3 | 3,360.0 | 637.0 | 815.8 | 1,825.0 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர | 2,617.0 | 2,908.0 | 3,616.0 | 1,621.0 | 800.0 | 1,630.0 |
| களனி | 2,430.0 | 2,578.6 | 3,078.0 | 1,081.0 | 751.4 | 1,070.0 |
| மொறட்டுவ | 1,828.0 | 1,961.5 | 2,365.0 | 1,545.0 | 800.0 | 810.0 |
| றுகுணு | 2,284.0 | 2,431.0 | 2,956.0 | 1,176.0 | 700.0 | 660.0 |
| யாழ்ப்பாணம் | 2,056.0 | 2,233.9 | 2,580.0 | 1,367.0 | 840.0 | 965.0 |
| இலங்கை திறந்த | 1,000.0 | 1,112.6 | 1,320.0 | 230.0 | 150.0 | 105.0 |
| கிழக்கு | 994.0 | 1,066.8 | 1,240.0 | 628.0 | 400.0 | 515.0 |
| ரஜரட்ட | 1,255.0 | 1,224.4 | 1,455.5 | 817.0 | 600.0 | 790.0 |
| சபரகமுவ | 1,024.0 | 1,085.0 | 1,254.0 | 555.0 | 450.0 | 615.0 |
| தென்கிழக்கு | 830.0 | 907.4 | 1,070.0 | 567.0 | 400.0 | 345.0 |
| வயம்ப | 949.0 | 947.8 | 1,094.0 | 786.0 | 500.0 | 500.0 |
| கட்புல அரங்கேற்றற் கலை | 717.0 | 710.2 | 790.0 | 421.0 | 400.0 | 406.0 |
| ஊவா வெல்லஸ்ஸ | 538.0 | 619.4 | 705.0 | 600.0 | 400.0 | 435.0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| விவசாய பட்டப் பின் கற்கை | 20.0 | 40.8 | 60.0 | 10.0 | 9.0 | 10.0 |
| மருத்துவ பட்டப்பின் கற்கை | 80.0 | 101.1 | 120.0 | 285.0 | 200.0 | 545.0 |
| தொல்பொருளியல் பட்டப்பின் கற்கை | 66.0 | 70.5 | 75.0 | 10.0 | 10.0 | 15.0 |
| முகாமைத்துவ பட்டப்பின் கற்கை | - | - | - | - | - | - |
| விஞ்ஞான பட்டப்பின் கற்கை | 12.0 | 12.4 | 15.0 | 38.0 | 50.0 | 60.0 |
| பாளி மற்றும் பௌத்த கற்கைகள் பட்டப்பின் கற்கைகள் | 25.0 | 33.6 | 45.0 | 10.0 | 158.6 | 50.0 |
| ஆங்கிலப் பட்டப்பின் கற்கை | 13.0 | 20.5 | 23.5 | 37.5 | 5.7 | 5.0 |
| மானுடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான பட்டப்பின் கற்கைகள் | 8.0 | 25.1 | 30.0 | 8.0 | 10.0 | 10.0 |
| சுதேச மருத்துவ | 299.0 | 339.7 | 415.0 | 157.0 | 50.0 | 55.0 |
| மனித வள மேம்பாட்டு | 40.0 | 40.4 | 42.5 | 10.0 | 5.0 | 20.0 |
| கொழும்புப் பல்கலைக்கழக கணணிக் கற்கைகள் | 160.0 | 171.1 | 200.0 | 245.0 | 110.0 | 125.0 |
| கம்பஹா விக்ரமாராய்ச்சி ஆயுர்வேத | 227.0 | 251.8 | 263.5 | 164.0 | 80.5 | 210.0 |
| மொறட்டுவ பல்கலைக்கழக தொழிநுட்ப | 155.0 | 203.0 | 267.5 | 10.0 | 10.0 | 8.0 |
| நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான தேசிய | 17.0 | 17.2 | 18.0 | 5.0 | - | 2.0 |
| உயிர்இரசாயன மூலக்கூற்று உயிரியலும்,உயிர் தொழில்நுட்பவியல் | 60.0 | 65.3 | 70.0 | 20.0 | 20.0 | 18.0 |
| சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் | 150.0 | 150.8 | 188.0 | 69.0 | 44.0 | 55.0 |
| மானிடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய | 21.0 | 20.2 | 20.0 | 120.0 | 85.0 | 85.0 |
| திருகோணமலை | 203.0 | 211.2 | 265.0 | 535.5 | 300.0 | 310.0 |
| கொழும்பு பல்கலைக்கழக விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞானங்கள் | 30.0 | 28.1 | 30.0 | 10.0 | 10.0 | 75.0 |
| பல்கலைக்கழக மானியங்கள் | 484.8 | 495.2 | 530.0 | 604.0 | 235.0 | 140.0 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஆணைக்குழு | | | | | | | |
| **மொத்தம்** | **27,434.8** | **29,097.1** | **34,960.5** | | **15,942.0** | **10,200.1** | **14,004.0** |
| செயற்பாட்டு மானியம் | 1,594.2 | 1,500.0 | 1,825.0 | | - | - | - |
| வரவு செலவுத்திட்ட முன்மொழிவு | - | - | - | | 3,855.0 | 1,340.0 | 5,450.0 |
| **மொத்த மானியம்** | **29,029.0** | **30,597.1** | **36,785.5** | | **19,797.0** | **11,540.1** | **19,454.0** |

அட்டவணை 6.4 (2016 – 2018) வரையிலான மீண்டெழும் மற்றும் மூலதன மானியங்களின் ஒதுக்கீடு

## 7. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுச் செயலகத்தின் பதவியணியினர்

2018 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் அங்கிகீகரிக்கப்பட்ட பதவியணிகள் எண்ணிக்கையானது ஆறு வித்தியாசமான தொழில் சார் ஆளணியினர் மட்டங்களில் 306 ஆகும். எவ்வாறிருப்பினும் மொத்தமாக 250 பேர் மட்டுமே 2018 டிசம்பர் 31 ஆம்திகதி வரை சேவையில் இருந்தனர்.இதில் 18 % இடங்கள் பூரணப்படுத்தப்படாத வெற்றிடங்களாகக் காணப்பட்டதுடன் அத் தகவல்கள் கீழே அட்டவணை 7.1 இல் காட்டப்பட்டுள்ளது.

| *வகைப்பாடு* | *அனுமதிக்கப்பட்ட பதவியணியினர்* | *நடைமறையில் உள்ள பதவியணியினர்* |
|---|---|---|
| கல்வி சார் ஆளணியினர் | 07 | 05 |
| நிர்வாக ஆளணியினர் | 55 | 41 |
| கல்வி சார் உதவி ஆளணியினர் | 09 | 06 |
| முகாமைத்துவ உதவித் தரங்கள் | 178 | 148 |
| முதனிலை ஆளணியினர் | 57 | 50 |
| **மொத்தம்** | **306** | **250** |

**அட்டவணை 7.1 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் நடைமுறையில் உள்ள பதவியணியினர்**

### 7.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, பதவி உறுதிப்படுத்தல்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மொத்தமாக 33 புதிய பதவிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் 23 நிரந்தரமாகவும், 09 ஒப்பந்த / தற்காலிகமாகவும்/ கொடுக்கப்பட்ட வேலை அடிப்படையில் / நாள்கூலி அடிப்படையில் ஒரு நியமனமும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், பல்கலைக்கழக மானிங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் கடமை புரியும் ஊழியர்களுள் 14 பேர்களுக்குரிய பதவி உயர்வுகளும், 12 சேவை உறுதிப்படுத்தல்களும் வழங்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டில் ஊழியர் ஒருவரின் இடமாற்றமும் பதிவு செய்யப்பட்டிருந்தது.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் சேர்வதற்காக 03 ஊழியர்கள் பல்கலைக்கழகங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டனர்.

### 7.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கான உள்ளக இடமாற்றங்கள், சேவை விருதுகள் மற்றும் விஷேட நோக்கத்திற்கான விடுமுறைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் உள்ளே உள்ள வித்தியாசமான திணைக்களங்கள் /பிரிவுகள் என்பவற்றுக்கு இடையில் 2018 ஆம் ஆண்டில் 15 உள்ளக இடமாற்றங்கள் பதிவு செய்யப்பட்டன. மேலும், ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கங்கள் 678,696 மற்றும் 893 என்பவற்றில் உள்ள ஏற்பாடுகளின் அடிப்படையில் பல்கலைக்கழக முறைமையில் 25, 30 மற்றும் 35 வருட கால சேவைகளைப் பூர்த்தி செய்த ஊழியர்களை

அவர்களுடைய சிறந்த நீண்ட கால சேவையினைப் பாராட்டி நிதி மானியங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

விமர்சனைக்குரிய ஆண்டுகாலப் பகுதியில் கல்வி சார் மற்றும் இதர நோக்கங்களுக்காக தனிப்பட்ட அடிப்படையில் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்குரிய விடுமுறையானது பல்கலைக்கழக ஊழியர்களுக்கு 20 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டது. அவற்றுள் 15 வாய்ப்புக்கள் நிர்வாகத் தர ஊழியர்களுக்கும்இ மிகுதி 05 வாய்ப்புக்களும் நிர்வாகத் தரமல்லாத ஆளணியினருக்கும் வழங்கப்பட்டது.மூன்று ஊழியர்களுக்கு அவர்களுடைய ஓய்வு வயது வரையிலான விடுமுறை வழங்கப்பட்டது. மேற் சொன்ன விடயங்களுக்கு அப்பால் பொருத்தமான ஏற்பாடுகளின் கீழ் பின் வரும் விஷேட வகையாகன விடுமுறைகள் ஊழியர்களின் தேவையின் தன்மையினைப் பொறுத்து வழங்கப்பட்டது;

| | |
|---|---|
| பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்குரிய விடுமுறை | -03 ஊழியர்கள் |
| தந்தை ஆனமைக்குரிய விடுமுறை | -03 ஊழியர்கள் |
| அலுவலகர்களுக்கான கற்றல் விடுமுறை | -05ஊழியர்கள் |
| பிரசவகால விடுமுறை | -08 ஊழியர்கள் |
| சம்பளம் அற்ற பிரசவ கால விடுமுறை | -01 ஊழியர்கள் |
| செலவின விடுமுறை | -08 ஊழியர்கள் |

### 7.3 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தை விட்டும் ஊழியர்களின் வெளியேற்றம்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தினை விட்டும் 12 ஊழியர்கள் பல்கலைக்கழக முறைமையில் உள்ள பல்கலைககழங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றனர். மேலும் 02 பேர்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அவர்களுக்குரிய பதவியுயர்வுகளை பல்கலைக்கழகங்களில் பெறுவதற்காக அவர்களை விடுவித்தது. மேலும், இதர அரசாங்க நிறுவகங்களில் புதிய பதவிகளைப் பெற்றுக்கொள்வததன் பொருட்டு மேலும் 10 ஊழியர்கள் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் நான்கு ஓய்வூதியங்களும், பதவி விலகல் ஒன்றும் மற்றும் காலியான வெற்றிடம் ஒன்றும் இடம்பெற்றன. அதே வேளை தற்காலிக ஆய்வு உதவியாளர் ஒருவரின் சேவையானது அவருடைய சேவைக்காலம் நிறைவுறும் வரையில் தொடர்ந்து இருக்கவில்லை என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.

### 7.4 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் உள்ள ஆளணயினருக்கு வழங்கப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புக்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊழிய உறுப்பினர்களின் தனிப்பட்ட மற்றும் தொழிற் தகைமை அபிவிருத்தியே அதனுடைய பிரதான பரப்பாகக் கருதப்படுவதுடன் இந் நோக்கத்தினை அடையும் பொருட்டு அதற்கு அனுசரணை வழங்குவதற்காக வெண்டி தனியானதொரு ஆளணிப் பயிற்சி நிதியம் ஆனது பராமரிக்கப்பட்டு வருகின்றது. கடந்த காலங்களைப் போன்றே 2018 ஆம் ஆண்டினுள்ளும், ஊழியர்கள் தமது திறமைகள் மற்றும் பணி அனுபவத்தினை மேம்படுத்திக் கொள்வதற்காக உள்ளக ரீதியில் மற்றும் வெளிநாட்டு ரீதியில் மேற்கொள்ளப்புடும் பொருத்தமான மற்றும் உசிதமான குறுகிய கால செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்பதற்குரிய பல வாய்ப்புக்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகமானது அதனுடைய பதவியணியினர் பிரிவுடன் இணைந்து வழங்கியதை இதற்குக் குறிப்பிட்டுக் கூறலாம். வெறுமனே பயிற்சி நெறிகள் மட்டுமல்லாது அதற்கும் அப்பால் தனது ஊழியர்களின் தொழிற் தகைமை விருத்தியைக் கவனத்திற் கொண்டு ஊழியர்கள் இனங் காணப்பட்ட ஊழியர்கள் சிலருக்கு அவர்களின் பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்வதற்குரிய நிதியுதவியினையும் வழங்குவதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது தமது ஆதரவினை வழங்கியது.

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறிக்கப்பட்ட நிர்வாக நிறைவேற்றுத் தரப்பில் இருந்து 11 ஊழியர்களும் நிறைவேற்றுத் தரமல்லாத ஊழியர்கள் 43 பேர்களுக்கும் உள்ளக மற்றும் வெளிநாட்டு ரீதியில் மேற்கொள்ளப்படும் அவர்களின் அலுவலகப் பணி மற்றும் வேலையுடன் நேரடித் தொடர்பான குறுகிய கால செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நெறி நிகழ்ச்சித்

திட்டங்களில் பங்கேற்றுக் கொண்டனர்.இந் நிகழ்ச்சித் திட்டங்களாவன SLF (இலங்கை பவுண்டேஷன்) , ICTA (இலங்கையின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர்) , NILS (ஊழியக் கற்கைகள் தேசிய நிறுவகம்), SLAB (இலங்கை தர உறுதிப்படுத்தல் சபை) , SDFL (திறமைகள் அபிவிருத்திக்கான நிதியம் லிமிடட்) , NCAS(உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையம்) , LEARN (இலங்கைப் கல்வி மற்றும் ஆய்வு வலைப்பின்னல் ) , CETRAC (கட்டுமான உபகரணப் பயிற்சி நெறி நிலையம்) , PRAG நிறுவகம் , CIDA (கட்டுமான நிறுவக அபிவிருத்தி அதிகார சபை) , PDC (உற்பத்தி அபிவிருத்தி நிலையம்) மற்றும் DMS மென்பொருள் பொறியியல் பிறைவட் லிமிடட் ஆகிய பிரசித்தி பெற்ற அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறி நிறுவகங்களினாலேயே மேற்கொள்ளப்பட்டது.

மேலும், நிர்வாக ஆளணியிரைச் சேர்ந்த 12 பெயர் குறிப்பிடப்பட்ட ஊழியர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி நெறி வாய்ப்புக்கள் இந்தியா, தாய்லாந்து, மோரிஷஸ், பங்களாதேஷ், இந்தோனேசியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளில் இடம்பெற்ற வித்தியாசமான பயிற்சி நெறிகள் மற்றும் செயலமர்வுகளில் கலந்து கொள்வதற்குரிய அனுசரணை மற்றும் பணிக் கால விடுமுறை என்பனவும் வழங்கப்பட்டன.

நிர்வாக ஆளணியினரில் 03 பேர்களுக்கு அவர்களுடைய தொழிற்றகைமை அபிவிருத்தி மற்றும் பணி அறிவு இ அதன் வெளிப்பாட்டினை வெளிக்கொணர்வதற்குரிய அவர்களுடைய எம்.பி.எ பட்டப்பின் கற்கையினை தொடர்வதற்குரிய நிதி உதவியானது வழங்கப்பட்டது.

### 7.5 சுகாதாரக் காப்புறுதித் திட்டம்

2018 ஆம் ஆண்டு இலங்கைக் காப்புறுதிக் கூட்டத்தாபனத்துடன் இணைந்து மேம்படுத்தப்பட்ட நன்மைகளுடன் கூடிய சுகாதாரக் காப்புறுதிப் பாதுகாப்பானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் உள்ள சகல நிரந்தர ஊழியர்களுக்காக வேண்டி வழங்கப்பட்டது.

### 7.6 பாராட்டு மற்றும் வரவேற்பு

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் செயலகத்தில் இணைந்து கொண்ட ஊழியர்களை வரவேற்ற அதே வேளை, 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினை விட்டும் விலகிச் சென்ற ஊழியர்களினால் ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பான உயர்ந்த பட்ச பாராட்டினைக் குறித்த அறிக்கையினை முன்வைப்பனை ஆணைக்குழுவானது விரும்புகிறது.

## 8. மனித வளங்கள் திணைக்களத்தின் முன்னேற்றம்

பல்கலைக்கழக முறைமைக்குரிய அதனுடைய பிரதான பொறுப்பான மனித வளங்கள் ஆதரவினை வழங்கி 2018 ஆம் ஆண்டில் மனித வளங்கள் திணைக்களமானது முறையான முன்னேற்றத்தினை வழங்கியது. திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்ட தொழிற்பாடுகளின் கீழ் நடத்தப்பட்ட பிரதான நடவடிக்கைகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

### 8.1 பதவியணியினர் மீளாய்வு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்ட பரிந்துரைகளின் பிரகாரம், 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்கள் புதிய பதவியணியனர் இடங்கள் 958 இற்கான அனுமதியானது முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் (DMS) வழங்கப்பட்டது. இவ் 958 பதவிகளின் தகவல்களும் கீழே அட்டவணை 8.1 அல் தரப்பட்டுள்ளது.

| ஊழியர் வகை | புதிய பதவியணியினர் இடங்கள் எண்ணிக்கை |
|---|---|
| கல்வி சார் | 267 |
| தற்காலிக / ஒப்பந்த ஆளணி | 127 |
| நிர்வாக மற்றும் இதர ஆளணி | 31 |

| | |
|---|---|
| கல்வி சார் உதவி | 57 |
| முகாமைத்துவ உதவியாளர் /தொழில் நுட்பம்- சாராத | 277 |
| முகாமைத்துவ உதவியாளர் /தொழில் நுட்பம் | 76 |
| திறமை வாய்ந்த / பகுதி திறமை வாய்ந்த / திறமையற்ற | 123 |
| **மொத்தம்** | **958** |

**அட்டவணை 8.1 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் என்பவற்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட புதிய பதவியணியினர்**

அட்டவணை 8.2 இல் காட்டப்பட்டவாறு, கடந்த ஐந்து ஆண்டுகளில் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய வெற்றிடங்களின் உயர்ந்த பட்ச எண்ணிக்கை 958 என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அம்சமாகும்.

| வகைப்பாடு | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|
| கல்வி சார் ஆளணியினர் | 8603 | 8696 | 9076 | 9187 | 9454 |
| கல்வி சார் உதவி ஆளணியினர் | 969 | 976 | 982 | 1004 | 1061 |
| மருத்துவ உத்தியோகத்தர்கள் உட்பட நிர்வாக மற்றும் இணைந்த கல்வி சார் ஆளணியினர் | 1096 | 1099 | 1117 | 1128 | 1159 |
| மற்றைய வகைப்பாடுகளின் மொத்தம் ( முதுமாணி, தொழில்நுட்ப, முதுமாணித்துவ / தொழில்நுட்பம் சாரா/ திறமையான /பகுதித் திறமை வாய்ந்த / திறமையற்ற மற்றும் தற்காலிக / ஒப்பந்த ஊழிய ஆளணியினர் | 11213 | 11266 | 11579 | 11752 | 12355 |
| **மொத்தம்** | 21,881 | 22037 | 22754 | 23071 | 24029 |
| முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்ட புதிய பதவியணி இடங்கள் | 225 | 156 | 717 | 317 | 958 |

**அட்டவணை 8.2 (2014 – 2018) வரையிலான காலப்பகுதியில் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் விபரங்கள்**

## 8.2 நிர்வாகத் தரங்களுக்கான நியமனங்கள் / பதவி உயர்வுகள்

2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் (திருத்தச் சட்டம்) மூலம் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டம் இல 16 இன் 71(2) இன் பிரிவின் (ii) மற்றும் (iii) பந்தியின் பிரிவு 8(1) ஆகியவற்றுக்கு அமைவாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது நிருவாக நிறுவனங்களின் பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றை செய்தல் வேண்டும். அதன்படி 2018 ஆம் ஆண்டுக்கான பின்வரும் நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகள் மேற்கொள்ளப்பட்ட விதம் அட்டவணை 8.3 மற்றும் 8.4 இல் காட்டப்பட்டுள்ளன.

| நியமிக்கப்பட்ட ஊழியர் வகையினர் | நியமனங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் / சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவி | 11 | |
| சிரேஷ்ட உதவிக் கணக்காளர் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி | 6 | |
| உதவிச் செயலாளர் / உதவிப் பதிவாளர் | 23 (உள்ளக வகைப்பாடு) | 40 (வெளிவாரி வகைபட்பாடு) |
| உதவிக் கணக்காளர் / உதவி நிதிப் பொறுப்பாளர் / உதவி உள்ளகக் கணக்காய்வாளர் | 2 (உள்ளக வகைப்பாடு) | 57 (வெளிவாரி வகைபட்பாடு) |

**அட்டவணை 8.3 2018 ஆம் ஆண்டின் நிர்வாகத் தரங்களுக்கான நியமனங்கள்**

| பதவி உயர்வு செய்யப்பட்ட வகைப்பாடு | பதவி உயர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர் / சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் பதவி (ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 668 இன் அடிப்படையில்) | 4 |
| பிரதிச் செயலாளர் / பிரதிப் பதிவாளர் பதவி | 12 |
| பிரதிக் கணக்காளர் /பிரதி நிதிப் பொறுப்பாளர் /பிரதி உள்ளகக் கணக்காய்வாளர் | 7 |

**அட்டவணை 8.4 2018 ஆம் ஆண்டின் நிர்வாகத் தரங்களுக்கான பதவி உயர்வுகள்**

## 8.3 நிர்வாகத் தரமல்லாத வேறு தரங்களில் உள்ள பதவிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் / பதவியுயர்வுகள்

1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டம் இல 16 இன் 71(2) இன் பிரிவு (iii) பந்திக்கு அமைவாக 2018 ஆம் ஆண்டில் வேறு ஆளணித் தரங்களில் ஏழு (07) நியமனங்கள் மற்றும் (08) பதவியுயர்வுகள் பின்வரும் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பிட்ட அத் தகவல்கள் அடடவணை 8.5 மற்றும் 8.6 இல் தரப்பட்டுள்ளன.

| நியமிக்கப்பட்ட பதவி | நியமனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பிரதான ஒழுக்காற்று உத்தியோகத்தர் | 1 |
| நில அமைப்பாளர் (நிலத்தோற்றம்) தரம் III | 2 |
| பணிப்பாளர் / உடற்றொழில் கல்வி | 1 |
| பணிப்பாளர் / செயற்பாடுகள் | 1 |
| தகவல் முறைமைகள் முகாமையாளர் | 1 |
| பிரதான மருத்துவ அதிகாரி | 1 |

**அட்டவணை 8.5 2018 ஆம் ஆண்டில் நிர்வாகத் தரமல்லாத வேறு தரங்களில் உள்ள பதவிகளுக்கான நியமனங்கள்**

| பதவி உயர்வு செய்யப்பட்ட பதவி | பதவி உயர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| இலஸ்ட்ரேசனிஸ்ட் தரம் I | 1 |
| ஆடியோ விசுவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம் I | 1 |
| சிரேஷ்ட ஆளணி தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 4 |
| பிரதான தொழில்நுட்ப உத்தியோகத்தர் | 1 |
| நிலப் பொறுப்பாளர் (தரைத்தோற்றம்)தரம் I | 1 |

**அட்டவணை 8.6 2018 ஆம் ஆண்டில் இதர ஆளணித் தரப் பதவிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பதவியுயர்வுகள்**

### 8.4 பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான இடமாற்றங்கள்

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 78 ஆம் பிரிவின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் பின்வரும் மொத்தமாக 218 இடமாற்றங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் செயற்படுத்தப்பட்டமை கீழே தரப்பட்டுள்ளது;

- ❖ நிர்வாகத்துறை சார்பான உத்தியோகத்தர்கள் - 38
- ❖ கல்விசாரா, நிர்வாகம் சாரா பதவி உத்தியோகத்தர்கள் - 180

### 8.5 சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை பகிர்தல்

பல்கலைக்கழகங்கள் /உயர்கல்வி நிறுவனங்களிடமிருந்தும் சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரங்களை பெறுவதற்காக 2018 ஆம் அண்டு ஜனவரி 01 அந் திகதி முதல் 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப் பகுதியில் மொத்தமாக 2102 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

இவைகள் 2016.07.14 ஆந் திகதிய வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைச் சுற்றறிக்கை இல 01/2016 திருத்தப்பட்டதன் படி பெறப்பட்டதுடன் , தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நகர்த் திட்டமிடல் , நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சிற்கு முன்வைக்கப்படும்.

## 9. பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்கு உயர் கல்விக்கான உதவி

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கொள்கைளுக்கு அமைவாக, கல்விசார் உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கென விஷேடமாக இளம் கல்வியாளர்களை தமது உயர் கல்வியினை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தொடரும் முகமாகவும் அத்துடன் பல்கலைக்கழக முறைமையினை ஊக்குவிப்பதுடன் ஆராய்ச்சிக் கலாச்சாரத்தை பலப்படுத்துவதற்காக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ஆய்வு மற்றும் சர்வதேசக் கூட்டுத் தாபனத்துடன் இணைந்து ஒத்திசைவான முயற்சியினை கடந்த 2018 ஆம் ஆண்டில் மேற்கொண்டு வந்தது. மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக் விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது:

### 9.1 பட்டப்பின் கற்கைக்கான நிதி உதவி

பல்கலைக்கழக முறைமையின் ஆதிக்க எல்லையின் கீழ் உள்ள உயர் கல்வி நிறுவகங்களில் கடமை புரியும் நிரந்தரப் பதவியில் உள்ள ஆசிரியர்களுக்கு அவர்களது முதுமாணிப் மற்றும் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை கற்பிப்பதற்கான உதவியினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வழங்கி வருகிறது. ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்படுகின்ற அடிப்படைத் தேவைப்பாடுகள் வழிகாட்டுதல்களைப் பூர்த்தி செய்திருப்பின், எந்தவொரு கற்கைத் துறையிள் கீழும் கடமை புரியும் தகுதி காண் நிலையில் உள்ள விரிவுரையாளர்கள் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களும் இதற்கு விண்ணப்பிப்பதற்குத் தகுதி பெறுகின்றனர். 2018 ஆம் ஆண்டு முதல், இத் திட்டத்தின் கீழான நிதி உதவியானது ரூபா.மில்லியன் 2.0 வரை அதிகரித்ததுடன் வருடமொன்றிற்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவானது வருடாந்தம் 1.5 மில்லியன் வரை அதிகரித்துள்ளது.

2018 ஆம் ஆண்டில் இத் திட்டத்திற்காக வேண்டி பொருத்தமான தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் அதே நேரம் இதனைப் போன்ற அதற்கு நிகராக உலக வங்கியின் நிதி உதவியுடன் உருவாக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி (AHEAD). 2018 ஏப்ரில் மாதம் விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதியாக இருந்ததுடன் அவ்வேளை பெற்றுக் கொள்ளப்பட்ட 57 விண்ணப்பங்களுள் 31 விண்ணப்பங்களானவை (AHEAD) நிதி மூலம் மேற்கொள்ளப்பட்டதாக இருந்ததுடன் அத்தகைய விண்ணப்பங்கள் (AHEAD) கருத்திட்டக் காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் திட்டத்தின் கீழ் தெரிவுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட 18 மானியங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ஏற்றுக் கொண்டதன்

பிரகாரம், தெரிவான 26 விண்ணப்பதாரிகளுக்குமான நேர்முகப் பரீட்சையானது 2018 ஆம் ஆண்டு ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இடம்பெற்றன. அதிகரித்த வயதெல்லை காரணமாக கிடைக்கப்பெற்ற 02 விண்ணப்பங்கள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் உயர் கற்கைகளுக்கான தேசிய நிலையத்திற்கு (என்.சி.எ.எஸ்) அனுப்பி வைக்கப்பட்டன. இரண்டாம் சுற்றுக்கான விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதியானது 2018 டிசம்பர் மாதம் 21 ஆந் திகதியாக இருந்ததுடன் இக் காலப்பகுதியில் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் 2019 ஆம் ஆண்டின் முதல் தவணையில் செயன்முறைக்கு உட்படுத்தப்படவுள்ளது.

### 9.2 இற்றைப்படுத்தப்பட்ட குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் (QUT) பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது அவுஸ்திரேலியா குயின்ஸ்லாந்து தொழில்துறை பல்கலைக்கழகத்தோடு இணைந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள உயர் கல்வி நிறுவகங்களின் பல்கலைக்கழக கனிஷ்ட கல்வியாளர்களின் பயன் விளைவின் நிமித்தம் ஓர் இணைந்த பி.எச்.டி நிகழ்ச்சித்திட்டத்தினை அறிமுகப்படுத்தி செயற்படுத்திக் கொண்டு வருகிறது. இத் திட்டத்தின் கீழ், விண்ணப்பதாரர்கள் இரண்டு மேற்பார்வையாளர்களின் கீழ் பணியாற்ற வேண்டியருப்பதுடன் (குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் உள்ளூர் பல்கலைக்கழகத்தினால் வெவ்வெறாக நியமிக்கப்படும்) மற்றும் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் ஒன்றுக்கு ஒன்று மற்றும் அரை வருடங்கள் கழிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது வகுப்புக் கட்டணத்தை தவிர்ப்பதற்கு ஒத்துக் கொண்டதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது வெளிநாடுகளில் இருக்கும் தமது விண்ணப்பதாரிகளின் வாழ்க்கைச் செலவுகள் மற்றும் அவர்களின் உள்ளூர் வகுப்புக் கட்டணங்களைச் செலுத்தி வருகிறது, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 2015 ஒக்தோபர் மாதம் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்துடன் இணைந்து இணைந்த கலாநிதப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை கொழும்புப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கையின் இதர பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பகுதி சார் / வெளிவாரி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்காக வேண்டி புதியதொரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைக் கைச்சாத்திட்டது. மேலும், குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம், 2018 ஜுலை மாதம் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினையும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு மத்தியில் இணைந்த கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக இலங்கையின் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டு பல்கலைக்கழகங்களுடனும் இணைத்துக் கொண்வதறகுரிய அனுமதியினை ஆணைக்கழுவானது வழங்கியது. இருப்பினும், தேவையான அனுமதிகளைப் பெற்றதன் பிற்பாடு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு மத்தியில் 2018 செப்தெம்பர் 08 ஆந் திகதி சங்கிரிலா ஹோட்டலில் மீளமைக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது கைச்சாத்திடப்பட்டது. இகைச்சாத்திட்ட இற்றைப்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது 12 ஆய்வு பயற்சி நெறி நிகழ்ச்சித்திட்டங்களை (RTP) சர்வதேச அனுசரணையுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இணக்கப்பாட்டுடன் வழங்குவதற்கு ஒத்துக் கொண்டுள்ளது. குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது ஆறு பூரண வகுப்புக்களுக்கான புலமைப்பரிசிலை மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான உயர் தேசிய நிலையம் மூலமாக பல்ககலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள உயர் கல்வி நிறுவகங்களின் கனிஷ்ட கல்வியியலாளர்களுக்கு அவர்களுடைய கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான உயர் தேசிய நிலையத்துடன் வேறாக கைச்சாத்திடப்பட்டு ஒப்பமிடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் வழஙகவுள்ளது.

மேலும், குயின்ஸ்லாந்து தொழில்நுட்ப பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான உயர் தேசிய நிலையத்துடன் இணைந்து 2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆந் திகதி

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் / ஆசிரியர்களுக்காக வேண்டி பின்வரும் மூன்று துறைகளை தழுவிய விதமாக அதாவது முதலாவதாக கலாநிதிப் பட்ட முன்மொழிவு எழுதுதல் இரண்டாவது சரியான மேற்பார்வையாளர்களைக் கண்டு பிடித்தல் மற்றும் மூன்றாவது புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பச் செயன்முறை என்பவற்றை உள்ளடக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தினை ஒழுங்கு செய்தது.

**9.3 இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு - ஜப்பான் சர்வதேசப் பல்கலைக்கழகம் (IUJ) கலாநிதி / முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்துடன் இணைந்து (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழுள்ள இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உள்ள கல்வி சார் மற்றும் நிர்வாகம் சார் உத்தியோகத்தர்களின் நன்மைக்காக வேண்டி அவர்களுடைய பட்டப்பின் கற்கைகளை ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்யும் விதத்தில் ஜப்பான்-இலங்கை நாடுகளின் இணை அனுசரணையுடன் ஒரு புலமைப்பரிசில் திட்டத்தை ஜப்பான் அறிமுகப்படுத்தியுள்ளது. இரண்டு தரப்பினர்களாளும் கைச்சாத்திடப்பட்ட அபிப்பிராயக் கடிதத்தின் படி, (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழமானது 50% வகுப்புக் கட்டணத்தினைச் செலுத்துவதற்கு உடன்படுவதுடன் மிகுதி 50% இனை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது செலுத்துவதுடன் ஒரு விண்ணப்பதாரிக்குரிய மாதாந்த வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுத் தொகையாக ஜப்பானிய யென் பெறுமதியான ரூபா.80,000 இனை வழங்குகிறது. இருப்பினும், 2018 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சாதாரண நிதித் திட்டத்தின் கீழ் பட்டப்பின் கற்கைகளுக்காக புதிதாக மேம்படுத்தப்பட்ட புதிய நிதி வரையறைகளின் கீழ்இ இத் திட்டத்தின் கீழ் மானியதாரர்களுக்கான வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவானது ஜப்பான் நாட்டின் உயர் வாழ்க்கைச் செலவுக் கொடப்பனவானது ஜப்பானிய யென் பெறுமதி 90இ000 இனால் அதிகரிக்கப்பட்டது. அபிப்பிராயக் கடிதத்தின் படி (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகமானது இப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலாநிதிப் பட்டத்திற்காக (பி.எச்.டி) வருடாந்தம் கூடிய பட்சம் 02 விண்ணப்பதாரர்களை அனுமதிப்பதுடன் அதன் முதுமானி நிகழ்ச்சித் திட்டத்திற்காக வேண்டி கூடியபட்சம் 10 விண்ணப்பதாரிகளை அனுமதிக்கின்றது. இருப்பினும்இ கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக கிடைக்கப் பெற்றிருக்கும் உயர் எண்ணிக்கையிலான விண்ணப்பங்களை கருத்திற் கொண்டு, (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகமானது அதனுடைய கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக வேண்டி வருடாந்தம் அனுமதிக்கின்ற எண்ணிக்கையினை மூன்று இடங்களால் அதிகரிப்பதற்குரிய அனுமதியினை வழங்கியது.

2018 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பதாரிகள் தெரிவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகம் ஆகிய இரண்டினாலும் விதிக்கப்படும் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு அதனடிப்படையில் இணைந்த அமைப்பில் மேற்கொள்ளப்பட்டது. 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் விண்ணப்பங்கள் கோரப்பட்டதுடன் கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 04 விண்ணப்பங்களும், முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக 03 விண்ணப்பங்களும் இறுதித் திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெற்றன.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தெரிவுக் குழுவானது (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தின் கண்காணிப்பிற்காக ஆய்வு முன்மொழிவுகள் சிலவற்றின் மீட்டல்கள் கொண்ட சகல விண்ணப்பங்களையும் கருத்திற் கொள்ளுமாறு கூறியதுடன், அவ்வாறு (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகமானது மீட்டப்பட்ட அய்வு முக்மொழிவுகளைக் கருத்திற் கொண்டு, கலாநிதிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக 03 விண்ணப்பதாரிகளையும், முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக வேண்டி 02 விண்ணபப்தாரிகளையும் தெரிவு செய்தது. எவ்வாறு இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து, (IUJ) ஜப்பான் சர்வதேச பல்கலைக்கழகத்தில் இது வரைக்கும் ஒருவர் மாத்திரமே அவருடைய முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பித்துள்ளதுடன், ஏனைய நான்கு பேர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அவர்களுடைய நிதியினைப் பெறுவதற்காக வேண்டி

தமது குறிப்பிட்ட தேவைப்பாடுகளை இன்னும் பூர்த்தி செய்ய வேண்டிய நிலைப்பாட்டில் இருக்கின்றனர்.

### 9.4 அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மத்தியில் முன்மொழியப்பட்ட பரிந்துணர்வு ஒப்பந்தம்

அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தினைப் பூர்த்தி செய்வதற்குரிய தேவைப்பாடுகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழான உயர் கல்வி நிறுவகங்களில் உள்ள கல்வி சார் ஆளணியினருக்கு மத்தியில் கல்வி சார் கூட்டுறவினை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மத்தியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருடன் இடம் பெற்ற ஆரம்பப் பேச்சு வார்த்தையின் அடுத்த கட்ட நகர்வுக் கலந்துரையாடலைத் தொடர்வதற்காக அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகத்திலிருந்து பிரதிநிதியொருவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரிகளை 2018 ஒக்தோபர் மாதம் 29 ஆந் திகதி சந்தித்தது. இக் கூட்டத் தொடரின் போது அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகத்தின் அலுவலகர்களுள் பேராசிரியர் சாரா டொட், உப தலைவர் (பூகோள) ஆகியோர் இலங்கையில் உள்ள பல்கலைக்கழக கல்வியியலாளர்களுக்க அவர்களுடைய கலாநிதிப் பட்டக் கற்கையினை அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகத்தில் அவர்களால் வழங்கப்படும் வகுப்புப் புலமைப்பரிசில் வாய்ப்புக்களை விரிவாக்கி அதனை வெளிக் கொணர்வதற்கு ஒத்துக் கொண்டது. அதனடிப்படையில், இப் புரிந்துணர்வு உடன்படிக்கையினைச் செயற்படுத்துவதற்குரிய புரிந்துணர்வு உடன்படிக்கை வரைவானது தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவின் அனுமதிக்காக 2019 ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதியில் முன்வைக்கப்பட்டது.

இப் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதான நோக்கானது இரண்டாம் நிலை மட்டத்தில் கல்விசார் மற்றும் ஆய்வுப் பங்களிப்புக்கள் எதிர்பார்க்கப்படுகின்ற அதே வேளை இலங்கைக் கல்வியியலாளர்களுக்காக அவுஸ்திரேலிய குயின்ஸ்லாந்து கிரிபத் பல்கலைக்கழகத்தில் கலாநிதிக் கற்கைகளை வழங்குவது ஆகும்.

### 9.5 ஜேர்மன் ஹெய்ட் பெர்க் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவகத்தில் இலங்கையின் தலைமை

ஜேர்மன் ஹெய்ட் பெர்க் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவகமானது இலங்கை அரசாங்கம் மற்றும் ஹெய்ட் பேர்க் பல்கலைக்கழகத்துடன் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தலைவர் அவர்களின் ஜேர்மன் நாட்டுக்கான அலுவலகச் சந்திப்பின் விளைவாகவே 2016 ஆம் ஆண்டில் இலங்கைக் கற்கைகளுக்கான அதன் தலைமையினை உருவாக்கியுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் நிமித்தம் இப் புரிந்துணர்வு உடன்படிக்கையினை அமுலாக்கம் செய்வதற்குரிய பொறுப்பானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் வழங்கப்பட்டது.

விமர்சனைக்குரிய ஆண்டு காலப் பகுதியில்இ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது மூன்று தடவைகள் இலங்கைத் தலைமைக்கான விண்ணப்பங்களைக் கோரியதுடன் இப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ஜேர்மன் ஹெய்ட் பெர்க் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவகமானது இலங்கை விண்ணப்பதாரிகள் மத்தியிலிருந்து கடந்த மூன்று தவணைகளில் இனங்காணப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழான துறைகளில் மூன்று தலைமைகளை தெரிவு செய்தது. ஜேர்மன் ஹெய்ட் பெர்க் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவகமானது நான்காவது தடவையாகவும் இலங்கைத் தலைமைக்கான விண்ணப்ப கோரலை மேற்கொண்டிருப்பதுடன் 2018 ஆம் அண்டு டிசம்பர் மாதம் 12 ஆந் திகதி இதன் இறுதித் திகதியாகவும் உள்ளது. அதனடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது சகல பல்கலைக்கழகங்களினதும் உப வேந்தர்களுக்கு தத்தம் துறைகளில் உள்ள கல்வி சார் ஆளணயினரின் அவதானத்திற்கு இவ் விடயத்தினைக் கொண்டு வருவதுடன் ஜேர்மன் ஹெய்ட் பெர்க் பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவகத்திற்கு உரிய தகவல்களுடன் நேரடியாக விண்ணப்பிப்பதற்கு ஊக்குவிக்குமாறு கூறிக் கொண்டது. தெரிவு செய்யப்படுகின்ற தலைவருக்கு ஓய்வு விடுமுறை மற்றும் விமானப் பயண ஏற்பாடுகள் உரித்தாக்கப்படும்.

### 9.6 ஐக்கிய இராச்சியத்தில் பொதநலவாய மருத்துவத் தோழமை - 2018

ஒரு பொதுநலவாய மருத்துவத் தோழமை ஐக்கிய இராச்சியத்தில் 2018 மே மாதம் விளம்பரப்படுத்தப்பட்டதுடன் பொதுநலவாய புலமைப்பரிசில்கள் ஆணைக்கழுவினால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களின் பிரகாரம் ஒரு பிரதிநிதியை முன்வைக்குமாறு கோரிக்கை

விடப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது உரிய அதிகாரிகளினால் தெரிவு செய்வதற்காக வேண்டி நான்கு பிரதிநிதிப் போட்டியாளர்களை இறுதிப் பட்டியலிட்டது.

## 9.7 உலக வங்கி நிதி உதவியுடனான " அதிகரித்த உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி " அறிமுகச் செயலமர்வு (AHEAD)

இலங்கை அரசாங்கத்தினால் வேண்டிக் கொள்ளப்பட்ட கோரிக்கை ஒன்றின் பிரகாரம் உலக வங்கியானது இக் கருத் திட்டத்தின் கீழ் மிதமான கடன் உதவியை வழங்க இணங்கியது. உயர் கல்வி விரவாக்கம் மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்தல் (AHEAD) கருத் திட்டமானது மீளாய்வாண்டின் போது உலக வங்கியின் நிதி உதவியுடன் அதாவது உயர் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழ் 100 மில்லியன் பெறுமதியான அமெரிக்க டொலர்களை இலங்கையின் உயர் கல்வித் துறையை வலுப்படுத்தும் நோக்குடன் மீளாய்வாண்டின் போது இக் கருத் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது.

2018 பெப்ரவரி மாதம் உலக வங்கி உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் (AHEAD) கருத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள சகல பல்கலைக்கழகங்களக்குமான அறிமுகச் செயலமர்வானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. இந் நிகழ்வின் போது சகல பல்கலைக்கழகங்களினதும் உப வேந்தர்கள் உட்பட பல சிரேஷ்ட கல்வியியலாளர்கள் பங்கேற்றுக் கொண்டனர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இது தொடர்புடைய உத்தியோகத்தர்களும் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

நாட்டின் உயர் கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்காக இலங்கை அரசாங்கத்தினால் அதற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆழமான முக்கியத்துவத்தினை இக் கருத் திட்டமானது வலியுறுத்துவதுடன் இதனட பிரதான நோக்காவது அரசாங்கத்தின் உயர் கல்வி அபிவிருத்தி முலோபாயங்களை (HEDS) இற்கு பங்களிப்புச் செய்வதாகும். இந் நிகழ்ச்சித் திட்டமானது உயர் கல்வி முறைமைக்கு ஆதரவளித்து கல்வி கற்ற மற்றும் அறிவார்ந்த வேலைப் படையினரை உருவாக்குவதுடன் சகலருக்குமான வாய்ப்புக்களை மேம்படுத்தும் நோக்குடனே இது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

யுர்நுயுனு கருத்திட்டமானது அதனுடைய நிகழ்ச்சியினை பிரதான மூன்று பெறுபேற்றுத் துறைகளின் கீழ் அமுல்படுத்துகின்றது.

**பெறுபேற்றுத் துறை 1- *பொருளாதார அபிவிருத்திக்கான முக்கியமான துறைகளில் உயர் கல்வியில் பங்கேற்பினை அதிகரித்தல்:*** இதன் கீழ் கருத்திட்டமானது மருத்துவம் ,பொறியியல், தகவல் தொழில் நுட்பம், தொழில் நுட்பத்தினை அடியொட்டிய பீடங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை இலக்காகக் கொண்டு அத்தகைய துறைகளில் இளமாணிப் பயிலுனர்களின் விரிவாக்கம். உபகரண மானியங்கள் , சில உட்கட்டமைப்பு மானியங்கள் பெறுபேற்றுத் துறை 1 இன் கீழ் பலல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டன.

***பெறுபேற்றுத் துறை 2 - உயர் கல்வியின் தர மேம்பாட்டினை அதிகரித்தல்:*** பின் வரும் துறைகளின் கீழ் நிதி உதவியானது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

- கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பீட்டினை வலுப்படுத்தல் (ETLA) மற்றும் ஆங்கில மொழித் திறன்களின் மேம்பாடு (ELSE)
- தொழிற் தகைமை அபிவிருத்தி – பட்டப்பின் கற்கைகளுக்கான நிதி உதவி, ஆளுமை விருத்திக்கான குறுகிய காலப் பயிற்சி நெறி
- ஞயுயு வேலையினை வலுப்படுத்தல்

***பெறுபேற்றுத் துறை 3 - ஆய்வு அபிவிருத்தி மற்றும் புத்தாக்கத்தினை மேம்படுத்தல்:*** ஆய்வுக் கலாசாரம் , அபிவிருத்தி , புத்தாக்கம் மற்றும் வர்த்தக மயப்படுத்தல் நோக்கத்துடன் அபிவிருத்தி செய்யப்பட்ட (RDIC) இற்கு மானியங்கள் ஆனவை பின்வருதம் மூன்று துறைகளின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.:

- போட்டித் தன்மை வாய்ந்த செயலாற்றுகை முறைமை- ஆய்வுக் கருத் திட்டங்களை மையமாகக் கொண்டது.
- STEMS- HEMS உள்ளகத் துறை அய்வு
- பல்கலைக்கழக வணிக இணைப்புக்களை அபிவிருத்தி செய்தல்

## 9.8 எரஸ்மஸ் + நிகழ்ச்சித்திட்டம்

ஐரோப்பிய யூனியனின் எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டமானது கல்வி ,பயிற்சி நெறி , இளம் சமுதாயத்தினர் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் ஆதரவளிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிதித் திட்டமாகும்.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய யூனியனைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவர்கள் எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டம் மற்றும் இலங்கையின் உயர் கல்வித் துறையினை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு 2018.12.11 ஆந் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களைச் சந்தித்தனர். எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இலங்கை உயர் கல்வித் துறையானது விஷேடமாக நன்மை அடைய முடியுமான பல்வேறுபட்ட திட்டங்களை ஆராய்ந்து மேம்படுத்துவதனையே இக் கலந்துரையாடலானது பிரதான தொனிப் பொருளாகக் கொண்டிருந்தது.

இலங்கை அரச பல்கலைக்கழகங்களின் பிரதிநிதிகள் சிலர் ஆணைக்கழுவின் உறுப்பினர் ஒருவரின் பங்குபற்றலுடன் மலேசியாவின் கோலாலம்பூரில் 2018.12.10 ஆந் திகதி இடம் பெற்ற செயலமர்வொன்றில் கலந்து கொண்டனர். இதன் பொது இலங்கைக்கான ஐரோப்பிய யூனியனின் அதிகாரிகளுடன் மற்றும் ஒரு இணைந்த கூட்டத்தொடரில் இலங்கையின் உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் நிறுவகங்களுடன் மேற்கொண்டது.

எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டத்தின் உத்தியோகபூர்வ ஏற்பாட்டாளர்கள் எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டம் + CBHE கருத்திட்டங்கள் மற்றும் அக் கருத்திடடங்களினால் இலங்கைக்குரிய தாக்கம் உட்பட இலங்கையின் பெரும் பங்களிப்பினை அதிகரிக்கும் நோக்கத்துடன் அதற்குரிய வழிமுறைகளை கலந்தாலோசிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் சந்திப்பொன்றினை மேற்கொண்டது.

எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டத்தினால் கிடைக்கப் பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம்இ இலங்கைக்கு கிடைக்கப் பெற முடியுமான 2019 எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டத்தின் முன்மொழிவு கோரல் மற்றும் புலமைப்பரிசில் குறித்து சகல பல்கலைக்கழகங்களுக்கும் அறிவிக்கப்பட்டது. இலங்கை மற்றும் மாலை தீவுக்கான ஐரோப்பிய யூனியரின் உத்தியோகபூர்வ அதிகாரிகளுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது எரஸ்மஸ் + நிகழ்ச்சித் திட்டம் போன்ற ஐரோப்பிய நிதியீட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பெரும்பாண்மையான நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக அதனுடன் இணைந்து செயற்படவுள்ளது. ஐரோப்பிய யூனியன் நிறுவகங்கள் மற்றும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் மத்தயில் ஒத்துழைப்பினை அபிவிருத்தி செய்யவும் 2019 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக ஊழியர்களுக்கு உயர் கல்விக்கான சந்தரப்பங்களை வழங்கவும் ஆகியநோக்கங்களுக்காகவே இது இயங்கி வருகிறது.

## 9.9 பல தரப்பட்ட தோழமைகள் / புலமைப்பரிசில்கள் / பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்தரங்குகளை வழங்குதல்

2018 ஆம் ஆண்டின் போது, பல்வேறு வகையான புலமைப்பரிசில்கள், தோழைமகள் , கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பல தரப்பட்ட வித்தியாசமான அதிகாரமுடையவர்கள் இடமிருந்து 26 கருத்துக்களை (Notifications) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பெற்றுக் கொண்டது. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் சகல பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்கள் அல்லது உரிய பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது கலந்துரையாடலை மேற்கொண்டது;

I. ஒளி மற்றும் உயிரியல் சக்தி தொடர்பான சிக்கலான தொடர்பாடல் பற்றிய செயலமர்வு: 2018 ஆம் ஆண்டு மே மாதம் 21-25 வரை, டிரஸ்டெ, இத்தாலி

II. உரோமானிய அரசாங்கத்தினால் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டங்கள்

III. காலநிலை மாற்றங்கள் தொடர்பான கொள்கை, தத்துவங்கள் மற்றும் உயர்ரகப் படிமுறை மாதிரி பற்றிய ICTP கோடை கால பாடசலை, ஜுன் 25 – 2018 ஜ7ூலை 5, டிரஸ்டெ, இத்தாலி

IV. UNESCO / ISEDC இணைந்து வழங்கும் தோழமை நிகழ்ச்சித் திட்டம்

V. 10 ஆவது வருடாந்த நெல்சன் மண்டேலா உலக மனித உரிமைகள் மூட் கோர்ட் போட்டி, சுவிட்சர்லாந்து 2018 ஜுலை 15-20 வரை

VI. முதலாவது கருத்திட்டக் கூட்டத்தொடர் மற்றும் செயலமர்வு, 2018 மே மாதம் 14 – 17, வியன்னா, ஒஸ்ரியா

VII. Security of Radioactive Material தொடர்பிலான சர்வதேச மாநாடு, 2018 திசெம்பர் 03-07 வியன்னா, ஒஸ்ரியா

VIII. அணுத் தொழில்நட்பத்தினைப் பயன்படுத்தி பச்சை வீட்டு வாயுப் பரம்பல் தொடர்பிலான முதலாவது ஒருங்கிணைப்பு மற்றும் செயலமர்வு, நஞ்சிங், சீனா

IX. கருத்திட்ட நடுத் தவணை மீளாய்வுக் கூட்டம் 2018 மே மாதம் 14-17, பொல்கானா , இத்தாலி

X. 2018 இல் வளர்ந்து வரும் பிராந்தியங்களுக்கான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முன்னேற்றம் குறித்த சர்வதேச மாநாடு

XI. ஜெஸ்மின் ஜியன்சு அரசாங்கப் புலமைப்பரிசில் திறமை நிகழ்ச்சித் திட்டம், சீனா

XII. இலங்கை –கட்டார் பொருளியல், வர்த்தக மற்றும் தொழில்நுட்ப கூட்டுத்தாபனம் தொடர்பிலான 2 ஆவது கூட்டுக் குழுத் தொடர்- சினமன் லெக்சய்ட், கொழும்பு, 2017 ஒக்தோபர் 30-31

XIII. கொலம்பியா அரசாங்கத்தினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்

XIV. சவூதி அரேபிய இராச்சியத்தின் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள்

XV. கல்விசார் புத்தாக்கத்திற்கான வென்கூய் விருது 2018 பாடசாலையில் புத்தாக்கம், தரமான கல்விக்கான குடும்ப மற்றும் சமூக கூட்டிணைவு

XVI. வருகை தரு ஆய்வாளர் நிகழ்ச்சித் திட்டம் - பிஷ்ஷப் வில்லியம்ஸ் ஞாபகாரத்த நிதியம் -2018 / 2020

XVII. பட்டப்பின் புலமைப்பரிசிலுக்கான சோலாபொர்ன் பட்டப் படிப்பு நிறுவகம்

XVIII. மூன்றாவது மேற்கத்தேய சீன சர்வதேச கண்காட்சி மற்றும் இரண்டாவது சிச்சுவான் தொழில் சார் கல்விக் கண்காட்சி,2018 சென்குடு , சீனா

XIX. ஐக்கிய இராச்சிய பல்கலைக்கழகங்களில் பி.எச்.டி தோழைமகளுக்கான நிதி வாய்ப்புக்கள்

XX. சிரிந்தோர்ன் சர்வதேச தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (SIIT) , தம்மாசட் பல்கலைக்கழகம்: திறமை வாய்ந்த வெளிநாட்டு மாணவர்களுக்கான இளமாணிப்பட்ட மற்றும் பட்டப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் (EFS)

XXI. திறமை வாய்ந்த வெளிநாட்டு மாணவர்களுக்கான பட்டப் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் (பொறியியல் மற்றும் தொழில்நுட்பம்) , 2018 தாய்லாந்து

XXII. சர்வதேச கோடைக் கால பாடசாலை, ஒஸ்லோ பல்கலைக்கழகம் 2019 ஜுன் 24- ஆகஸ்ட் 2

XXIII. தொழில்சார் கணக்கீடு முதுமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டம் (MP Acc)- ஆட்சேர்ப்பு IV (2019)

XXIV. தெற்காசிய பல்கலைக்கழகத்தின் வெற்றிட அறிவித்தல் (SAU)

XXV. இலங்கையர்களுக்கான "அல்லாமா இக்பால் புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டத்தினை" ஆரம்பித்தல்

XXVI. கொள்கைப் பொருளியல் முதுமாணிப் பட்டம், வில்லியம்ஸ் கல்லாரியில் பொருளியல் அபிவிருத்திக்கான நிலையம்

## 10. உட்கட்டமைப்பு அபிவிருத்தி

மீளாய்வாண்டில் மொத்த தொகையாக ரூபா19,469 மில்லியனானது புதிய கட்டுமானம் மற்றும் தொடரும் செயற்றிட்டங்கள், புனரமைப்பு செயற்றிட்டங்கள், கொள்வனவுகள், புதிதாக அமைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் அத்துடன் மாணவர்களுக்கான அறிவுத்திறன் உருவாக்க செயற்பாடுகள் ஆகியவற்றுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டது. திறைசேரியானது ரூபா17,230 மில்லியன் தொகையினை மாத்திரமே சிபாரிசு செய்தது, இருப்பினும் திறைசேரியினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளின் காரணமாக பல்கலைக்கழகங்களாலும், உயர் கல்வி நிறுவனங்களும் 2018 ஆம் ஆண்டு இறுதியில் திறைசேரியால் விடுவிக்கப்பட்ட ரூபா14,098 மில்லியன் தொகையை மாத்திரமே பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது.மேற்சொன்ன மொத்தத் தொகையானது மனித மூலதன அபிவிருத்தி மற்றும் ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஆகிய செலவுகளை உள்ளடக்கியதாகும்.

2018 ஆம் வருடத்தில் பல்கலைக்கழகங்களிலிருந்தும், உயர் கல்வி நிறுவகங்களிலிருந்தும் 48 புதிய பிரேரணைகள் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெற்று, அவற்றை, கவனமாக ஆராய்ந்து மதிப்பிடப்பட்டு, ஆணைக்குழுவினால் 26 பிரேரணைகள் மாத்திரமே கடந்த வருட இறுதிப்பகுதியில் வைத்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டது. தேசிய திட்டமிடல் திணைக்களம் 2018 ஆம் ஆண்டு 14 புதிய பிரேரணைகளுக்கு அனுமதி வழங்கியது. முன்னைய வருடத்தில் பெற்றுக்கொண்ட பிரேரணைகள் உள்ளடங்கலாக மொத்தமாக 19 செயற்றிட்டங்களுக்கு அமைச்சரவை 2018 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியது.11 செயற்றிட்டங்கள் பௌதீக ரீதியாக 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.வருட இறுதியில் பல்கலைக்கழக முறைமையின்கீழ் ரூபா 47,783 மில்லியன் பெறுமதியான 90 கட்டுமான செயற்றிட்டங்கள் வடிவமைப்பு மற்றும் நிர்மாணித்தல் செயல் முறையின் பல்வேறு மட்டங்களில் செயற்பட்டுக் கொண்டிருந்தன.அத்துடன் விமர்சனைக்குரிய ஆண்டில் ரூபா 30,248 மில்லியன் பெறுமதியுடைய 98 செயற்றிட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழக முறைமைக்கு கையளிக்கப்பட்டன.

மேற் சொன்ன தகவல்கள் யாவும் அட்டவணை 9.1 இல் தரப்பட்டிருப்பதுடன் முன்னைய இரண்டு ஆண்டுகளின் தகவல்களும் ஒப்பீட்டு நோக்கத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பு : * முன்னைய ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவகளை உள்ளடக்கியது.
# கருத்திட்டத்தின் பௌதீக நிலைமை மாத்திரமே கருத்திற் கொள்ளப்பட்டது.

| விடயக் குறிப்பு | 2016 | | 2017 | | 2018 | |
|---|---|---|---|---|---|---|
| | கருத்திட்டங்களின் எண்ணக்கை | மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி (ரூபா.மில்லியன்) | கருத்திட்டங்களின் எண்ணக்கை | மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) |
| ப.மா.ஆ.வினால் பெறப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 59 | 36,784.59 | 61 | 42,601.52 | 48 | 28,979.42 |
| ப.மா.ஆ.வினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 41* | 23,566.12 | 36* | 22,680.38 | 26* | 24,719.24 |
| தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 43* | 25,478.28 | 34* | 21,997.38 | 26* | 24,719.24 |
| தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 47* | 26,106.74 | 26* | 17,799.62 | 14* | 14,213.46 |
| அமைச்சரவையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட பிரேரனைகளின் எண்ணிக்கை | 49* | 28,667.67 | 40* | 15,438.45 | 19* | 22,846.03 |
| நடப்பாண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களின் | 10*# | 2,390.85 | 50*# | 32,353.50 | 11*# | 7,117.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | | | | | | |
| தற்போது செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 182*# | 49,148.00 | 122*# | 49,972.00 | 90*# | 47,783.00 |
| பூர்த்தியடைந்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை | 27*# | 3,470.09 | 59*# | 12,454.00 | 98*# | 30,248.00 |

**அட்டவணை 10.1 2016 – 2018 வரையிலான காலப்பகுதியில் முன்மொழிவுக் கருத்திட்டங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தி முன்னேற்றம்**

## 10.1 பல்கலைக்கழகங்களின் பிரதான உட்கட்டுமான அபிவிருத்திகள் - 2018

2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் ஆரம்பித்து செயற்பாட்டில் உள்ள பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன;

- இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தின் பல் நோக்குக் கட்டடம்- ரூபா. 1,364 மில்லியன்
- இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வர்த்தக பீடத்தின் பல் நோக்குக் கட்டடம்- ரூபா. 1,761 மில்லியன்
- கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம்- ரூபா 2,087 மில்லியன்
- ஸ்ரீ ஜயவர்தனபர பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடம்- ரூபா 2,640 மில்லியன்
- மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் திரவிய விஞ்ஞானங்கள் திணைக்களம் மற்றும் பொறியியல் கட்டடம்- ரூபா.439 மில்லியன்
- மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறிமுறைப் பொறியியல் கட்டடம்- ரூபா. 247 மில்லியன்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணிணி விஞ்ஞானத் திணைக்களத்துக்கான கட்டடம்- ரூபா. 240 மில்லியன்
- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடங்களுக்கான கலைக் கட்டடத் தொகுதி- ரூபா.1,125 மில்லியன்
- உறுகுணைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கான 12 மாடிக் கட்டடம்- ரூபா.1,179 மில்லியன்
- உறுகுணைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கான 10 வார்ட் மாடிக் கட்டடத் தொகுதி- ரூபா. 1,300 மில்லியன்
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் FAMS இற்கான முன் மருத்துவக் கட்டடம்- ரூபா.896 மில்லியன்
- இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் கழிவு நீர் மற்றும் செவேஜ் சிகிச்சைத் தாவரம்- ரூபா.200 மில்லியன்
- இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம்- ரூபா.3,229.4 மில்லியன்

## 11. தகவல் தொழில்நுட்ப உதவி

வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தின் தகவல் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்காக வேண்டி ஆரோக்கியமான மற்றும் தடைகளற்ற கணிணி முறைமையின் வாயிலாக தகவல் தொழில்நுட்பப் பிரிவானது முகாமைத்துவ உதவியினை வழங்கி வருகிறது. புதிய தகவல் தொழில்நுட்ப முறைமைகளின் அபிவிருத்தி மற்றும் இன்ஸ்டொலேஷன், ஏலவே இருக்கின்ற மறைமையினை மேம்படுத்தல், தேவைப்பாடுகள் / குறிப்பிடப்பட்ட விடயங்களின் உருவாக்கம்இ கணிணி மற்றும் தொடர்பாடல் முறைமையின் ஒட்டு மொத்த நிர்வாகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்கழு மற்றுமு் பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்கள் ஆகியவற்றின் ஒட்டு மொத்த நல்லாட்சியினையும் மேம்படுத்தக் கூடிய தரவுச் செயற்பாட்டு நடவடிக்கைகள் என்பன இப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் சிலவாகும்.

2018 ஆம் ஆண்டில் தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கமானது கீழே தரப்பட்டுள்ளது.

## 11.1 வழமையான மற்றும் தொடர்ச்சியான செயற்பாடுகள்

வியாபார மென் பொருள்களின் அமுலாக்கம் மற்றும் பராமரிப்பு என்பவற்றுக்காக இணைய வாயில், eMemo, பிரதான அறை ஒதுக்கீட்டு முறைமை, ஆளணிப் பிரிவின் வருகை நேரத்துக்கான eHRM என்னும் முறைமை, தகவல் தொழில் நுட்பத்திற்கான ஒன்லைன் மேசை சேவைகள் முறைமை, சட்ட ரீதியான தரவுத் தளம், e-Query முறைமை உட்பட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒலி, ஒளி என்பவற்றின் முகாமை என்பன உள்ளடங்கப் பெறும்.

மேலும், 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக வலைப்பின்னல் உட்கட்டமைப்பினை மேம்படுத்துகின்ற அதே வேளை இனங் காணப்பட்ட பிரிவுகள் / திணைக்களங்களங்களுக்கு ஒதுக்கீடுகளை வழங்குவதற்கத் தேவையான வன்பொருள் மற்றும் வலைப்பின்னலுடன் தொடர்புடைய செயற்பாட்டு நடவடிக்கைகள் என்பவற்றை தகவல் தொழில்நுட்பப் பிரிவானது வெளிக்கொணர்ந்ததுடன் அது இன்னும் செயற்பாட்டில் உள்ளது.

இதற்கும் மேலதிகமாக, தகவல் தொழில்நட்பப் பிரிவானது பிரதானமாக கீழே காட்டப்பட்டிருக்கும் பின்வரும் மூன்று துறைகளுக்கு பொறுப்பாக உள்ளது;

1. **இணைய தளங்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு:** பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் (www.ugc.ac.lk), பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணைய வாயில் (www.eugc.ac.lk) மற்றும் தர உறுதிப்பாட்டு கவுன்சில் இணையதளம் (www.eugc.ac.lk / qaa) என்பன மீளாய்வாண்டின் போது இப் பிரிவினால் முன்னெடுக்கப்பட்டன.

2. **மின்- அரசாங்க மென்பொருள்களின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு:** இணையதளம் மூலமாக Z-புள்ளி வெட்டும் புள்ளிகள் வெளியாக்கம், எஸ்.எம்.எஸ், மற்றம் அரசாங்கத் தகவல் நிலையம் (1919 அழைப்பு நிலையம்) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் அமைதியுடன் தொடர்புடைய விடயங்கள், பல்கலைக்கழகங்களுக்கான ஒன்லைன் பதிவு மற்றும் மாணவர்களுக்கான ஒன்லைன் விண்ணப்பம் கோரும் செயன்முறை என்பன 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டன.

3. **ஒன்லைன் கொடுப்பனவு நுழைவாயிலின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு:** அரச பல்கலைக்கழகங்களுக்கான உன்லைன் பதிவு செய்தலின் போதான கொடுப்பனவுகளைச் செலுத்துதல் உட்பட உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற தகைமைகள் மற்றும் SLIATE நிறுவகத்தினால் வழங்கப்படும் கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமாத் தகைமைகளுக்கு சமமான சான்றிதழ்கள் உள்ளடக்கிய அங்கீகாரக் கடிதங்களை வெளியிடுதலுக்கான ஒன்லைன் கொடுப்பனவுகள் ஆகியவற்றுக்காக இது பயன்படுத்தப்பட்டது.

தகவல் மற்றும் தொடர்பாடல் முகவர்களுடன் தகவல் தொழில்நுட்பப் பிரிவானது (ICTA) வினைத்திறனான முறையில் ஒருங்கிணைத்ததுடன் ஏனைய பொருத்தமான அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவகங்களான LEARN, SLT, LK டொமைன் பதிவு போன்றவற்றின் வினைத்திறனான மற்றும் சுமுகமான தொழிற்பாட்டுக்கு இப் பிரிவானது மிகுந்த ஒத்துழைப்பிளை நல்கியது.

## 11.2 2018 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மென்பொருள்கள் மற்றும் இணையதளங்கள்

### 11.2.1. சர்வதேச மாநாடுகளுக்கான ஒன்லைன் கொடுப்பனவு முறைமை

இலங்கையில் இடம்பெற்ற மாநாடுகள் / நிகழ்வுகளுக்காக பங்கேற்க வருகின்ற வெளிநாட்டு உத்தியோகத்தர்களினால் வெளிநாட்டு நாணயக் கொடுப்பனவுகளை

மேற்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் புதிய கொடுப்பனவு நுழைவாயில் மொடியுல் ஆனது உருவாக்கப்பட்டது. இருப்பினும், இது 2019 இல் இடம்பெற்ற INQAAHE மற்றும் APQN மாநாடுகளை அடியொட்டியே திட்டமிடப்பட்டிருப்பினும், அது போன்ற ஏனைய எந்தவொரு நிகழ்வுகளுக்கும் எதிர்காலத்தில் இதனைப் பயன்படுத்த முடியும். காரணம் இதன் பாவனையாளர்களுக்கு இணையம் மூலமாக பாதுகாப்பான முறையில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான பாதுகாப்பான முறைமையாகும்.

**11.2.2. 2019 இல் இடம்பெறவிருக்கும் சர்வதேச மாநாடுகளுக்கான இணையதளங்கள்**

2019 ஆம் ஆண்டில் INQAAHE மாநாடு மற்றும் 2019 ஆம் ஆண்டில் APQN மாநாடு என்பவற்றுக்காக வேண்டி இரண்டு புதிய இணையதளங்கள் 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. அபிவிருத்திக் கட்டத்தின் போதும் நிர்வாகம் மற்றும் பராமரிப்பின் பராமரிப்பின் போதும் அது தகவல் தொழில்நுட்பப் பிரிவினாலேயே முன்னெடுக்கப்பட்டது.

## 11.3 தொடர்ந்து கொண்டிருக்கும் மென்பொருள் அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

**11.3.1. முன்மொழிவு முகாமைத்துவ முறைமை (PMS)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கல்விசார் முன்மொழிவுகளின் தரம் மற்றும் அதனுடைய தகவல்கள் என்பவற்றை கண்டறிவதற்கானதொரு ஒன்லைன் செயலி ஆகும். இது அபிவிருத்தியின் இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் 2018 ஆம் அண்டின் போது ஒரு சில பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன

**11.3.2. பதவியணியினர் முகாமைத்துவ முறைமை (CMS)**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழான சகல பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் பதவியணியனருடன் தொடர்புடைய தகவல்களை விவைாகவும் சரியாகவும் வழங்கி அதன் மூலம் மனித வளங்கள் திணைக்களத்தின் தொழிற்பாடுகளுக்கு உதவி செய்யும் முகமாக உருவாக்கப்பட்ட மென்பொருள் இதுவாகும். இவ் வேலையானது 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் தற்போது அது அபிவிருத்திச் செயன்முறையில் காணப்படுகின்றது.

# 12.பல்கலைக்கழக மாணவர்களுக்கான நிதி உதவி

## 12.1 மகாபொல புலமைப்பரிசில் திட்டம் மற்றும் பல்கலைக்கழக நிதி உதவித் திட்டம்

2018 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒதுக்கப்பட்டு / பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூபா.1,803 மில்லியன் தொகை நிதியின் உடைய தகவல்கள் அதாவது மகாபொல மற்றும் நிதி உதவித் திட்டங்கள் கீழே அட்டவணை 12.1 இல் தரப்பட்டுள்ளன.

| பல்கலைக்கழகம் / உயர் கல்வி நிறுவகம் | மகாபொல (ரூபா மில்லியன்) | பல்கலைக்கழக நிதி உதவித் திட்டம் (ரூபா மில்லியன்) | மொத்தம் (ரூபா மில்லியன்) |
|---|---|---|---|
| பேராதனைப் பல்கலைக்கழகம் | 159 | 14 | 173 |
| கொழும்பு பல்கலைக்கழகம் | 196 | 0 | 196 |
| ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் | 167 | 30 | 197 |
| களனிய பல்கலைக்கழகம் | 166 | 32 | 198 |
| மொறட்டுவ பல்கலைக்கழகம் | 76 | 8 | 84 |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 101 | 110 | 211 |
| உறுகுணை பல்கலைக்கழகம் | 79 | 40 | 119 |
| கட்புல மற்றும் அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகம் | 30 | 8 | 38 |
| கிழகுக் பல்கலைக்கழகம்இ இலங்கை | 45 | 87 | 132 |
| இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | 67 | 53 | 120 |

| | | | |
|---|---|---|---|
| இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் | 43 | 19 | 62 |
| இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் | 43 | 40 | 83 |
| இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் | 39 | 12 | 51 |
| ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் | 16 | 22 | 38 |
| கொழும்புப் பல்கலைக்கழக கணணிக் கல்லாரி | 5 | 1 | 6 |
| திருகோணமலை வளாகம் | 8 | 8 | 16 |
| வவுனியா வளாகம் | 5 | 7 | 12 |
| ஸ்ரீபாளி வளாகம் | 6 | 2 | 8 |
| சுதேச மருத்துவ நிறுவகம் | 6 | 12 | 18 |
| கம்பஹா விக்ரமாரச்சி ஆயர்வேத நிறுவகம் | 2 | 2 | 4 |
| மொறட்டுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப நிறுவகம் | 2 | 19 | 21 |
| சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிலையம் | 7 | 9 | 16 |
| **2018 ஆம் ஆண்டுக்கான மொத்தம்** | **1268** | **535** | **1803** |

**அட்டவணை 12.1** 2018 ஆண்டு பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களின் மகாபொல மற்றும் அறக்கொடை நிதியக் கொடுப்பனவு

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் உதவி பெறுகின்ற வித்தியாசமான இரண்டு நிதி உதவித் திட்ட வழிமுறைகள் இவைகளாகும்.

மஹாபொல புலமைப்பரிசில் நிதியத் திட்டத்தில், மஹாபொல புலமைப்பரிசில் நிதியத்தால் (MHESTF) 50% அதாவது அரைவாசியும் மீதித் தொகையானது பொதுத் திறைசேறியினாலும் வழங்கப்பட்டது. திறைசேறி பணமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாகவே வழங்கப்படுகின்றது என்பதுடன் மஹாபொல புலமைப்பரிசில் நிதியமானது பல்கலைக்கழகங்களுக்கு நேரடியாகவே நிதியத்தால் வழங்கப்படுகின்றது.

இருப்பினும் மஹாபொல நிதியத்திற்கு மஹாபொல உதவித் தொகை பெறுபவர்களை உருவாக்கப்பட்டுள்ள வரைமுறைப்படி தெரிவதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது பொறுப்பாக இருக்கும்.

இன்னும் கூறப் போனால், திறைசேரியானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மூலமாக பல்கலைக்கழக நிதி உதவித் தொகைக்குரிய நிதியினை வழங்கிய போதிலும் அவ் உதவித் தொகைக்குத் தகைமை பெறுகின்ற மாணவர்களைத் தெரிவு செய்யும் வழிமுறையானது உரிய பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களினாலலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

## 12.2 அறக் கொடைப் புலமைப்பரிசில்

விமர்சனைக்குரிய காலப்பகுதியில் மேற்குறிப்பிடப்பட்ட புலமைப்பரிசில்களுக்கு மேலதிகமாக பின்வரும் புலமைப்பரிசில் திட்டங்களும் செயற்பாட்டில் இருந்தன. அவ் உதவித் தொகைக்குத் தகைமை பெறுகின்ற மாணவர்களைத் தெரிவு செய்யும் வழிமுறையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினை அடியொட்டிய ஏற்றுக் கொள்ளப்பட்ட வரன்முறை ஒன்றின் கீழே மேற்கொள்ளப்பட்டது.

### 12.2.1 மிட்சுபிஷி கோர்பரேசன் சர்வதேச புலமைப் பரிசில்கள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கும் மிட்சுபிசி கோர்பரேசனுக்கும் இடையில் மிட்சுபிஷி கோர்பரேசன் நிறுவனத்தால் நிதியளிக்கப்படுகின்ற ஒரு புலமைப்பரிசில் திட்டத்துக்காக கைச்சாத்திடப்பட்ட ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம், இப் புலமைப் பரிசில்களானவை மிட்சுபிஷி

நிறுவகத்தினால் நிதி உதவியளிக்கப்பட்டு வருகிறது. இப் புலமைப்பரிசில்களானவை கொழும்பப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ மற்றும் நிதியியல் பீடங்களில் அல்லது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்தவ மற்றும் வர்த்தக பீடத்தில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் பொருட்டு வழங்கப்படுகின்றதாகும்.

அதனடிப்படையில், 2018 ஆம் ஆண்டில் 30 மொத்த மாணவர்களில் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இருந்து 15 பேர்களும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து 15 பேர்களுமாகக் கல்வியாண்டு 2015 / 16 முதல் தெரிவு செய்யப்பட்டதுடன் இவர்களுக்குரிய கொடுப்பனவுத் தொகையாக மாதாந்தம் 4000 ரூபா வீதம் 12 மாதங்களுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

### 12.2.2 பொலிஸ் சி.டபல்யு.சி. நலன் திட்ட பல்கலைக்கழக புலமைப்பரிசில்கள்

பொலிஸ் சி.டபல்யு.சி. நலன் திட்ட பல்கலைக்கழக புலமைப் பரிசில்கள் ஆனவை தமது பெற்றோர்கள் இலங்கை பொலிஸ் சேவையில் பணியாற்றி வருகின்றதும் மகாபொல, பல்கலைக்கழக நிதியுதவித் திட்டத்தினால் அல்லது வேறு புலமைப்பரிசில் திட்டங்களினால் எந்தவொரு நிதியுதவியினையும் பெறாத தெரிவு செய்யப்பட்டுள்ள குறிப்பிட்ட மூன்று மாணவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டில், கல்வியாண்டு 2015/16 இலிருந்து இவ் உதவு தொகையினைப் பெறுவதற்காக மொறட்டுவ பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம், உறுகுணைப் பல்கலைக்கழகத்தலிருந்த ஒருவர் வீதம் மொத்தம் மூன்று பேர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு மாணவருக்குத் வருடாந்தம் ரூபா. 20000 என்ற அடிப்படையில் 10 இன்ஸ்டோல்மன்ட்ஸ்களில் வழங்கப்பட்டதுடன் அத்தகைய கொடுப்பனவானது வருடாந்தம் குறித்த அம் மாணவனின் கற்கை நெறியிணைப் பூர்த்தி செய்யும் காலப்பகுதி வரையில் கிடைக்கப் பெறும்.

## 13. முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் அபிவிருத்திச் செயற்பாடுகள்

2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் முதல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவானது கொரியாவில் அமைந்துள்ள கொரிய கல்வி அபிவிருத்தி நிறுவகத்துடன் (KEDI) மிகவும் நெருக்கமான முறையில் இணைந்து பணியாற்றியது. கல்விப் புள்ளிவிபரவியல் முறைமையில் தரமான கல்விசார் குறிகாட்டிகள் மற்றும் அக் குறிகாட்டிகளை எவ்வாறு கண்காணிப்பு மற்றும் செயற்றிறன் அளவீடுகளில் பிரயோகிப்பது என்பதனைப் புரிநுது கொள்ளும் நோக்கத்தினை அடையவே கொரிய கல்வி அபிவிருத்தி நிறுவகத்துடன் (KEDI) இணைந்து அது தொடர்பிலான அறிவு மற்றும் உயர் வழிகாட்டுதல்கலைப் பெறுதலே இதன் நோக்கமாக அமைந்தது எனலாம். 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 9-13 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் கொரியாவின் சொவோல் (seoul) இல் அவர்களால் நடத்தப்பட்ட கல்விசார் குறிகாட்டி அபிவிருத்தி மற்றும் புள்ளிவிபரவியல் இயலுமையினைக் கட்டியெழுப்பல் என்னும் தொனிப் பொருளினால் ஆன செயலமர்வில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவின் தலைவர் அவர்கள் பங்கேற்ற போதே கொரிய கல்வி அபிவிருத்தி நிறுவகத்துடன் (KEDI) உறவானது முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல், கொரிய கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின; (KEDI)கலாநிதி.பொன் யொங் கிங் என்பவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் இணைந்து அதன் முகாமைத்துவ தகவல் முறைமைகள் பிரிவில் பணியாற்றும் ஊழியர்களுடன் முகாமைத்துவ தகவல் முறைமைகள் அபிவிருத்தியில் கொரிய அனுபவங்கள் குறித்துப் பகிர்ந்து கொண்டு கடமையாற்றி வருகிறார். 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், இவர் 'பல்கலைக்கழகங்களின் தகவல்களுக்கான மையப் புள்ளி' என்ற தலைப்பில் செயலமர்வொன்றினை பல்ககைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் ஆரம்பித்ததுடன், முகாமைத்தவ தகவல்கள் பிரிவின் ஊழியர்களுக்கு வரைவு முன்மொழிவு ஒன்றைத் தயாரித்து அதன் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கான மத்தியமயப்படுத்தப்பட்ட முகாமைத்துவ தகவல் முறைமையொன்றின் தேவைப்பாட்டினை பகுப்பாய்வு செய்யும் பொருட்டு முகாமைத்துவ தகவல்கள் முறைமைகள் பிரிவின் ஊழியர்களை நெறிப்படுத்தினார். மேலும், கொரிய அனுபவங்களின் மூலம் பல்கலைக்கழகங்கள் மூலம்

புள்ளிவிபரவியல்களை சேகரிக்கும் முறைமையுடன் தொடர்புடைய சட்டமொன்றினை அபிவிருத்தி செய்வதற்குரிய முன்மொழிவு ஒன்றும் இத்தோடு சமர்பிக்கப்பட்டது.

## 14. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷேட ஒதுக்கீடுகள்

2018 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டங்களை கையாளுவதன் மூலம் தேசிய நிறுவகங்களுக்குரிய அதனுடைய உதவியினை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது விரிவுபடுத்தியது;

- 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய ஆய்வு மற்றும் அபிவிருத்தி அளவீடு (R&D) பூர்த்தியாக்கம் மற்றும் தேசிய விஞ்ஞான நிறுவகத்துக்கான (NSF) பொருத்தமான தகவல்களை சமர்ப்பித்தல்.

- 2010/11 ஆட்சேர்ப்பிக்கான இறுதி எம்.பீ.பீ.எஸ் (மீள்) பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட எம்.பீ.பீ.எஸ் பட்டதாரிகளின் இறுதி திறமை ஒழுங்கு பட்டியலானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் சுகாதார அமைச்சின் உள்ளக பயிற்சி இடங்களுக்கும் கையளிக்கப்பட்டது.

- 2010/11 ஆட்சேர்ப்பிக்கான இறுதி எம்.பீ.பீ.எஸ் (மீள் மற்றும் மீள்) பரீட்சையை அடிப்படையாகக் கொண்ட எம்.பீ.பீ.எஸ் பட்டதாரிகளின் இறுதி திறமை ஒழுங்கு பட்டியலானது பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் சுகாதார அமைச்சின் உள்ளக பயிற்சி இடங்களுக்கும் கையளிக்கப்பட்டது.

## 15. சட்ட விவகாரங்கள்

### 15.1 புதிய சட்டம்

விமர்சனத்துக்குரிய ஆண்டு காலப்பகுதியில் ஆனைக்குழுவின் சட்ட பிரிவினால் 13 கட்டளைகளையும் 03 கட்டளைச் சட்டத்தினையும் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

#### 15.1.1. 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டளைகள்

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தில் ஆங்கில மொழி கற்பித்தலுக்கான புதிய பிரிவொன்றினை ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜனவரி 10 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2053/24 ல் பிரசுரிக்கப்பட்டது.
- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிய தொழில்நுட்ப பீடமொன்றினை இரண்டு திணைக்களங்களுடன் ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜனவரி 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2056/5 ல் பிரசுரிக்கப்பட்டது.
- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை களனிய பல்கலைக்கழகத்தின் 'சமஸ்கிரத பீடத்தினை' 'சமஸ்கிருத மற்றும் கீழேத்தேயக் கற்கைகள் திணைக்களம்' ஆக மீள் பெயரிட்டு ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 மே 01 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2069/16 ல் பிரசுரிக்கப்பட்டது.
- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை தென்கிழக்குப் உப வேந்தருக்குப் பதிலாக பேராசிரியர் உமா குமார சுவாமி அவர்களை (2018.06.18) அப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாக ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுன் 19 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2076/13 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகத்தின் பணிப்பாளருக்குப்

பதிலாக பேராசிரியர் பிரிசாந்த குணவர்தன அவர்களை அப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த அதிகாரியாக ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுன் 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2077/34 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை உறுகுணைப் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தின் ஆங்கில மொழி அலகினை ஆங்கில மொழி கற்பித்தல் திணைக்களமாக மேம்படுத்தி ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுலை 09 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2079/10 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தில் புதிய இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடமொன்றினை ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுலை 09 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2079/11 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் ஆங்கில மொழி கற்பித்தலுக்கான புதிய திணைக்களத்தினை ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுலை 07 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2079/12 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் மற்றும் மனித வளங்கள்முகாமைத்துவம் என்னும் இரு புதிய கற்கைத் திணைக்களங்களை ஸ்தாபித்தல் மற்றும் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் சுகாதார விருத்தி எனும் புதிய கற்கைத் திணைக்களத்தினையம் மற்றும் பிரயொக விஞ்ஞானங்கள் பீடத்தில் கணிணிப்படுத்தல் எனும் புதிய கற்கைத் திணைக்களத்தினையும் ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுலை 09 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2079/13 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 20(4)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை தொல்பொருளியல் பட்டப்பின் நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக பேராசிரியர் பிரிசாந்த குணவர்தன அவர்களை (02.04.2018-30.06.2018)அப் பல்கலைக்கழகத்தின் தகுதி வாய்ந்த 'அதிகாரியாக ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஜுன் 29 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2077/35ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தில் புதிய மருத்துவ பீடமொன்றினை பதினைந்து புதிய திணைக்களங்களுடன் ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2082/32 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் பொலிமர் விஞ்ஞானங்கள் திணைக்களம் என்னும் புதிய திணைக்களத்தினை ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 ஒக்தோபர் 01 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2091/06 ல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978ம் ஆண்டின் 16ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 27(1)பிரிவின் கீழ் செய்யப்பட்ட, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞானங்கள் பீடத்தில் இரசாயன விஞ்ஞானங்கள் திணைக்களம் என்னும் புதிய திணைக்களத்தினை ஸ்தாபிக்கும் கட்டளையானது 2018 டிசம்பர் 05 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2100/12 ல் பிரசுரிக்கப்பட்டது.

### 15.1.2. வருட காலத்தில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைச் சட்டங்கள்

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 91 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 01 ம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் கட்டளைச் சட்டமானது 2018 மே 30 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2073/11 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 140 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 01 ம் இலக்க பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் கட்டளைச் சட்டமானது 2018 பெப்ரவரி 23 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2059/11 இல் பிரசுரிக்கப்பட்டது.

- 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24A ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின் கீழ் முகாமைத்துவப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகத்தினால் ஏலவே இரத்து மற்றும் மாற்றீடு செய்யப்பட்ட 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க முகாமைத்துவப் பட்டப்பின் கற்கைகள் நிறுவகக் (PIM) கட்டளைச் சட்டமானது 2018 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய விஷேட அரசாங்க வர்த்தமானி இல 2085/45 இல் பிரசுரிக்கப்பட்டது.

## 15.2 நீதிமன்ற வழக்குகள்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் அதாவது 2018 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆனைக்குழுவுக்கு எதிராக சட்டமன்ற நீதிமன்றம் மற்றும் நியாயாதிக்க சபைகளில் தொகுக்கப்பட்ட மொத்தம் 96 வழக்குகளை ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு கையாண்டது;

| | | |
|---|---|---|
| • மேல் நீதிமன்றம் | - | 28 வழக்குகள் |
| • மேன்முறையீட்டு நீதிமன்றம் | - | 25 வழக்குகள் பல்கலைக்கழக |
| சேவைகள் மேன்முறையீட்டு சபை | - | 31 வழக்குகள் |
| • மாவட்ட நீதிமன்றங்கள் | - | 04 வழக்குகள் |
| • மத்தியஸ்த சபை | - | 02 வழக்குகள் |
| • தொழில் நியாயாதிக்க சபை | - | 04 வழக்குகள் |
| • உயர் நீதிமன்றம் | - | 02 வழக்குகள் |

## 15.3 இதர செயற்பாடுகளின் போதான பங்களிப்பு

### 15.3.1 பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகச் செயற்பாடுகள்

2018 ஆம் ஆண்டில், உள்ளக ரிதியிலான மாற்றீட்டுக் குழுத் திட்டம், E-குறியீடு மீளமைப்புக் குழு, பட்டப்பின் கற்கைகள் நிறுவகங்களின் முகாமைத்துவக் குழுக்களை மீள்கட்டமைத்தல் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நலன்புரி யாப்பினை வரைவு செய்தல் ஆகிய பணிகளில் சட்டப் பிரிவானது ஈடுபட்டு வந்துள்ளது.மேலும் பல்கலைக்கழக முறைமையில் உள்ள விரிவுரையாளர்கள், மஹைஅலுவலகர்கள், இதர ஊழியத் தரப்பினர்களில கற்கை விடுமுறையில் உள்ளவர்கள் தொடர்பிலான கையொப்பமிடப்பட வேண்டிய முறிகள் மற்றும் உடன்படிக்கைகள் குறித்த ஆணைக்குழுச் சுற்றறிக்கையினை மீளத் திருத்துதல் தொடர்பிலும் சட்டப் பிரிவானது தேவையான உதவிகளை மேற்கொண்டது.

### 15.3.2 பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகச் செயற்பாடுகள்

உயர் கல்வி அமைச்சின் தர உறுதிப்பாடு மற்றும் தர நிர்ணய நிலையான குழுவிற்கு (SCAQA) மற்றும் கல்வி மற்றும் மனித வளங்கள் செயலகத்தின் மேற்பார்வைக் குழுவிற்கும் இப் பிரிவானது தனது பங்களிப்பினை வழங்கியது. மேலும், அப்போதைய

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு அதனுடைய தர உறுதிப்பாடு மற்றும் தர நிர்ணய சட்ட மூலத்தினை வரைவு செய்வதற்குரிய சட்ட உதயினையும் பெற்றுக் கொடுத்தது.

## 16. பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீட்டு சபை (ருளுயுடீ)

பல்கலைக்கழக சேவைகள் மேன்முறையீடுகள் சபையானது விமர்சனத்துக்குரிய ஆண்டு காலப்பகுதியில் அதாவது 2018 ஆம் ஆண்டு 27 அமர்வுகளை மேற்கொண்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆந் திகதி முதல் 28 ஆந் திகதி வரை (32) மேன்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டன. 21 மேன்முறையீடுகள் மீதான கட்டளைகள் வழங்கப்பட்டது.அவற்றில் தள்ளுபடியாகிய மேன்முறையீடுகள் 14 மற்றும் அனுமதிக்கப்பட்டவை நான்கு ஆகும். 21 மேன்முறையீடுகள் விலகிக்கொண்டன. 05 மேன்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டன. மூன்று மேன்முறையீடுகள் தீர்த்துவைக்கப்பட்ட அதே வேளை மற்றைய மேன்முறையீடானது இடமாற்றம் செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் எட்டு ஆரம்பக் கட்டளைகள் வெளியிடப்பட்டன. ஒன்பது கட்டளைகள் எழுதப்பட்டுக் கொண்டிருப்பதுடன் மூன்று மேன்முறையீடுகளும் பிறப்பிக்கப்பட்டன. விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் இடைக்காலக் கட்டளைகள் அல்லது மேன்முறையீட்டுக் கட்டளைகள் ஏதும் பல்கலைக்கழக மேன்முறையீடுகள் சபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்படவில்லை என்ற போதிலும் பல்கலைக்கழக மேன்முறையீடுகள் சபைக்கு எதிராக மேன்முறையீடுகள் நீதிமன்றத்திற்கு முன்னால் மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

2018 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் மொத்தமாக 31 வழக்ககள் நிலுவையில் இருந்தன.

## 17. மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபனக் கோவையின் 1 ஆம் அத்தியாயத்தின் 3ம் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் உள்ளக கணக்காய்வு ஒப்படைகள் மற்றும் விசாரணைகள் இலக்குகள் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரிவே மத்திய உள்ளக கணக்காய்வு பிரிவாகும்.பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, இதர பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் உள்ளகக் கணக்காய்வுச் செயன்முறைகள் மற்றும் விசாரணைகள் ஆகியவற்றினை நடத்துவதே உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தின் நோக்கமாகும்.

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் எப்.ஆர் 133 இன் இணக்கப்பாட்டுடன் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் நிதியியல், நிருவாகத்தின் எல்லா அம்சங்கள் மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விதத்தில் பொதுத் திறைசேறியினால் தயாரிக்கப்பட்டது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மத்திய உள்ளக கணக்காய்வுப் பிரிவானது, முறைமைகளுக்கிடையில் நல்லாட்சியைப் பேணுவதற்காக, பல்கலைக்கழக உள்ளக கணக்காய்வு பிரிவுடன் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது.

### 17.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சந்திப்புக்கள்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது,பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப குழுக்களில் உள்ள பிரதானமானதொரு உப குழுவாகும்.இக் குழுவானது அதனுடைய சுயாதீனமான நிர்வாகம் சாராத ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர். மலிக் ரணசிங்ஹ அவர்களைத் தலைவராக கொண்டு இயங்குவதுடன் இதற்கு மேலதிகமாக திறைசேறிப் பிரதிநிதியான கலாநதி. பி.கெ.ஜி ஹரிஸ்சந்திரவிற்குப் பதிலாக மற்றைய இரு நிர்வாகம் சாராத ஆணைக்குழு உறுப்பினர்களான பேராசிரியர் ஹேமந்த சேனாநாயக்க மற்றும் கலாநிதி றுவைஸ் ஹனீபா ஆகியோர்களை உள்ளடக்கியதும் ஆகும். பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களப் பிரிவிலிருந்து கணக்காய்வாளர் அத்தியட்சகர் ஒருவர் குழுச் சந்திப்புக்களின் போது கண்காணிப்பாளர்களாகக் கலந்து கொண்டார். மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோர் மேற்படி சந்திப்பிற்கு அழைக்கப்பட்டனர்.

2018 ஆம் ஆண்டில் ஐந்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் சந்திப்புக்கள் இடம் பெற்றதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வாளர் மேற்படி கூட்டத்தின் செயலாளர் மற்றும் ஏற்பாட்டாளராக செயற்பட்டார்.

### 17.2 COPE சந்திப்புக்கள்

15 பல்கலைக்கழகங்கள் மற்றும் 18 உயர் கல்வி நிறுவகங்களுடன் தொடர்புடைய பாராளுமன்றத்தின் பொது முயற்சியாண்மை (COPE) தொடர்பிலான குழுவுடன் தொடர்புடைய குழுச் சந்திப்புக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்களை ஒருங்கிணைத்ததுடன் (COPE) இற்கு அவசியமான தகவல்களில் அவற்றில் சரிவர அமையாத மற்றும் தகவல்களில் திருத்தமான சமர்ப்பித்தல் இல்லாத போது அவற்றுக்கான உதவியினையும் மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது மேற்கொண்டது.

### 17.3 நடத்தப்பட்ட முன் கணக்காய்வு

2018 ஆம் ஆண்டில், கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சரியான நம்பகத் தன்மையினை விசாரணை செயயும் மற்றும் நம்பகத்தன்மையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்கும் என பின்வரும் மூன்று துறைகளில் முன் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டது;

- சேமலாப நிதியத்தின் விடுவிப்பு
- பணிக்கொடைக் கொடுப்பனவு
- ஓய்வூதியத்தின் விடுவிப்பு

### 17.4 உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள்

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் மத்திய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவானது மொத்தமாக 19 உள்ளக் கணக்காய்வு அறிக்கைகளை வெளியிட்டது. இவற்றுள்இ 10 அறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் தொடர்புபட்டதாக இருந்த அதே வேளை 09 அறிக்கைகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களுடன் தொடர்பு பட்டதாகும். சகல அறிக்கைகளும் அதற்குரிய கணக்காய்வுக் கூட்டங்களில் வைத்து கலந்துரையாடப்பட்டதுடன் மேலதிக கவனத்திற்குரிய விடயங்களுடன் தொடர்புடைய பாரிய விடயங்கள் ஆனவை தேவையான அறிவுறுத்தல்களுக்காக ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது

## 18. வெளியீடுகள் மற்றும் அறிக்கைகள்

2018 ஆம் ஆண்டில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முகாமைத்துவ சேவைகள் பிரிவானது பின்வரும் மூன்று முக்கிய வெளியீடுகள் மற்றும் அறிக்கைகளுடன் முறைமைக்குத் தேவையான நிர்வாக உதவியினை அளித்தது;

- ‘இலங்கைப் பல்கலைக்கழகப் புள்ளிவிபரவியல்’ வெளியீடு 2017- 2018 ஜூலை மாதத்தில் 16 ஆவது தொகுதி
- ‘2017 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகங்களில் உள்ள இளமாணிப் பட்டதாரிகளின் கற்கை சார் நடவடிக்கைகளுக்காக ஒரு மாணவனுக்குரிய அலகு மீண்டெழும் செலவு தொடர்பிலான பகுப்பாய்வு’ குறித்து ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை
- 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் உயர் கல்வி நிறுவகங்களில் உடன்படிக்கையினை மீறிய உயர் கல்வி நிறுவகங்களின் ஆளணியினருடன் தொடர்பு பட்ட நிதியினை மீளப் பெறுதல் தொடர்பிலான முன்னேற்ற நடவடிக்கைகள் தொடர்பில் ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

## 19. தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலின் வகிபாகம் மற்றும் பங்கு (ஞயுஊ)

செயற்றிறன் மிக்க தர உறுதிப்பாட்டு முறைமையின் உதவியின் ஊடாக உயர் கல்வியில் சிறப்பான நிலைப்பாட்டினை எய்தும் பொருட்டினை மையமாகக் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள்

ஆணைக்குழுவின் தர உறுதிப்பாட்டு மற்றும் அங்கீகாரமளித்தல் மன்றம் (ஏயுயுஉஊ) 2005 செப்தெம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. பல்கலைக்கழகங்களின் கல்வி சார் தர நிலைகளை பராமரிப்பதற்குப் பொறுப்பாக இருந்த இவ் அலகின் பெயரானது **தர உறுதிப்பாட்டுக் கவுன்சில் (QAC)** என 2018 ஏப்ரல் மாதத்தின் ஆணைக்குழுத் தீர்மானத்திற்கமைய மாற்றம் செய்யப்பட்டது.

2018 ஆம் அண்டின் தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலின் வகிபாகம் மற்றும் நடவடிக்கைகள் கீழே சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது;

### 19.1 உள்ளகத் தர உறுதிப்படுத்தல் அலகுகள் ( IQAU) மற்றும் செயற்றிறன் புள்ளி அட்டை

2017 ஆம் ஆண்டின் உள்ளகத் தர உறுதிப்படுத்தல் அலகுகள் அறிக்கைகளின் படி, 2017 ஆம் ஆண்டின் இறுதியளவில் 10 அரச பல்கலைக்கழகங்கள் மூலம் AHEAD நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செயற்றிறன் புள்ளி அட்டைக்காக வேண்டி அடையப்பட வேண்டிய 60% இற்கும் அதிகமான தேவைப்பாடானது பூர்த்தி செய்யப்பட்டது.

மேலும், 2018 ஆம் அண்டின் முதல் மூன்று தவணைகளுக்குமான உள்ளகத் தர உறுதிப்படுத்தல் அலககளின் றிக்கைகள் தர உறதிப்பாட்டுக் கவுன்சில் மூலம் கிடைக்கப் பெற்றதுடன் அதனடிப்படையில் உரிய அதிகாரிகளின் பங்கேற்புடன் மீளாய்வு மற்றும் கலந்துரையாடல்கள் அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் இறுதிக் கட்டத்தில் அமுலில் உள்ள 15 பல்கலைக்கழகங்களில் 12 பல்கலைக்கழகங்களில் இருந்து 75% இற்கும் அதிகமான செயற்றிறன் புள்ளி அட்டைகளை தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலானது அடைவாக எதிர்பார்க்கின்றது.

### 19.2 இலங்கை கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF)

விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில், அரச பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் இலங்கைக் கல்வித் தகைமை மட்ட நியமத்தினை அடையாளப்படுத்துவதற்குரிய பொறிமுறை மற்றும் அதனை அவ்வாறு அடையாளமிடுதல் தொடர்பில் அபிவிருத்தி செய்வது குறித்து நியாயமான முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2018 மே மாதத்தில், அரச பல்கலைக்கழகங்களில் இலங்கைக் கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF) 05 இற்குக் குறைவாக உள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலின் அங்கீகாரம் தேவைப்படாது என ஆணைக்குழுவானது தீர்மானித்தது. மேலும், ஆணைக்குழுவின் கோரிக்கையின் பிரகாரம், அவ்வாறு இலங்கைக் கல்வித் தகைமை மட்ட நியமம் (SLQF) 05 இற்குக் குறைவாக உள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு குறைவாக அரச பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் சான்றிதழ்கள், டிப்ளோமா, மற்றும் உயர் டிப்ளோமாக் கற்கை நெறிகள் உள்ளடங்கப் பெற்ற கற்கைநெறிகள் தொடர்பில் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய பணியினை தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலானது ஆரம்பித்தது. மேலும் இதற்காக வெண்டி செயலமர்வொன்றினை நடாத்தி முறைமையினுள் தொழிற்பட்டு வருகின்ற அத்தகைய கற்கை நெறிகளுக்குரிய ஒரு பொதுவான செயன்முறையினை உருவாக்கி அதனை செயற்படுத்தவும் தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலானது தீர்மானித்துள்ளது.

### 19.3 விடயக் குறிகாட்டிகள் (SBM)

2018 பெப்ரவரி மாதம் எடுக்கப்பட்ட ஆணைக்குழுத் தீர்மானத்தின் பிரகாரம், மீளாய்வுச் சென்முறையுடன் தொடர்புடைய விடயக் குறிகாட்டிகளை அபிவிருத்தி செய்வதற்குரிய நோக்கம் மற்றும் குறிக்கோளினை இனங்காணவும் மற்றும் விடயக் குறிகாட்டி எடுகொள்களுக்கான பொதுவான மாதிரியொன்றினை அபிவிருத்தி செய்வதற்குமாக உப குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதனடிப்படையில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதன் பிரகாரம், நிலையான குழுவின் சகல முன்னாள் அலுவலக உறுப்பினர்கள் மற்றும் விடயக் குறிகாட்டி உருவாக்கம் தொடர்பிலான நிலையான குழுக்களின் தலைவர்கள் யாவரும் விடயக் குறிகாட்டி எடுகொள்களை (SBS) இறுதிப் பட்டியலிடவும் மற்றும் விடயக் குறிகாட்டி உருவாக்கக் குழுவிற்கான சிறந்த விடய நிபுணர்களை தெரிவு செய்யவும் AHEAD நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் முன்மொழியப்பட்டது.

## 19.4 வெளிவாரித் தர உறுதிப்பாடு

### 19.4.1. நிறுவக மீளாய்வுகள் (IRs)

2017 ஆம் ஆண்டில் இடம்பெற்ற நான்கு நிறுவக மீளாய்வுகளில் மூன்று அறிக்கைகளே 2018 ஆம் ஆண்டின் போது இறுதி செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டன.அதனடிப்படையில், அத்தகைய மூன்று பல்கலைக்கழகங்களினதும் அதாவது கட்புல மற்றும் அரங்கேற்றற் கலைகள் பல்கலைக்கழகம், இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம் ஆகியவற்றின் அறிக்கைகள் மூன்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. மீளாய்வு அறிக்கைகளின் பரிந்துரைகளின் பிரகாரம் அடுத்த ஐந்த வருடங்களுக்குமான செயற்பாட்டுத் திட்டத்தினை 2019 ஆம் ஆண்டு ஏப்ரில் 30 ஆந் திகதிக்கு, குறித்த பல்கலைக்கழகங்களின் உரிய அதிகாரிகளுக்கு வழங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் திட்டத்தின் படி, இலங்கை வயம்ப பல்கலைக்கழகம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்ககழகம் ஆகியவற்றில் நிறுவக மீளாய்வுகள் நடத்தப்பட்டன. 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ‘சுய மதிப்பீட்டு அறிக்கை எழுத்தாளர்கள் செயலமர்வு’ ஒன்று தர உறுதிப்பாட்டுக் கவுன்சில் மூலம் நடத்தப்பட்டதுடன;, 2018 ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிறுவக மீளாய்வுக் குழுவின் மீளாய்வாளர்களுக்கான முன் மீளாய்வுச் செயலமர்வொன்று இடம் பெற்றதுடன் 2018 ஆகஸ்ட் மாதம் முன் இணையப் பக்க பார்வையிடுதல் செயலமர்வொன்றும் நடத்தப்பட்டது. மேற்சொன்ன சகல செயலமர்வுகளும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வளாகத்தின் உள்ளே இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இரண்டு பல்கலைக்கழகங்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற சுய மதிப்பீட்டு அறிக்கைகள் (SERs) முன் மீளாய்வுச் செயலமர்வின் மீளாய்வாளர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலும் இவ் இரண்டு நிறுவக மீளாய்வுக் குழுக்களுக்குமாக சர்வதேச மீளாய்வாளர் ஒருவரை இரண்டு குழுக்களிலுமே நியமிப்பதற்குரிய அனுமதியினை AHEAD நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கி இரு நிறுவக மீளாய்வுக் குழுக்களையும் ஆணைக்குழுவானது மேலும் வலுப்படுத்தியது. 2018 ஆம் ஆண்டில் இரு நிறுவக மீளாய்வுக் குழுக்களிடமிருந்தும் வரைவு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதுடன் அவைகள் யாவும் உப வேந்தர்களின் கருத்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ள மொறட்டுவ பல்கலைக்கழகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை சபரகமுவ பல்கலைக்கழக்கழகம் ஆகியவற்றின் நிறுவக மீளாய்வுகளுடன், 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் இந் நான்கு பல்கலைக்கழகங்களினதும் உப வேந்தர்களுக்கு அவர்களின் விருப்புரிமைக் கடிதத்தினை கோரி மற்றும் நிறுவக மீளாய்வின் வினைத்திறன் தன்மையினைக் கருத்திற் கொண்டு மீளாய்வாளர் குழுவினை அதிகரிப்பதற்காக வேண்டி பொருத்தமான தனி நபர்களிடமிருந்து விண்ணப்பங்களும் கோரப்பட்டன. மேலும், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் வேண்டிக் கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் பிரகாரம் சுயமதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிப்புக்குரிய கால எல்லையினை நீடிக்குமாறு வேண்டிக் கொண்ட படியால் அக் கால எல்லையினை 2019 ஆகஸ்ட் கடைசிக் கிழமை வரை நீடிப்பதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

### 19.4.2. நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் (PRs)

சகல அரச பல்கலைக்கழகங்களினதும் கலைப் பீடங்கள், சமூக விஞ்ஞானங்கள் மற்றும் மானுடவியல் பீடங்கள் தொடர்பில் 41 நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளை தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலானது பூர்த்தி செய்ததுடன் இறுதியாகத் திருத்தம் செய்யப்பட்ட அறிக்கைளானவை பீடங்களின் பீடாதிபதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டு 2018 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தின் சுற்றறிக்கையினால் அனுமதிக்கப்பட்டதன் பிரகாரம் அவைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள வியாபார மற்றும் நிதியியல் பீடங்கள்இ முகாமைத்தவம்இ வர்த்தகம்இ கல்விஇ சட்டம் மற்றும் நுண்கலைககளுடன் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளுடன்இ நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளுக்கான சுய மதிப்பீட்டு அறிக்கை எழுத்தாக்கம் தொடர்பிலான செயலமர்வொன்று 2018 அம் ஆண்டு ஜனவரி

மாதம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது. ஒன்பது அரச பல்கலைக்கழகங்களிலிருந்தும் 109 சிரெஸ்ட கல்வியியலாளர்கள் இச் செயலமர்வில் கலந்து கொண்டதுடன் சகல குறிப்பிடத்தக்க பீடங்களிலிருந்தும் 58 நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும்இ 2018 பெப்ரவரி மாதம் தர உறுதிப்படுத்தல் மன்றத்தினால் நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுக்காக உருவாக்கப்பட்ட மீளாய்வுக் குழுக்களில் சேவையாற்றுவதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்ட மீளாய்வாளர்களாக கல்வி சார் ஆளணியினர் 67 பேர்கள் வெற்றிகரமாக பயிற்சியளிக்கப்பட்டனர். 2018 ஜுன் மாதம் நியமிக்கப்பட்ட மீளாய்வாளர்களுக்கான முன் மீளாய்வுச் செயலமர்வானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதிலே வைத்து பீடங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற சுய மதிப்பீட்டு அறிக்கைகள் (ளுநுசுள) அவர்களிடம் கையளிக்கப்பட்டது. 2018 ஆகஸ்ட் மாதம் முன் இணையப் பக்க பார்வைகளுக்கான செயலமர்வுகள் நடத்தப்பட்டதுடன்இ 2018 ஆம் அண்டு ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கு இணையப் பக்க பார்வையிடுதல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டதுடன் இணையப் பக்கங்களில் 52 மீளாய்வுகள் ஆனவை காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன் 2019 ஜனவரி ஆகும் போது எஞ்சியுள்ள இணையப் பக்க பார்வையீடுகளை பூர்த்தி செய்வதற்கு தர உறுதிப்பாடு தொடர்பிலான நிலையான குழுவானது 2018 திசெம்பர் மாதம் தீர்மானம் எடுத்தது. பீடங்களின் கருத்துக்களுடன் கலந்தரையாடலை மேற்கொண்டதன் பிற்பாடு இறுதி அறிக்கைகள் சமர்பித்தலுக்கான இறுதித் திகதி தொடர்பில் மீளாய்வாளர்களுடன் தர உறுதிப்பாட்டுக் கவுன்சில் ஆனது ஏற்கனவே கலந்துரையாடியுள்ளது.

2018 மே மாதம், மருத்துவ பீடங்கள், பல் விஞ்ஞானம், இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், சுதேச மருத்தவம், விலங்கு மருத்துவம் மற்றும் விவசாயம் ஆகிய பீடங்களில் 2019 ஆம் ஆண்டுக்குரிய நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளை நடத்துவதற்கு ஆணைக்குழுவானது அனுமதியினை வழங்கியுள்ளது. மேலும், 2018 செப்தெம்பர் மாதம் இடம்பெற்ற கூட்டத்தின் போது இந் நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகளுக்கான கால எல்லைகள் தீர்மானிக்கப்பட்டதுடன் சுய மதிப்பீட்டு எழுத்தாளர்களுக்கான நிறுவக மீளாய்வுகள் மற்றும் நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் ஆனவை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்காக திட்டமிடப்பட்டுள்ளன. திசெம்பர் மாதம் 2018 இல் 2020 ஆம் ஆண்டுக்கான பொறியியல், கட்டடக்கலை மற்றும் விஞ்ஞான பீடங்களில் நிகழ்ச்சித்திட்ட மீளாய்வுகளை நடத்துமாறு தர உறுதிப்பாடு தொடர்பிலான நிலையான குழுவானது பரிந்துரை செய்தது.

### 19.5 விண்ணப்ப மாதிரிகளை மீள வடிவமைத்தல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கல்வி சார் நடவடிக்கைகள் பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய பீடங்கள் மற்றும் நிறுவகங்களுக்கான விண்ணப்ப மாதிரிக்கான அனுமதியானது தர உறதிப்பாட தொடர்பிலான நிலையான குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டது. அதனடிப்படையில்இ ஆணைக்குழுவினால் பலதரப்பட்ட பிரதான திருத்தங்கள்ஆனவை பரிந்துரைக்கப்பட்டு மற்றும் உறுதி செய்யப்பட்டதுடன் கல்வி சார் பிரிவிற்கு தேவையான நடவடிக்கைகளுக்காக வேண்டி மாற்றீடு செய்யப்பட்டது.

### 19.6 அங்கீகார விடயங்கள்

2018 ஜனவரி முதல் 2018 திசெம்பர் வரையிலான காலப்பகுதியில், 69 விடயங்கள் அங்கீகாரத்தின் பொருட்டு கிடைக்கப்பற்றதுடன், அவைகள் யாவும் அங்கீகாரக் குழுவினால் கலந்துரையாடப்பட்டு பரிந்துரைக்கு அல்லது அவதானிப்பின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டன.

### 19.7 பட்ட நிகழ்ச்சித் திட்ட, புதிய பீடங்கள் / நிறுவக முன்மொழிவுகள் தொடர்பிலான மதிப்பீடு

2018 ஆம் ஆண்டில், 42 இளமாணிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்இ 6 இளமாணிப்பட்ட வெளிவாரிப் பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் 71 பட்டப்பின் கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் என மொத்தமாக 119 பட்ட நிகழ்ச்சித் திட்ட முன்மொழிவுகள் அனவை தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலினால் மதிப்பீடு செய்யப்பட்டன.

இதற்கும் மேலதிகமாக, விமர்சனைக்குரிய ஆண்டு காலப்பகுதியில் முன்மொழிவு செய்யப்பட்ட புதிய பீடங்கள் / நிறுவகங்களின் எண்ணிக்கை இரண்டு ஆகும்.

## 19.8 தொலை உயர் கல்வி நிறுவகங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் நிகழ்ச்சித் திட்ட மீளாய்வு மற்றும் நிறுவக மீளாய்வுக்கான வழிமுறைகளின் அபிவிருத்தி / மேம்பாடு

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் இளமாணிப்பட்ட கறகை நிகழ்ச்சித் திட்டங்களுக்கான இறுதியாக திருத்தம் செய்யப்பட்ட மெனுவல் ஆனது பல்கலைக்கழகத்திற்கு மற்றும் 2018 ஆம் ஆண்டில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுக்காக பாரஞ் சாட்டப்பட்டுள்ள ஒவ்வொரு மீளாய்வாளர்களுக்கும் இது அனுப்பி வைக்கப்பட்டது. மேலும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் 2019 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டுள்ள நிறுவக மீளாய்வுகளுடன் மற்றும் தர உறுதிப்பாடு தொடர்பிலான நிலையான குழுவின் அனுமதியுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு நிறுவக மீளாய்வு மெனுவல் ஆனது அனுப்பி வைக்கப்பட்டது.

## 19.9 தர உறுதிப்பாட்டு நடவடிக்கைகளில் மாணவர்கள் பங்களிப்பு

2017 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தர உறுதிப்பாட்டு நடவடிக்கைகளில் வெளிநாட்டுத் தூதுவராக அவர்களின் பங்கேற்பினை பெற்றுக் கொள்ளும் பொருட்டு வினைத்திறன் மிக்க மாணவர்களை இனங்காண்பதற்காக தயாரிக்கப்பட்ட வழகாட்டுதல் ஆவணமானது பூர்த்தி செய்யப்பட்டு அதன் இறுதி அறிக்கையானது 2018 ஜனவரி மாதம் ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டது.

## 19.10 AHEAD நிகழ்ச்சித் திட்டம்

உலக வங்கி நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட 'அதிகரித்த உயர் கல்வி விரிவாக்கத்தின் விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி (AHEAD) நிகழ்ச்சித் திட்டத்தின் 2018 ஆம் ஆண்டுக்கான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்றமானது தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலின் பணிப்பாளர் அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலினால் மிகவும் நுணுக்கமான முறையில் அவதானிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டன.

## 19.11 கல்விசார் பொறுப்புத்தன்மை

2018 ஆம் ஆண்டில், உள்ளகச் சுற்றறிக்கை உருவாக்கம் மற்றும் பொறுப்புக் கூறும் டெம்ப்லேட் (Tempplate) உருவாக்கத்திற்காக 12 அரச பல்கலைக்கழகங்களில் இருந்தும் தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலானது தகவல்களைப் பெற்றுக் கொண்டது.எஞ்சியுள்ள அரச பல்கலைக்கழகங்கள் மூன்றுக்குமான செயன்முறையினை பூர்த்தி செய்வதற்கு தர உறுதிப்பாட்டுக் கவுன்சிலானது எதிர்பார்ப்பது மட்டுமல்லாது 2019 ஆண்டில் பல்கலைக்கழகங்களின் உப வேந்தரகளுடன் இணைந்த செயலமர்வொன்றில் பல்கலைக்கழகங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் இணக்கப்பாட்டு தன்மையினை அபிவிருத்தி செய்வதற்குரிய பொறிமுறையொன்று அபிவிருத்தி செய்யப்பட உள்ளது.

## 19.12 INQAAHE (உயர் கல்வியில் தர உறுதிப்படுத்தல் முகவர்களுக்கான சர்வதேச வலைப்பின்னல்) மாநாடு 2019: 2019 மார்ச் 25-28 வரை

மேற் கூறப்பட்ட சர்வதேச மாநாடானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைமையின் கீழ் இலங்கையில் இடம்பெறுவதற்காகத் திட்டமிடப்பட்டிருக்கின்ற அதே வேளை 2018 ஆம் ஆண்டு மே மாதம் மோரிச்சஸில் இடம்பெற இருக்கின்ற 11 ஆவது INQAAHE ஈராண்டுப் பேரவையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிலிருந்து ஒரு அதிகாரியை பங்கேற்கச் செய்வதற்காக ஆணைக்குழுவானது தனது அனுமதியினை வழங்கியது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அவர்கள் AHEAD நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியுதவியின் கீழான IQAU பணிப்பாளர்களும் கலந்து கொண்ட 2019 ஆம் ஆண்டின் INQAAHE மாநாட்டின் முன்னேற்றத்தினை INQAAHE பேரவையின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பங்கேற்பாளர்களுக்கு குறிப்பிட்டுக் கூறினார்.

INQAAHE செயலகத்திற்கும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அவர்களுக்கும் மத்தியில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையானது 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03 ஆந் திகதி INQAAHE செயலகத்துடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களை அடியொட்டியே கைமொப்பமிடப்பட்டது என்பதுடன் 2018 ஆம் ஆண்டினுள் நடத்தப்பட வேண்டிய செயற்பாடுகள் 2019 INQAAHE மாநாட்டில் செய்யப்பட வேண்டிய செயற்பாடுகள் என இனங்காணப்பட்டு அவை ஒருமுகப்படுத்தப்பட்டன.அதனடிப்படையில் 2019 ஆம் ஆண்டு INQAAHE மாநாட்டிற்காக நான்கு உப தொனிப்பொருள்களுடன் இணைந்ததாக பிரதான தொனிப் பொருளானது பின் வரும் அமைப்பில் இறுதி செய்யப்பட்டது,

**பிரதான மாநாட்டுத் தொனிப்பொருள்:**
***'தர உறுதிப்பாடுஇ தகைமைகள், மற்றும் அங்கீககாரம்:***

**உப தொனிப் பொருள்கள்:**

- புதிய தொழில்நுட்பங்கள், புத்தாக்கம், மற்றும் தர உறுதிப்பாடு: மாறி வரும் தொழில்நுட்பம் மற்றும் கல்வி சார் துறையில் தர உறுதிப்பாடு மற்றும் அதனுடைய பிரதான தத்துவங்களை எவ்வாறு கருத்திற் கொள்வது என்பது தொடர்பில்

- பூகோள ரீதியில் சிந்திப்பது மற்றும் செயற்படுவது: கல்வித் தகைமை மட்ட நியமங்கள் மற்றும் மாணவர் மற்றும் திறமை மொபிலிடி: சவால்கள் மற்றும் சந்தரப்பங்கள்

- பூகோள மயப்படுத்தப்பட்ட தரவுகளுள் நம்பிக்கையினை உறுதிப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல்

- அங்கீகார விடயங்கள் குறித்த சவால்கள் மற்றும் அதன் தீர்வுகள்: பூகோள அபிவிருத்தி கட்டமைப்பிற்குள் அங்கீகாரத்திற்காக வேண்டி தர உறுதிப்பாட்டுப் பங்களிப்புக்கான புதிய வாய்ப்புக்கள்

ஆணைக்குழுவின் அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அவர்களின் பரிந்துரையுடன் உள்ளக ரீதியிலான ஏற்பாட்டுக் குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டது. அதனடிப்படையில், 2019 ஆம் ஆண்டுக்கான INQAAHE மாநாடானது பின்வரும் முறையான வழிமுறைகளைப் பின்பற்றி மற்றும் 2019 ஆம் ஆண்டுக்கான INQAAHE மாநாட்டு இணையதளமானது 2018 செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்கான INQAAHE மாநாட்டு தனியான கொடுப்பனவு நுழைவாயிலானது வெளிநாட்டு விவகாரங்கள் அமைச்சு மற்றும் குடிவரவு மற்றும் குடியகழ்வுத் திணைக்களத்தின் அனுமதியுடன் ஸ்தாபிக்கப்பட்டது. வெளிநாட்டுப் பங்கேற்பாளர்களுக்கான கிரேடிஸ் விசா வசதியானது பெறப்பட்டது. அதனடிப்படையில், மாநாட்டுக்காக பதிவு செய்யும் பொது மக்களுக்காக வேண்டி 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 17 ஆந் திகதி முதல் திறந்து வைக்கப்பட்டது.

மேலும்இ INQAAHE மாநாட்டின் துவக்க நிகழ்வில் முன்வைப்புச் செய்வதற்காகவும் பிற்பாடு அதனை INQAAHE இணையதளத்தில் பதிவேற்றம் செய்து மூன்று ஸ்பொன்சர்சிப்ஸ் பெகேஜஸ் இனை பெற்றுப்கொள்வதற்காக வேண்டி மாநாட்டில் 'இலங்கையின் உயர் கல்வி முறைமை' தொடர்பிலான ஒரு காணொளியினை உருவாக்கி அபிவிருத்தி செய்வது தொடர்பில் நிகழ்ச்சி முகாமையாளர் மற்றும் போக்குவரத்து முகவர் ஒருவரின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குரிய பிரேரணையொன்றும் முன்வைக்கப்பட்டது. இவைகள் யாவும் ஆணைக்குழுவின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டு அதனுடைய அனுமதியானது பெறப்பட்டது.

## 19.13 ஆசிய பசுபிக் தர வலைப்பின்னல் (APQN ) கல்வி சார் மாநாடு (AAC) மற்றும் வருடாந்த பொதுக் கூட்டம் (AGM) 2019:மார்ச் 28-31, 2019

2018 பெப்ரவரி மாதம், 2019 ஆம் ஆண்டுக்காக நடைபெறத் திட்டமிட்டுள்ள INQAAHE மாநாட்டினைத் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டுக்கான APQN AAC மாநாட்டினை இலங்கையில் நடத்துமாற கோரி APQN செயலகத்தின் தலைவர் அவர்களினால்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட எழுத்து மூலக் கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டது. அதனடிப்படையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் அவர்கள் இந்தியாவின் நாக்பூர் இல் இடம்பெற்ற APQN மாநாட்டில் கலந்து கொண்ட போது 2019 ஆம் ஆண்டுக்கான APQN AAC மாநாட்டுக்கான அனுமதிக்காக கையொப்பமிடப்பட்டது. 2019 ஆம் ஆண்டுக்கான APQN AAC மாநாட்டுக்கான இவ் உடன்படிக்கையானது வரவு செலவுத் திட்ட மதிப்பீடானது ஆணைக்குழுவிற்கு முன்வைக்கப்பட்டு ஆணைக்குழுவின் உடைய அனுமதியினைப் பெற்றது.

2019 ஆம் ஆண்டின் INQAAHE மாநாட்டினைப் போன்றே, இவ் விடயங்கள் தொடர்பில் உள்ளக ஏற்பாட்டுக் குழுவானது நிகழ்ச்சி முகாமையாளர், போக்குவரத்து முகவர், மற்றும் அதே அனுசரணையாளர் பெகேஜஸ்களின் சேவைகளை பரிந்துரை செய்தது. APQN மாநாட்டுக்கான இடமானது BMICH என இறுதி செய்யப்பட்டு APQN மாநாட்டுக்குரிய பதிவு செய்தல் செயன்முறையானது 2018 ஆம் ஆண்டு திசெம்பர் INQAAHE மாநாட்டிற்காகப் பயன்படுத்தப்பட்ட கொடுப்பனவு நுழைவாயிவானது பொது மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டின் APQN மாநாட்டிற்கான இணையதள அபவிருத்திப் பணிகளானவை 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2019 ஆம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ள பத்திரங்களை மதிப்பாய்வு செய்வதற்காக வேண்டி தர உறுதிப்பாட்டுக் கவுன்சில் மூலம் மதிப்பாய்வுக் குழுவொன்று குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

## 20. பால் நிலைப் பங்கு மற்றும் சமத்துவம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழான பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களை வலுப்படுத்துவதற்காக வேண்டி அதனுடைய சகல ஊழியர்களுக்காக வேண்டி பொருத்தமான, பால்நிலை மற்றும் பணிபுரியும் கற்றல் சுற்றுச் சூழலை வலுப்படுத்துவதற்காக நிறுவக இயலுமையினை மற்றும் அவர்களுடைய சிறந்த பயிற்சியினை இனங் காண்பதற்காக வேண்டி பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் சக ஊழியர்களுக்கு அவர்களின் பணிகளை எவ்விதப் பாரபட்சமுமின்றி மற்றும் வேறுபாடுகளின்றி ஆற்றுவதற்கு அனுமதி வழங்கும் அமைப்பில் பால்நிலைப் பல்கலைக்கழகக் கலாச்சாரம் மற்றும் பல்கலைக்கழக சுற்றுச்சூழல்கள் வழங்குவதன் மூலம் பல்கலைக்கழகங்களில் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவத்தினை மேம்படுத்துவது முக்கியமாகும்.இந் நோக்கத்திற்கு இணங்கும் விதத்தில் 2018 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### 20.1 ப.மா.ஆ வின் மனத்தாங்கல் நிவர்த்திக்கான மையப்படுத்தப்பட்ட ஒரு பொறிமுறை

- **20.1.1. ஒன்லைன் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைகள் முறைப்பாட்டு வாயில் ( www.eugc.ac.lk/sgbv)**

பல்கலைக்கழக முறைமையினுள் இடம்பெறும் பாலியல் மற்றும் பால்நிலை சார் எந்தவொரு வன்முறையினையும் விசாரணை செய்வதற்காக வேண்டி இது அறிமுகப்படுத்தப்பட்டது. முறைப்பாடானது தாக்கல் செய்யப்பட்ட உடனேயே அது குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால் நிலைப்பங்கு /சமத்துவ நிலையப் பணிப்பாளர், அவ் அப் பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்கள் அல்லது வளாகங்களின் அதிபர்கள், குறித்த நிறுவனங்களின் பணிப்பாளர்கள் ஆகியோர் குறுஞ்செய்தியொன்றின் மூலம் இது குறித்து உசார்படுத்தப்படுவர்.தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகள் யாவும் பால் நிலைப்பங்கு /சமத்துவ நிலையத்தினால் பல்கலைக்கழகங்கள் அல்லது வளாகங்கள் ரீதியில் ஒழுங்குபடுத்தப்பட்டு அவ்வப் பல்கலைக்கழக அல்லது வளாக அதிபர்களுக்க நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டி அனுப்பப்படும்.ப.மா.ஆ வின் பால் நிலைப்பங்கு /சமத்துவ நிலையமானது ஒவ்வொரு முறைப்பாடுகளையும் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்தும் உப வேந்தர்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்ளும்.கண்காணிப்பின் போது உப வேந்தர்களால் வேண்டிக் கொள்ளப்படும் பட்சத்தில் ப.மா.ஆ வானது அறிவுரைகள் மற்றும் ஆதரவினை வழங்கி வைக்கும்.

**20.1.2. ஒன்லைன் பகிடிவதை முறைப்பாட்டு வாயில் (www.ugc.ac.lk/rag) மற்றும் 24/7 அழைப்பு நிலையம் +94 112 123 700**

மீளாய்வாண்டின் போது கிட்டத்தட்ட 250 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன் அவை தொடர்பில் கரிசனை எடுக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பெரும்பாலான முறைப்பாடுகள் அழைப்பு நிலையத்தின் மூலமாக பெறப்பட்டதுடன் அம் முறைப்பாடுகள் யாவும் ஒழுங்குமுறையில் இணையதள வாயிலுக்கு பதிவேற்றம் செய்யப்பட்டதுடன் அது தொடர்பில் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவ நிலையத்தின் பணிப்பாளர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதற்கு மேலதிகமாகஇ பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கழுவின் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவ நிலையத்தின் பணிப்பாளர் அவர்களுக்கு எழுத்து மூலமான / நேரடியாக சந்தித்து முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

மேலும், 2018 ஆம் அண்டு ஜுன் மாதம் ICTA உடன் இணைந்து ஆபத்தான அவசர கால நிலைமைகளின் போது பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் அதன் ஊழியர்களுக்கு உதவியை நாடுவதற்கான அவசர கால பாதுகாப்பு கையடக்க எப் ஆனது அபிவிருத்தி செய்யப்பட்டது. இது 2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் மாதத்தின் போது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

**20.1.3. பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையினை அடியொட்டிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தரவுத் தளம்**

பகிடிவதை மற்றும் பாலியல் துன்புறுத்தல்கள் உடன் தொடர்புடைய மற்றும் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையினை அடியொட்டிய விடயங்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட முறையான தண்டனை வழங்கப்பட்ட அமைப்புக்கள் தொடர்பில் விடயங்களுக்கான முன்னேற்றம் குறித்த அறிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அவ் இணைய தளமானது இற்றைப்படுத்தப்பட்டு முன்னேற்றப்பட்டது. இத்தகைய சந்தர்ப்பங்களில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிலையத்தின் இணைய தளத்தினை சகல அரச பல்கலைக்கழகங்களிலும் மற்றும் அதனுடன் இணைந்துள்ள வளாகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களிலும் அபிவிருத்தி செய்யப்படவுள்ள தரவுத் தளங்களுடன் இணைப்பதற்கு பாலியல் மற்றும் பால்நிலைப் பங்கு நிலையமானது திட்டமிட்டுள்ளது.

**20.2 பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை தொடர்பில் அச்சு / இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பிலான விளம்பரம்**

'பல்கலைக்கழகங்களில் பகிடிவதை மற்றும் பால் நிலை தொடர்பான வன்முறை குறித்து மாணவர்களுக்கான தகவல்' தொடர்பில் மூன்று மொழிகளிலும் விஷேட கையேடானது அச்சிடப்பட்டு 2016/ 2017 ஆம் அண்டின் 29,602 பல்கலைக்கழக அனுமதி பெற்ற புதிய மாணவர்கள் மற்றும் 25,067 இரண்டாம் ஆண்டில் கற்கின்ற மாணவர்கள் மத்தியில் பகிரப்பட்டது.

மேலும், பல்கலைக்கழகங்கள் / உயர்கல்வி நிறுவகங்களினுள் உள்ள உப வெந்தர்கள்இ வளாக அதிபர்கள் மற்றும் பணிப்பாளர்களுக்கு தேவையான அளவு விளம்பரப்படுத்தலை பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை மையப்படுத்திய வன்முறை குறித்த 18''X 22 சுவரொட்டிகள் முன்வைக்கப்பட்டன.

பல்கலைக்கழகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு மேலதிகமாக பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை மையப்படுத்திய வன்முறை குறித்து நியமிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அலுவலகர்கள், அதிகாரிகள் இது தொடர்பில் ஊடகங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கு நேர்காணலை அளித்திருந்தனர்.

## 20.3 ‘ பல்கலைக்கழகங்களில் பகிடிவதையினைத் தடுப்பதற்கான’ அதிகாரம் மிக்க பணிப்படை

2017 ஆம் ஆண்டில் குறிப்பான மற்றும் தெளிவான நோக்கங்களுடன் ஸ்தாபிக்கப்பட்ட ‘பல்கலைக்கழகங்களில் பகிடிவதையினைத் தடுப்பதற்கான’ அதிகாரம் மிக்க பல் பகுதி சார் பணிப்படையானது அதனுடைய நோக்கங்களை அடைவதற்காக வேண்டி 2018 ஆம் ஆண்டில் இரு மாதங்களுக்கு ஒரு முறை அதனுடைய கூட்டத்தொடர்களை நடத்தியது.

## 20.4 பல்கலைக்கழகங்களுள் உள்ள கட்டமைப்புக்கள்

பல்கலைக்கழகங்களிடையே பகிடிவதை மற்றும் பாலியல், பால்நிலை அடியொட்டி பால்நிலை தொடர்பில் கொள்கைகளை அமுலாக்கம் செய்வதற்கு 14 பல்கலைக்கழகங்களிலிருந்தும் சிரேஸ்ட கல்வியியலாளர்களை தலைவர்களாகக் கொண்டு பல்கலைக்கழக முறைமைகளுக்கிடையில் ஒரு வலைப்பின்னலை சிறப்புப் பால்நிலை மையப் புள்ளிகள் (நிலையங்கள், அலகுகள், குழுக்கள்)என்ற அமைப்பில் உருவாக்கல்.

## 20.5 பாலின உணர்திறன் மற்றும் வலுவாக்கம்

பாலியல் உணர் திறன் மற்றும் வலுப்படுத்தலுக்காக வேண்டி பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- சிரேஸ்ட முகாமைத்துவம் மற்றும் பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களிலிருந்து வந்த ஆளணிப் பிரதிநிதித்துவம் ஆகியோருக்காக விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள், உணர்திறன் நிகழ்ச்சித் திட்டங்கள், பயிற்சி செயலமர்வுகள் மற்றும் பயிலுனர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

- ஐந்து பல்கலைக்கழகங்களில் அவர்களின் வேண்டுகோளின் பேரில் செயலமர்வுகள்.

- ஊழியர்கள் மற்றும் மாணவர்களுக்கான புத்தாக்கத் தலைமைத்துவம், பால்நிலை சமத்துவ உயர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் கீழ்வரும் தலைப்பின் கீழ் அதாவது **‘பால்நிலை சமத்துவம் மற்றும் சமநிலையை நோக்கிய பயணம்: பல்கலைக்கழகங்களுக்கிடையிலான பால்நிலை விழா’** ஆனது 2017 ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்டு 2018 ஆம் அண்டு நிறைவு பெற்றது. பல்கலைக்கழக சமூகத்தினை பால்நிலை இடைவெளி குறித்து வலுவூட்டல் செய்வதற்கும் அதன் மூலம் பால்நிலை சமத்துவம் குறித்து வேறுபட்ட கோணங்களில் கற்றலுக்கான வாய்ப்புக்களை அளிக்கவும் மட்டுமன்றி புதிய நடவடிக்கைகளின் மூலம் மாற்றங்களுக்காகக் குரல் கொடுக்கவுமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 20.6 பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவம் , பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை தொடர்பான கொள்கைகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பால்நிலைப் பங்கு மற்றும் சமத்துவத்துக்கான நிலையமானதுஇ கொள்கைகளை உருவாக்குவதற்குப் பல்கலைக்கழகங்களுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்ததடன் அதன் விளைவாக 2018 ஆண்டில் இணைய தளத்திற்கு இரண்டு புதிய பல்கலைக்கழகங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டன.பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையினை சட்டத்தின் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு பல்கலைக்கழகங்களுக்கு வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்ததடன் 2018 ஆம் ஆண்டில் அத்தகைய சட்டங்கள் வழிமுறைகளைப் பின்பற்றி மேலதிகமாக பல்கலைக்கழகமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது.

## 20.7 ஆய்வுக் கற்கைகள்

2018 ஆம் வருடத்தில் உருவாக்கப்பட்ட பின்வரும் விடயங்கள் அமுலில் உள்ளன.

- சகல பல்கலைக்கழங்களினதும் பகிடிவதை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் ஆய்வுப் பணியினை ஆரம்பித்து பல்கலைக்கழக வன்முறை மற்றும் பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறைக்கு எதிராக சகல தரப்புக் காரணங்களையும் துன்புறுத்தல்களையும் அதற்குரிய காரணிகளையும் ஆராய்ந்து அதற்குத் தகுந்த பொறிமுறைகளை உருவாக்குவதற்குரிய தெளிவான புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவதற்காக யுனிசெப் நிறுவனத்துடன் இணைந்து இப் பணியானது முன்னெடுக்கப்பட்டது. ஆய்வின் முதற் பகுதியானது "பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் சம்பவங்கள், பகிடிவதை மற்றும் அதன் தாக்கம், பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறை மற்றும் மாணவர்கள் நடைமுறையில் உள்ள முறைமையின் மூலமான எண்ணிக்கை சார் மற்றும் பண்பு சார் கற்கைகள்" ஆனது இயக்கப்பாட்டில் உள்ளது.
- இலங்கையில் உள்ள ஏழு பல்கலைக்கழகங்களில் 2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பொதுநலவாயக் கற்கைகளுடன் (COL) கூட்டாக இணைந்து இனங்காணப்பட்ட குறைபாடுகளுக்கான வழிமறையினை தீர்மானிப்பதற்காக பால்நிலையினை வலுப்படுத்துதல் தொடர்பில் பயிலுனர்களுக்கான பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டமானது நடத்தப்பட்டது.
- சமகால உயர் கல்வியில் பால் நிலையுடன் தொடர்புடைய பிரதானமான தலைப்புக்கள் குறித்து கல்நதரையாடுவதற்கு மற்றும் விவாதிப்பதற்கான பேரவையினை வழங்கிய 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 'உயர் கல்வியில் பால்நிலை' என்ற தலைப்பிலான இரண்டு நாள் தேசிய செயலமர்வானது இடம் பெற்றது. முன்வைக்கபபட்ட பதினொரு (11) ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் இரண்டு பிரதான பேச்சுக்கள் வெளியீடுகளின் எழுத்தாளர்கள் / விஸ்டாஸ் களுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**21.2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் மற்றும் ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது 1978ம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்கள்,கடமைகள் செயற்பாடுகளுக்கு அமைவாகவும் அத்துடன் உரிய அரச அமைப்புக்களால் சம்பளங்கள்,பணியாளர் சேர்ப்புத்திட்டங்கள் மற்றும் நிரந்தர சேவைக்கான ஆளெடுப்புச் செய்கை மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் சம்பந்தமாக விடுவிக்கப்பட்ட கட்டளைகள் ஆகியவற்றிற்கு ஏற்பவும் விமர்சனைக்குரிய ஆண்டு பகுதியில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் சீர் செயற்பாட்டிற்காக பின்வரும் ஆணைக்குழு சுற்றிக்கைகள் மற்றும் ஸ்தாபன சுற்றறிக்கை கடிதங்கள் வெளியிடப்பட்டன.

கீழே அட்டவணை 21.1 மற்றும் 21.2 ஆகியவற்றில் இது தொடர்பிலான தகவல்கள் தரப்பட்டுள்ளன;

| தொடர் இலக்கம் | சுற்றறிக்கை இல | விடயம் | சுற்றறிக்கைத் திகதி |
|---|---|---|---|
| 1 | 01/2018 | ஸ்கைப் / காணொளி வாயிலாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பதாரர்களை அனுமதித்தல் | 23.01.2018 |
| 2 | 01/2015(ii) | வருகை தரு உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவு மற்றும் பயணம் | 02.02.2018 |
| 3 | 02/2018 | வியாபார பேரவை நடவடிக்கைகள் | 12.04.2018 |
| 4 | 03/2018 | பல்கலைக்கழக முறைமையில் உள்ள கல்வி சாரா ஊழியர்களுக்கு மாதாந்த இழப்பீட்டுக் கொடுப்பனவினை (MCA) | 27.04.2018 |
| 5 | 18/2017(i) | புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் ஒழுக்காற்று உத்தயோகத்தர் பதவியில் உள்ள ஒழுக்காற்று உத்தியோகத்தர் தரம் II, ஒழுக்காற்று உத்தியோகத்தர் தரம் I, பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை உள்வாங்கல் | 08.05.2018 |

| | | | |
|---|---|---|---|
| 6 | 17/2016(v) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பதவியணியினர் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ளகல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான சம்பள சீர்திருத்தம்- 2016 | 01.06.2018 |
| 7 | 17/2016(vi) | பல்கலைக்கழக மானியங்கள்ஆணைக்குழு பதவியணியினர் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் உள்ளகல்வி மற்றும் கல்வி சாரா ஊழியர்களுக்கான சம்பள சீர்திருத்தம்- 2016 | 14.06.2018 |
| 8 | 04/2018 | உப வேந்தர் பதவிக்கான நியமனம் | 28.06.2018 |
| 9 | 05/2018 | பல்கலைக்கழக முறைமையில் உள்ள ஆய்வாளர்களை இனங் காண்பதற்கான வெளிப்படையான அய்வு செயற்றிறன் நிகழ்ச்சித் திட்டம் | 05.07.2018 |
| 10 | 06/2018 | முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு வழிமுறை | 16.07.2018 |
| 11 | 07/2018 | விரிவுரையாளர் (தகுதிகாண்)<br>(மருத்துவம் /பல் மருத்துவம்) மற்றும் விரிவுரையாளர்<br>(தகுதிகாண்)<br>( மருத்துவம் /பல் மருத்துவம் சாராத) ஆட்சேர்ப்புத் திட்டம்) | 02.08.2018 |
| 12 | 08/2018 | சர்வதேச தர நிலைப்பாட்டுடன் இணங்கிச் செல்லும் விதத்திலான கணணிப்படுத்தல் பட்டங்களுக்கான வகைப்பாடு | 28.08.2018 |
| 13 | 09/2018 | மருத்தவக் கல்லூரி / மருத்துவ பிடத்துக்கான ஆளணி மேட்ரண் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் திருத்தம் | 28.08.2018 |
| 14 | 10/2018 | மாதிரிகள் சேகரிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டம் | 03.10.2018 |
| 15 | 11/2018 | பல்கலைக்கழக நிதியுதவித் திட்டம் மற்றும் பல்கலைக்கழக நிதியுதவிக் கொடுப்பனவுகள் | 11.10.2018 |
| 16 | 12/2018 | முகாமைத்துவ உதவியாளர் (புத்தக வைப்பாளர்) / முகாமைத்துவ உதவியாளர் (சிறாய்ப்பர்) / முகாமைத்துவ உதவியாளர் (களஞ்சியக் காப்பாளர்) | 17.10.2018 |
| 17 | 13/2018 | தாதியியலில் பயிற்றுவிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டம் | 26.10.2018 |
| 18 | 14/2018 | தெரிவுக் குழுக்களில் உள்ள அங்கத்தவர்களுக்கான கொடுப்பனவுக் கட்டணம் | 09.11.2018 |
| 19 | 15/2018 | பல்கலைக்கழகங்கள் / உயர் கல்வி நிறுவகங்களில் உள்ள ஊழியர்களுக்கான அக்ரகாரா காப்புறுதித் திட்டம் | 26.11.2018 |
| 20 | 05/2018(i) | பல்கலைக்கழக முறைமையில் உள்ள ஆய்வாளர்களை இனங் காண்பதற்கான வெளிப்படையான அய்வு செயற்றிறன் நிகழ்ச்சித் திட்டம் | 04.12.2018 |
| 21 | 16/2018 | ( மருத்துவம் /பல் மருத்துவம்) சாரா சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I பதவிக்கு சாதாரண பதவியுயர்வின் கீழ் ஆட்சேர்ப்புத் திட்டம் | 11.12.2018 |
| 22 | 17/2018 | பராமரிப்பாளர் மற்றும் சமையற்காரர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டம் | 13.12.2018 |
| 23 | 18/2018 | உடற்றொழில் கல்வி பணிப்பாளர் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டம குறித்த ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல 922 இற்கான திருத்தம் | 12.12.2018 |
| 24 | 19/2018 | ஒழுக்காற்று உத்தியோகத்தர் தரம் II பதவிக்குரிய ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டத்திற்கான திருத்தம் | 17.12.2018 |
| 25 | 20/2018 | தரம் II வகைப்பாடு 'அ' இன் கீழுள்ள தொழில்நுட்ப அதிகாரிப் பதவிக்கான ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டம் | 18.12.2018 |
| 26 | 21/2018 | தொழில்நுட்ப அதிகாரி (ICT) , தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) ,தொழில்நுட்ப அதிகாரி (இலத்திரனியல்), தொழில்நுட்ப அதிகாரி (பொறிமுறை) மற்றும் தொழில்நுட்ப அதிகாரி (இரசாயனவியல்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு வழிமுறைத் திட்டம் | 26.12.2018 |

**அட்டவணை 21.1 2018 இல் வெளியிடப்பட்ட ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள்**

| தொடர் இலக்கம் | தாபனச் சுற்றறிக்கை இல | விடயம் | சுற்றறிக்கைத் திகதி |
|---|---|---|---|
| 1 | 01/2018 | உள்நாட்டு அலுவல்கள் சுற்றறிக்கை இல 01/2018 | 29.01.2018 |
| 2 | 02/2018 | பல்கலைக்கழக முறைமையில் உள்ள ஊழியர்களின் இடமாற்றம் | 09.02.2018 |
| 3 | 03/2018 | விரிவுரையாளர் (தகுதிகாண்) (மருத்துவம் / பல் மருத்துவம்) மற்றும் (மருத்துவம் / பல் மருத்துவம் சாராத) | 20.02.2018 |
| 4 | 04/2018 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 31/(2001)(XII) பயன்படுத்துதல்- ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர் வரிசை | 26.02.2018 |
| 5 | 05/2018 | ஆடசேர்ப்புக்களுக்காக வேண்டி ஒவ்வொரு தெரிவுக் குழுக்கழுக்குமான புள்ளியிடல் திட்டம் | 02.04.2018 |
| 6 | 06/2018 | பல்கலைக்கழக நிர்வாக மற்றும் நிதியியல் அலுவலகர்களுக்கான அறிமுகப் பயிற்சி நெறி நிகழ்ச்சித் திட்டம் | 05.04.2018 |
| 7 | 07/2018 | மே தின விடுமுறை வழங்கல்- 2018 | 20.04.2018 |
| 8 | 08/2018 | ரமழான் கால விஷேட விடுமுறை வழங்குதல் -2018 | 15.05.2018 |
| 9 | 09/2018 | சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் வழங்குதல் | 19.06.2018 |
| 10 | 10/2018 | இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் ஆய்வு கூடத் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி | 03.08.2018 |
| 11 | 11/2018 | மருத்துவப் பட்டப்பின் நிறுவகத்தின் சான்றுப்படுத்துலக்கு அல்லது கலாநிதிப் பட்டத்திற்காக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II (மருத்துவம் /பல் மருத்துவம்) மற்றும் (மருத்துவம் /பல் மருத்துவம் சாராத ) மற்றும் விரிவுரையாளர் (தகுதிகாண்) (மருத்துவம் / பல் மருத்துவம் சாராத ) பதவிகளுக்கு விண்ணப்பதாரர்களை விண்ணப்பிக்கச் செய்தல் | 11.09.2018 |
| 12 | 03/2018(i) | மருத்துவ மற்றும் பல் மருத்துவ வகைப்பாட்டின் கீழ் விரிவுரையாளர் (தகுதிகாண்), மற்றும் மருத்துவம் / பல் மருத்துவம் சாராத )ஆட்சேர்ப்பு | 26.10.2018 |
| 13 | 12/2018 | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின மற்றும் பல்கலைக்கழகங்களின் அரசாங்கக் கணக்காய்வு அலுவலக கிளைக் காரியாலயத்தின் கணக்காய்வு அத்தியட்சகர்களுக்கான போக்குவரத்து வசதிகள் | 29.10.2018 |
| 14 | 13/2018 | அரசாங்கத் துறை நிறுவகங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள் மற்றும் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளில் அதிகரிப்பு | 30.11.2018 |
| 15 | 14/2018 | சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்கு பதவி உயர்வு பெறுவதற்குரிய சரியான திகதியை தீர்மானித்தல் | 11.12.2018 |
| 16 | 15/2018 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல.28/2018 அமுல்படுத்துதல்-2019 ஆம் ஆண்டுக்கான வேலைகள் துவக்கம் | 26.12.2018 |
| 17 | 16/2018 | பல்கலைக்கழக முறைமையில் ஊழியர்களின் இடமாற்றம் | 26.12.2018 |
| 18 | 17/2018 | பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 29/2018 அமுல்படுத்துதல்-அரச ஊழியர்களுக்கான விஷேட முற்கொடுப்பனவு ஆண்டு 2019 | 28.12.2018 |

**அட்டவணை 21.2 2018 இல் வெளியிடப்பட்ட ஸ்தாபனச் சுற்றறிக்கைக் கடிதங்கள்**

## 22. சிறப்பான சேவைகளுக்காக வேண்டி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வசதிகளை மேம்படுத்தல்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் செயலகத்தினால் ஆற்றப்படும் பொதுவான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகளுக்கு அப்பால், 2018 ஆம் ஆண்டில் அதனுடைய பங்குதாரர்களுக்கு சிறப்பான சேவைகளுக்காக வழங்குவதற்காக வேண்டி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வசதிகளை மேம்படுத்துவதற்குரிய பின்வரும் பிரதான கருத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- மக்கள் தொடர்புக் காரியாலயம் (PRO) அலுவலகத்திற்கான புதிய கட்டடம் மற்றும் பொது மக்கள் காத்திருப்புப் பகுதி ஆகியவற்றின் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2018 ஆம் ஆண்டின் இறுதியாகும் போது அவற்றுள் 60% ஆன வேலைகள் பூர்த்தி அடைந்த நிலையில் இருந்தன.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சகல எனலொக் தொலைபேசிகளையும் டிஜிட்டல் தொலைபேசி முறைமைக்கு மாற்றீடு செய்தல்.
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் ஒக்ஸபேர்ட் பல்கலைக்கழக அச்சகம் மற்றும் எமரல்ட் குரப் ஆகியோரின் ஏற்பாட்டுடன் 2018-2020 ஆண்டு காலப்பகுதியில் தேசிய டிஜிட்டல் நூலகம் ஒன்றினை ஸ்தாபித்தல்
- ஒட்டு மொத்த பல்கலைக்கழக முறைமையின் நன்மைக்காக வேண்டியும் Anti – Plagiarism (கட்டுரைத் திருட்டுக்கு எதிரான) மென்பொருள் ஒன்றினை விலைக்கு வாங்குதல்

மேற் சொன்ன விடயங்களுக்கு அப்பால, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நிதியியல் திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் டிஜிட்டல் மற்றும் பௌதீக ஆவணங்கள் காப்பகமானது 2018 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டது.

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்திறன் பற்றிய கூற்று

| | குறிப்புகள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| வருமானம் | | | |
| அரசாங்க மானியம் | 19 | 2,386,682,655 | 1,992,731,010 |
| அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்பு | | 80,023,316 | - |
| ஏனைய வருமானங்கள் | 20 | 65,098,289 | 64,077,113 |
| | | | |
| மொத்த வருமானம் | | 2,531,804,260 | 2,056,808,123 |
| | | | |
| செலவுகள் | | | |
| சம்பளம், ஊதியம், மற்றும் ஊழியர் நலனோம்புகை | 21 | 249,692,407 | 220,322,248 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் | 22 | 109,098,237 | 102,662,446 |
| மானியங்கள் மற்றும் ஏனைய மாற்றல்கள் | 23 | 2,020,023,111 | 1,594,700,603 |
| தேய்வுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் பெறுமானத் தேய்வு | 24 | 35,347,400 | 26,304,120 |
| புனரமைப்புச் செலவுகள் | 25 | 2,440,711 | 2,068,012 |
| ஏனைய செலவுகள் | 26 | 40,498,250 | 38,092,444 |
| மொத்தச் செலவு | | 2,457,100,115 | 1,984,149,873 |
| | | | |
| மேலதிகம் ∴ (குறைவு) | | 74,704,144 | 72,658,248 |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 2018 டிசம்பர் 31 திகதியன்று காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2018 | 2017 |
|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசு பெறுவனவு | | |
| மேலதிகம் ∴ (குறைவு) | 74,704,144 | 72,658,248 |
| சீர்படுத்தல்கள் | | |
| முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்தல்கள் | 249,583 | 871,200 |
| ருபுஹ அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றுதல் | (63,203,742) | (85,996,810) |
| ஆளணி அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றுதல் | - | (6,000,000) |
| சிறந்த பல்கலைக்கழக மாணவனுக்கான புலமைப்பரிசில் கணக்குத் தலைப்புக்கு மாற்றுதல் | - | (2,000,000) |
| தேய்வுகள் | 35,347,401 | 26,304,119 |
| பெறுமானத் தேய்வுகள் | (37,173,810) | (28,834,479) |
| பிணைமுறிகள் உயர் விலை | 361,786 | 361,786 |
| இருப்புக்களின் அதிகரிப்பு | (25,479,113) | (4,423,644) |
| கொடுப்பனவுகளின் குறைவு | (14,562,690) | (487,842,115) |
| பணிக்கொடைக்கான ஒதுக்கீடு | 6,939,452 | 7,854,955 |
| பணிக்கொடைக்கான வட்டி | 3,568,116 | 3,568,116 |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை (இலாபம்)∴ நட்டம் | - | 114,868 |
| முன்னோக்கிய கொடுப்பனவுகள் ∴ வைப்புக்களின் குறைவடைவு | 21,857,357 | (5,918,566) |
| அறவீடுகளின் அதிகரிப்பு | (141,071,385) | 52,202,860 |
| பணிக்கொடை செலுத்தல்கள் | (3,590,848) | (2,824,949) |
| முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்தல்கள் - மூலதன மதிப்பாக்கம் | 24,808,991 | 5,335,845 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | **(117,244,757)** | **(454,568,565)** |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (125,174,663) | (60,704,218) |
| பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் விற்பனை | - | 1,126,500 |
| நிலையான வைப்புக்கள் ∴ திறைசேரிப் பிணைப்பத்திரங்களில் முதலீடு | (5,754,120) | (276,359) |
| மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளின் அதிகரிப்பு - ருபுஹ கட்டிடம் மற்றும ருபுஹ நிதிப் பிரிவு, மென்பொருள்கள் | 57,095,312 | (70,339,491) |
| முதலீட்டு செயற்பாடுகளின் ஊடாக பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல் | **(73,833,471)** | **(130,193,568)** |
| நிதிசார் நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| மூலதன உதவி பெறுவனவுகள் | 9,500,000 | 84,400,000 |
| புனரமைப்பு உதவிகள் பெறுவனவுகள் | 1,000,000 | 14,000,000 |
| ஆராய்ச்சி நிதியத்தின் குறைவு | (7,571,502) | 182,017 |
| விசேட நிதியத்தின் குறைவு | (1,050,043) | 419,124 |
| மூலதன உதவி (குறைவு) ∴ அதிகரிப்பு | (12,627,967) | - |
| புலமைப் பரிசில் நிதியப் பெறுவனவுகள் ∴ (கொடுப்பனவுகள்) | 4,569,880 | 3,712,553 |
| ஆளணி அபிவிருத்தி நிதியத்தின் ∴ ருபுஹ அபிவிருத்தி நிதியத்தின் அதிகரிப்பு | (36,842,567) | 89,988,402 |
| செலவிடப்படாத மனித வளங்கள் அபிவிருத்தி நிதியத்தின் அதிகரிப்பு ∴ (குறைவு) | (9,792,378) | 9,792,378 |
| 2017 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் குறைவு | (125,300,000) | (283,754,248) |
| நிதிசார் நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | (178,114,576) | (81,259,774) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் அதிகரிப்பு ∴ (குறைவு) | (369,192,804) | (666,021,907) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசு அல்லாத சொத்துக்கள் | 372,420,543 | 1,038,442,451 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசு அல்லாத சொத்துக்கள் | 3,227,739 | 372,420,544 |

குறிப்பு - 1

| | | |
|---|---|---|
| ருபுஹ யு.∴ஹ 2323284 - இலங்கை வங்கி | (17,886,590) | (16,707,725) |
| இலங்கை வங்கி - பல்கலைக்கழக புலமைப் பரிசில் நிதியம் | 697,771 | 8,898,672 |
| இரவு கால வைப்புக்கள் | 9,000,000 | 356,000,000 |
| நிதிய முகாமைத்துவக் கணக்கு | 11,416,557 | 24,229,595 |
| | 3,227,739 | 372,420,542 |

# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்புக்கள் | 2018 | 2017 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 1 | 3,227,738 | 372,420,542 |
| பெறப்பட வேண்டிய கணக்குகள் | 2 | 215,144,092 | 74,072,707 |
| இருப்புக்கள் | | 32,743,543 | 7,264,430 |
| முன்னோக்கிய கொடுப்பனவுகள்∴வைப்புக்கள் | 3 | 4,840,103 | 26,697,460 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 255,955,475 | 480,455,139 |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 4 | 86,117,594 | 87,218,238 |
| காணிகள் மற்றும் கட்டிடங்கள் | 4 | 605,338,236 | 516,256,227 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் - கணனி மென்பொருள் | | 9,408,128 | 7,426,856 |
| மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் - நிர்மாணங்கள் | | 21,694,419 | 89,043,481 |
| மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் - கணனி மென்பொருள் | | 10,253,750 | - |
| முதலீடுகள் | 5 | 49,504,686 | 56,168,243 |
| பிணை முறிகள் உயர் விலை | 6 | 6,085,131 | 7,011,686 |
| அன்பளிப்புக்கள்∴புலமைப்பரிசில் நிதிய முதலீடு | 7 | 31,386,516 | 18,968,838 |
| மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள் | | 819,788,459 | 782,093,568 |
| மொத்தச் சொத்துக்கள் | | 1,075,743,934 | 1,262,548,707 |
| பங்குகள் மற்றும் பொறுப்புக்கள் | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| செலுத்த வேண்டிய கணக்குகள் | 8 | 112,639,024 | 129,196,581 |
| முன்னோக்கிய கொடுப்பனவுகள்∴வைப்புக்கள் | 9 | 10,697,221 | 8,702,354 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 123,336,245 | 137,898,935 |
| நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதிய அனுகூலங்களுக்கான ஒதுக்கீடுகள் | 10 | 56,391,991 | 50,040,039 |
| அன்பளிப்புக்கள் நிதியம் | 11 | 32,182,065 | 27,612,185 |
| ஆராய்ச்சி நிதியம் | 12 | 5,234,758 | 12,806,260 |
| விசேட நிதியம் | 13 | 31,371,393 | 32,421,435 |
| மொத்த நடைமுறையல்லாத பொறுப்புக்கள் | | 125,180,207 | 122,879,919 |
| மொத்தப் பொறுப்புக்கள் | | 248,516,452 | 260,778,854 |
| தேறிய சொத்தக்கள் | | 827,227,482 | 1,001,769,853 |
| திரட்டு நிதியம் மற்றும் இருப்புக்கள் | | | |
| நிறுத்திவைக்கப்பட்ட மூலதன பெறுவனவுகள் | 14 | 205,192,250 | 193,111,003 |
| செலவிடப்படாத மூலதன உதவிகள் | 15 | 42,297 | 25,949,273 |
| செலவிடப்படாத புனமைப்புக்கள் மற்றும் மேம்படுத்தல்கள் உதவிகள் | 16 | - | 1,659,639 |
| செலவிடப்படாத மனித வளங்கள் அபிவிருத்தி உதவிகள் | 17 | - | 9,792,378 |
| செலவிடப்படாத 2017 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் உதவிகள் | 18 | - | 125,300,000 |
| அன்பளிப்புக்கள் மற்றும் உதவிகள் | | 1,127,957 | - |
| ஊழியர் மேம்பாட்டு நிதியம் | | 30,031,067 | 35,546,482 |
| ருபுஊ அபிவிருத்தி நிதியம் | | 69,770,159 | 101,097,310 |
| மீள் மதிப்பீட்டு மேலதிகம் | | 509,313,767 | 509,313,767 |
| திரட்டிய மேலதிகம் ∴ (குறைவு) | | 11,749,985 | (0) |
| மொத்த தேறிய சொத்துக்கள் ∴ பங்குகள் | | 827,227,482 | 1,001,769,856 |

நிதிக் கூற்றுக்களில் பக்க இலக்கம் 05 முதல் 11 வரை கணக்கியல் கொள்கைகள் மற்றும் பக்க இலக்கம் 12 முதல் 22 வரை கணக்குகள்
மானியங்கள் ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உ
இந்த நிதிக் கூற்றுக்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அங்கீகரித்துள்ளதுடன் ஆணைக்குழு சார்பில் கீழ்

| | | |
|---|---|---|
| பேராசிரியர் மொஹான் டி சில்வா<br>தலைவர் | பேராசிரியர் மலிக ரணசிங்க<br>ஆணைக்குழு உறுப்பினர் | ஆர்.ஏ.யூ.ரணவீர<br>கணக்காளர் |

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான

| விபரம் | நிறுத்திவைக்கப்பட்ட உதவிகள் | செலவிடப்படாத உதவிகள் | நிறுத்திவைக்கப்பட்ட இலாபம் நட்டம் | ருபுஹ அபிவிருத்தி நிதியம் | மீள மதிப்பீடு செய்யும் மேலதிகம் | ஆளணி அபிவிருத்தி நிதியம் | அன்பளிப்புக்கள் மற்றும் உதவிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2018.01.01 ஆம் திகதியன்று மீதி | 193,111,003 | 162,701,290 | - | 101,097,310 | 509,313,767 | 35,546,482 | - | 1,001,769,853 |
| முன்னைய ஆண்டுகளுக்கான சீர்படுத்தல்கள் | | | 249,583 | | | | | 249,583 |
| 2017.01.01 ஆம் திகதியன்று மீதி | 193,111,003 | 162,701,290 | 249,583 | 101,097,310 | 509,313,767 | 35,546,482 | | 1,002,019,436 |
| மூலதன நிதி ஏற்பாடுகளின் அதிகரிப்பு | 12,081,247 | | | | | | | 12,081,247 |
| மேலதிகம் ∴ பற்றாக்குறை | | | 74,704,144 | | | | | 74,704,144 |
| செலவிடப்படாத மூலதன உதவிகளின் அதிகரிப்பு | | (162,658,993) | | | | | | (162,658,993) |
| ருபுஹ அபிவிருத்தி நிதியத்திற்கு ∴ ஆளணி அபிவிருத்தி நிதியத்தின் குறைவு | | | | | | (5,515,415) | | (5,515,415) |
| ருபுஹ அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றுதல் (15மூ நிகழ்ச்சித் திட்ட மீளாய்வுகள் மற்றும் நிறுவனம்சார் மீளாய்வுகள் ஊடாக மாற்றுதல்) | | | (3,203,742) | 3,203,742 | | | | - |
| ஆண்டினுள் பெறப்பட்ட அன்பளிப்புக்கள் மற்றும் உதவிகள் | | | | | | | 1,170,254 | 1,170,254 |
| அன்பளிப்புக்கள் மற்றும் உதவிகளின் தேய்வு | | | | | | | (42,297) | (42,297) |
| வருமானத்திற்கு மாற்றுதல் | | | | (94,530,894) | | | | (94,530,894) |
| ஆளணி அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றுதல் | | | | | | | | - |
| ருபுஹ அபிவிருத்தி நிதியத்திற்கு மாற்றுதல் | | | (60,000,000) | 60,000,000 | | | | - |
| 2018.12.30 ஆம் திகதியன்று மீதி | 205,192,250 | 42,297 | 11,749,985 | 69,770,158 | 509,313,767 | 30,031,067 | 1,127,957 | 827,227,482 |

HED/A/UGC/FA/18 2019 மே....

தலைவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கணக்கெடுப்பு அபிப்பிராயம்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108 (1) உப பிரிவின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் உண்மை நிலைக் கணக்கெடுப்புக் கருத்துரைக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டிருக்கும் விடயங்களின் ஊடாக ஏற்படும் அழுத்தங்கள் தவிர ஆணைக்குழுவின் 2018 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ∴ இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கணக்கெடுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) ஆணைக்குழுவுக்குரிய அறவிடும் கணக்கொன்றில் (ஊழுடடநஉவழை யுஉஉழரவெ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூ. 1,609,500 மீதியுடன் தொடர்பான வரவுகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவின் அபிவிருத்தி நிதியத்தின் செயலாற்றுகை கூற்றுக்கு மீளாய்வாண்டில் வருமானமாக ரூ. 80,023,316 மாற்றப்பட்டிருந்தது. அதற்கமைய மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகை அறிக்கைக்கமைய இருக்க வேண்டிய உண்மையான குறைபாடான ரூ.5,319,171 தொகை கணக்குகள் ஊடாக வெளிப்படுத்தப்படாமல் ரூ.74,704,144 மேலதிகமாக காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்கவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிறுவகத்தை தொடந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ந்தியங்குதல் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்புடன் (தொடர்ந்தியங்குதலுடன்) தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிறுவகத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் அது பொருண்மையான தவறான கூற்றுக்களை வெளிப்படுத்திக்கொள்வதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க முடியுமாக முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது., மேலும்,

- மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல் ஊடாக மோசடிகள் அல்லது தவறு காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்வதற்கு, போதுமானளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் மோசடிகளால் ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடி ஏற்படுவதற்கான காரணங்களாகும்.
- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டபோதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின்

அடிப்படையில் கணக்கீட்டிற்கான நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு (தொடர்ந்து இயங்குதல்) சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடைய நேரிடலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் (ஆளுகை) தரப்புக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய எனது அறிக்கையின் உண்மை நிலைமை கணக்கெடுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கம் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களை நான் பெற்றுக்கொண்டதுடன், எனது ஆய்வின்போது நிறுவகம் உரிய நிதி அறிக்கைகளை பேணி வந்துள்ளமையை காண முடியுமாக இருக்கின்றது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (ஐஐஐ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (ள) (ஈ) (ஙை) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் மற்றும் அளவு சார்ந்த விடயங்களுக்குள் வரையறுக்கப்பட்ட வகையில் கீழ் குறிப்பிடப்படும் கூற்றுக்களை வெளியிடுமளவிற்கான எந்த விடயமும் எனது கவனத்திற்குட்படவில்லை.

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிறுவகத்தின் நிர்வாக சபையின் எவரேனுமொரு அங்கத்தவருக்கு நிறுவகத்துடன் தொடர்புடைய ஏதேனுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது வேறு விதத்தில் பொதுவான வர்த்தக நிலைமைக்குப் புறம்பான வகையில் தொடர்பு இருத்தல்.

2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர ஏதேனுமொரு ஏறபுடைத்தாகும் எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நிறுவகத்தின் நிர்வாக சபையினால் வெளியிடப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இயைந்துசெல்லாத வகையில் செயறபட்டிருத்தல்.

2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய நிறுவகத்தின் அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகளுடன் இயைந்து செல்லாத வகையில் அலுவல் மேற்கொண்டிருந்தமை.

2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைக்கமைய கீழ் குறிப்பிடப்படும் அவதானிப்புக்கள் தவிர நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாக, வினைத்திறனுடன் மற்றும் பயன்மிக்க வகையில் உரிய காலப் பகுதிக்குள் குறிப்பிட்ட ஏற்புடைத்தாகும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெற்றுக்கொள்ளப்பட்டு பயன்படுத்தாதிருந்தமை.

(அ) தேசிய பெறுகை முகவர் நிறுவனங்கள் சம்பந்தமான 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 08 இன் 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் சந்தை விலை முன்கணிப்பு முறையின் கீழ் அவசர பெறுகைகள் தவிர ஏனைய விலை மனுக்கோரலுக்கான குறைந்த கால எல்லை 07 நாட்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் ஆணைக்குழு ரூ.762,805 பெறுமதிமக்க எழுது பொருட்களை 02 சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்யும்போது அதற்கமைய அலுவல் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) தேசிய பெறுகை முகவர் நிறுவனங்கள் சம்பந்தமான 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 08 இன் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூ.973,365 பெறுமதிமிக்க எழுது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரசித்தப்படுத்தப்பட்ட விலைமனுக்கோரலின்றி 2018 பெப்ரவரி 02 ஆம் திகதி 10 நிறுவகங்களுக்கு 03 சந்தர்ப்பங்களில் விலை மனுக்கோரல் கடிதங்கள் வெளியிடப்பட்டிருந்தன.

(இ) தேசிய பெறுகை முகவர் நிறுவனங்கள் சம்பந்தமான 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 08 இன் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் தேவையான முறையான

அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு போதுமானளவு காலத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் விலை அளவுகள் மதிப்பீட்டு அலுவலை கூடியவிரைவில் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், பெறுகை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கால கட்டத்திற்குள் விலை அளவுகளை மதிப்பீட்டுக்குட்படுத்தல் வேண்டும். ஆயினும் 2018/2019 ஆண்டுகளுக்காக சுத்தப்படுத்தல் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக கோரப்பட்டிருந்த விலை அளவுகள் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தபோதிலும் அவ்வாறு திறக்கப்பட்ட விலை அளவுகளை மதிப்பீட்டுக்குட்படுத்தி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தை வழங்குவதற்கு சுமார் 100 நாட்கள் தாமதப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மாதிரிச் சோதனைகளின்போது கண்டறியப்பட்டதன் பிரகாரம் 2018/2019 ஆண்டுகளுக்காக சுத்தப்படுத்தல் சேவையைப் பெற்றுக்கொள்வதுடன் தொடர்புடைய பெறுகைச் செயற்பாடுகளின்போது பெறுகைத் திட்டத்தினை மீறியமை, விலை மனுக்கோரல், விலை மனுக்களைத் திறத்தல், மதிப்பீட்டுக்குட்படுத்தல் போன்ற பெறுகை செயற்பாடுகளில் பலவீனங்கள் நிலவியதுடன் தகைமை பெற்ற ஒப்பந்தப்பணிதாரர் ஒருவரை தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமையினால் ரூ.1,812,873 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2017 ஆம் ஆண்டில் விலை மனுக் கோரப்பட்டு மீளாய்வாண்டில் தொழில்நுட்ப மதிப்பீட்டு அலுவல்களை மேற்கொண்டு கணனிகளைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் பெறுகைக் குழுவினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைக் கவனத்திற்கொள்ளாமல் அந்தக் குழுவின் கூட்டாகத் தீர்மானத்தை எடுக்காமல் ஒரு அங்கத்தவரால் முன்வைக்கப்பட்ட தொழில்நுட்பம்சார் சிக்கலின் அடிப்படையில் குறைந்த விலை அளவை நிராகரித்தமையும், பெறுகைக் குழுவினால் மீண்டும் விலை மனுக் கோருமாறு விடுக்கப்பட்ட பரிந்துரையை செயற்படுத்தாமை காரணமாக 05 கணனிகளைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக 1.2 மில்லியன் ரூபா செலவழித்து 10 மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் கணனிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருத்தல்.

## 3. ஏனைய அவதானிப்புக்கள்

(அ) 2014/2015 கல்வியாண்டுடன் ஒப்பிடுகையில் 2017/2018 கல்வியாண்டில் பல்கலைக்கழகக் கல்விக்காக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கையில்

பல்கலைக்கழகத்திற்கு அனுமதித்துக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 43.7மூ இலிருந்து 39மூ வரை வீழ்ச்சியடைந்திருந்தமையை அவதானிக்க முடியுமாக இருந்ததுடன், 2017/2018 2017/2018 கல்வியாண்டில் பல்கலைக்கழகக் கல்விக்காக தகைமை பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 19மூ எனவும் அவதானிக்கப்பட்டது. அத்துடன் கடந்த கிட்டிய 03 கல்வி ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் வேறுபாடு 3,434 இலிருந்து 783 வரை குறைவடைந்திருந்தது.

(ஆ) பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும்போது பல்வேறு பாடநெறிகளுக்காக தகைமை பெற்றுக்கொண்ட மாணவர்கள் அந்தப் பாடநெறிகளின் கீழ் பதிவு செய்துகொள்ளாமை, வேறு பாடநெறிகளுக்கு மாறுதல், ஏனைய அரசாங்க உயர் கல்வி நிறுவகங்களில் பாடநெறிகளைப் பயிலுவதனால் பதிவை இரத்துச் செய்துகொள்ளல் மற்றும் தொடர்ந்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமென பல்கலைக்கழகங்களினால் அறிவித்தல் விடுக்கப்பட்டமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 2017/2018 இற்கு கிட்டிய கல்வியாண்டில் மற்றும் கடந்த 03 கல்வியாண்டுகளில் வெற்றிடங்கள் நிலின. அதற்கமைய மீளாய்வாண்டில் 897 வெற்றிடங்களும் கடந்த 03 கல்வியாண்டுகளில் முறையே 738, 2226 மற்றும் 1455 என்ற ரீதியில் வெற்றிடங்கள் நிலவின.

(ஈ) 2011 ஜனவரி 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய உள்நாட்டுப் பல்கலைக்கழங்களில் தகைமை பெற்ற வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது உத்தேச மொத்த மாணவர் எண்ணிக்கையில் 0.5மூ மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்கமைய கிட்டிய 05 வருடங்களில் உத்தேச மற்றும் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையை கவனத்திற்கொள்ளும்போதுஉத்தேச மாணவர்களின் எண்ணிக்கையில் அனுமதித்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை 09மூ - 50மூ இற்கிடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(உ) உத்தேச மொத்த மாணவர்களின் எண்ணிக்கையில் 4.5மூ ஆன வெளிநாட்டு மாணவர்களை பணம் செலுத்தும் அடிப்படையில் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ள முடியுமாக இருப்பினும், 2017/2018 கல்வியாண்டிற்காக உத்தேச மாணவர்களின் எண்ணிக்கையில் அனுமதித்துக்கொள்ள முடியுமான மாணவர்களின் எண்ணிக்கை 1,377 ஆக

இருந்தபோதிலும் அதில் 0.9 மூ மாத்திரமே அனுமதித்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) 2012 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைக்கு புறம்பாக 13 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் நடாத்தப்பட்டுவரும் 25 பாடநெறிகளுக்கு நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு மேலதிகமாக தகுதி சோதனையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்தக் கொள்கையை களணிப் பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறிக்காக நடைமுறைப்படுத்தியமையினால் அந்தப் பாடநெறிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் “ஸு” புள்ளியைப் பார்க்கிலும் அதிக “ஸு” புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தகுதி சோதனையின்போது 70 - 82 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தபோதிலும் அவ்வாறான 09 மாணவர்களுக்கு இந்தப் பாடநெறியைப் பயிலுவதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது.

(எ) 2014 / 2015 கல்வியாண்டில் முதல் தடவையாக இணையத்தளம் ஊடாகவும், பொதுவான முறையின் கீழும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. 2017/2018 கல்வியாண்டில் இந்த இணையவழி முறைக்காக ஆண்டிறுதி வரை ரூ.9,347,750 மற்றும் மீளாய்வாண்டு முதல் ரூ.700,000 பராமரிப்புச் செலவும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறிருக்கையில் பொதுவான முறை மற்றும் இணையவழி முறை ஆகிய இரண்டு முறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்ட 2015/2016 கல்வியாண்டில் மாணவர்களைப் பதிவுசெய்துகொள்ளும்போது மாணவர்களினால் முன்வைக்கப்பட்டிருந்த சிக்கல்களின் எண்ணிக்கை 1081 இலிருந்து 2018/2019 கல்வியாண்டாகும்போது 5602 வரை அதிகரித்திருந்தது.

(ஏ) பேண்தகு அபிவிருத்தி சம்பந்தமான ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல் சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிந்திருந்தபோதிலும் அதன் அலுவல்களுடன் தொடர்பான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கான வேலைத் திட்டத்தை திட்டங்களுக்குள் உள்ளடக்கி

அந்த இலக்குகளின் போதான திருப்புமுனைகள் மற்றும் இலக்கை அடைந்துகொள்வதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை இனங்கண்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிய முடியவில்லை.

(ஐ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பேணிவரப்படும் மொத்தம் 39.2 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க நிதியத்தின் மீதி பல வருடங்களாக செயற்படாதிருந்தது.

(ஒ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் நிலவும் மொத்தம் 68.8 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க 21 நிதியங்களினால் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகை சுமார் 34.12 மில்லியன் ரூபாவாகும். அதற்கமைய அந்த நிதியங்களின் பெறுமதியில் 34.17 மில்லியன் ரூபா அதாவது 49மு பயன்மிக்க வகையில் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

... 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதன் நடவடிக்கைகள் சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள் | | | |
| (அ)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குரிய சேகரிப்புக் கணக்கொன்றில் (Collection Account) மீளாய்வாண்டின் இறுதியில் நிலவிய ரூ.1,609,500/- மீதி மற்றும் தொடர்புடைய கிடைப்பனவுகள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | குழுவின் அறவீடுகள் கணக்கான இந்தக் கணக்கின் மீதி அனைத்து மாதங்களினதும் இறுதித் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2323284 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. ஆனாலும் இவ்வாறு பணத்தை மாற்றும்போது 2018.12.31 ஆம் திகதிக்கான இறுதி வங்கி மீதி 2019.01.01 ஆம் திகதியன்றே மாற்றப்பட்டுள்ளது. அதற்கமைய குறிப்பிட்ட பணம் 2019.01.01 ஆம் திகதியன்று உரிய கணக்கில் வைப்புச்செய்யப்பட்டுள்ளது. | கணக்கு காலப் பகுதிக்குரிய அனைத்துக் கணக்கு மீதிகளையும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குரிய சேகரிப்புக் கணக்கின் (Collection Account) பணத்தை நிதியாண்டின் இறுதித் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொதுக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ)ஆணைக் குழுவின் அபிவிருத்தி நிதியத்திலிருந்து செயலாற்றுகைக் கூற்றில் மீளாய்வாண்டின் வருமானமாக ரூ.80,023,316/- மாற்றப்பட்டிருந்தமை காரணமாக மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றுகை அறிக்கையில் உண்மையான பற்றாக்குறையான 5,319,171/- கணக்குகள் ஊடாக வெளிப்படுத்தாமல் ரூ.74,704,144/- மேலதிகத்தை காண்பிக்கப்பட்டிருந்தது. | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஈட்டப்படும் வருமானத்தின் ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழகச் சட்டத்தினூடாக ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை மேற்கொள்வதற்காக அரசாங்க நிதி போதுமான அளவில் இல்லாதிருக்கும்போது அந்த நிதியத்தை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பயன்படுத்தப்படும். அதற்காக பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் இலக்கம் 10 (3) பிரிவு மற்றும் நிதி அமைச்சின் 2004.04.30 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | நிதிச் செயலாற்றுகை கூற்றின் ஊடாக ஆண்டிற்கான மீண்டெழும் வருமானம் மற்றும் செலவுகளை மாத்திரம் இனங்கண்டுகொள்ள வேண்டியிருப்பதுடன் அதற்கமைய ஏற்படும் மேலதிகம் அல்லது பற்றாக்குறையை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும். | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 10 (1) ஆம் பிரிவுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட்டுள்ளதுடன், இலக்கம் :2016.'.04 மற்றும் 01.03.2016 ஆம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய அந்த நிதியத்திற்கு வருமானங்கள் வரவு வைக்கப்படும்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டிற்கான செலவுகளைத் தீர்ப்பதற்காக அரசாங்க நிதி போதுமானதாக இருக்காமையின் காரணமாக அந்த அபிவிருத்தி செலவினத் தலைப்பின் ஊடாக 80 மில்லியன் ரூபா தொகை பயன்படுத்தப்பட்டது.<br><br>ஆனாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையூடாக சுட்டிக்கட்டப்பட்டுள்ள பிரகாரம் எதிர்வரும் ஆண்டின்போது அவ்வாண்டுடன் தொடர்புடைய பற்றாக்குறை நிதிச் செயலாற்றுகை கூற்றின் |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | | | ஊடாக பிரதிபலிக்கும் வகையில் 2016/04 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் எற்பாடுகள் திருத்தியமைக்கப்படும். |
| **2. நிதி மீளாய்வு**<br><br>**2.1 நிதி விளைவு**<br><br>மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூ:74,704,144/- ஆன மிகையொன்றாக இருந்ததுடன் இதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மிகையாக ரூ.72,658,248/- ஆக இருந்தது. அதற்கமைய நிதி விளைவுகளில் ரூ.2,045,896/- விருத்தி காணப்பட்டது. இந்த விருத்திக்கு அபிவிருத்தி நிதியத்திலிருந்து தவறான முறையில் மாற்றப்பட்ட ரூ. 80,023,316/- தொகையை வருமானத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டமை மற்றும் மானியங்கள் மற்றும் ஏனைய பரிமாற்றல் செலுத்துகைகள் அதிகரித்தமை முக்கிய காரணங்களாக இருந்தது. | ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளுக்கமைய திறைசேரியிலிருந்து நிதி விடுவிக்கப்படாமையின் காரணமாக அபிவிருத்தி நிதியத்திலிருந்து ரூ. 80,023,316/- வருமானமாகப் பெற்றுக்கொள்ளப்பட்டது. அது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கு மற்றும் தற்போதைய 2016/04 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளின் கீழ் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | – | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் இலக்கம் 10(1) பிரிவுக்கமைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அபிவிருத்தி நிதயம் நிறுவப்பட்டுள்ளதுடன் இலக்கம் 2016/04 மற்றும் 01.03.2016 ஆம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கைக்கமைய அந்த நிதியத்திற்கு வருமானங்கள் வரவு வைக்கப்படும்.<br><br>பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018 ஆம் ஆண்டிற்கான செலவுகளை தீர்ப்பதற்கு அரசாங்க நிதி ஏற்பாடுகள் போதுமான அளவில் இருக்காமையின் காரணமாக அந்த அபிவிருத்தி செலவுத் தலைப்பினூடாக 80 மில்லியன் ரூபா நிதி பயன்படுத்தப்பட்டது.<br><br>ஆனாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டியுள்ளதன் பிரகாரம் எதிர்வரும் ஆண்டில் ஆண்டிற்குரிய பற்றாக்குறையை நிதி செயலாளற்றுகை கூற்று ஊடாக பிரதிபலிக்கும் வகையில் 2016/04 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் திருத்தியமைக்கப்படும்.. |

| | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு<br><br>மீளாய்வாண்டின் செயற்பாட்டு செலவான ரூ. 2,457,100,115 முன்னைய ஆண்டின் செயற்பாட்டுச் செலவான ரூ.1,984,149,873 உடன் ஒப்பிடுகையில் ரூ. 472,950,242 அதாவது 23மூ அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இவ்வாறு செலவின் அதிகரிப்புக்கு மஹபொல மாணவர் உதவுதொகை செலவு ரூ. 410,512,250/- இனால் அதிகரித்தமை பிரதான காரணமாகும். | உடன்படுகின்றேன் | – | |
| 2.3 விகிதப் பகுப்பாய்வு<br><br>மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 2.07:1 ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டன் ஒப்பிடுகையில் 40மூ வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது.<br><br>3. செயற்பாட்டு மீளாய்வு<br><br>3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை<br><br>(அ) 2017/2018 கல்வியாண்டில் பல்கலைக்கழகக் கல்விக்காக விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதித்துக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 18% ஆக இருந்ததுடன் கடந்த 03 கல்வியாண்டுகளில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதித்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3434 இலிருந்து 118 வரை குறைந்த மட்டத்தில் நிலவியது. இதற்கமைய தகைமை பெற்ற மாணவர்களின் | உடன்படுகின்றேன்<br><br>2017/2018 கல்வியாண்டிற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2016/2017 கல்வியாண்டுடன் ஒப்பிடுகையில் 118 இனால் குறைவடைந்துள்ளதெனக் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக 783 இனால் அதிகரித்துள்ளதென திருத்தப்படல் வேண்டும்.<br><br>அத்துடன், 2017/2018 கல்வியாண்டில் பல்கலைக்கழகக் கல்விக்காக தகைமை பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக் | –<br><br>அரச பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டில் அனுமதித்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அதிக எண்ணிக்கையினால் அதிகரித்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். | 2017/2018 கல்வியாண்டில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அதற்கு முன்னைய ஆண்டைப் பார்க்கிலும் (2016/2017) 783 இனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. பல்கலைக்கழகங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை பல்கலைக்கழகக் கல்விக்கான தகைமையைப் பெற்றுக்கொண்ட மாணவர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக நோக்கும்போது அந்த அதிகரிப்பு (2017/2018 – 19.28%) கடந்த ஆண்டினைப் பார்க்கிலும் அதிகமாகும். |

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதித்துக்கொள்ளப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் குறைவைக் காண முடியுமாகவுள்ளது. | கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 18மு என குறிப்பிடப்பட்டுள்ள அளவு 19மு என திருத்தப்படல் வேண்டும்.<br><br>2017/2018 ஆண்டில் 2016/2017 ஆண்டுடன் (17,106) ஒப்பிடுகையில் பல்கலைக்கழக அனுமதிக்காக அதிகளவு மாணவர்கள் விண்ணப்பித்துள்ளமையினால் 2017/2018 (78,894) ஆம் ஆண்டில் அந்த சதவீதம் குறைவடைந்துள்ளதாக காண்பிக்கப்படுகின்றது. | | (2016/2017– 19.11%). புதிய பாடநெறிகளை அறிமுகஞ் செய்தல் மற்றும் தற்போது நிலவும் பாடநெறிகளுக்கு மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல், அதற்கான வளங்களின் அளவு மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கான சாத்தியக்கூறுகள் போன்ற விடயங்களின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்தம் மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும்போது பல்வேறு பாடநெறிகளுக்காக தகைமைபெறும் மாணவர்கள் அந்தப் பாடநெறிகளின் கீழ் பதிவுசெய்துகொள்ளாமை, பதிவு செய்துகொண்ட மாணவர்கள் வேறு பாடநெறிகளுக்கு மாறுதல், ஏனைய அரசாங்க உயர் கல்வி நிறுவகங்களில் பாடநெறிகளைப் பயிலுவதனால் பதிவை இரத்துச் செய்துகொள்ளல் மற்றும் தொடர்ந்து வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டாமென பல்கலைக்கழகங்களினால் அறிவித்தல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 2017/2018 இற்கு கிட்டிய கல்வியாண்டில் 897 வெற்றிடங்கள் மற்றும் 2014/2015, 2015/2016, 2016/2017 ஆகிய 03 கல்வியாண்டுகளில் முறையே 738, 2226 மற்றும் 1455 என்ற ரீதியில் வெற்றிடங்கள் நிலவின. | 2017/2018 கல்வியாண்டில் பொதுவான அனுமதி மற்றும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான 08 சுற்றுக்கள் என 09 சுற்றுக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.<br><br>வெற்றிடங்களை நிரப்பும்போது நிலவும் மொத்த வெற்றிடங்களுக்கும் மாணவர்களை தெரிவு செய்தாலும் அவ்வாறு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் பல்வேறு காரணங்களினால் தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகளில் பதிவு செய்துகொள்வதில்லை. | பல்கலைக்கழகங்களில் நடாத்தப்படும் கற்கை பாடநெறிகளை தொழில் சந்தையை இலக்காகக்கொண்டவைகளாக திருத்தியமைத்தல் வேண்டுமென்பதுடன் அரச பல்கலைக்கழகங்களை விட்டுவிலகிச்செல்லல், மாணவர்கள் பதிவு செய்துகொள்ளாதிருத்தல் போன்ற குறைத்துக்கொள்ள முடியுமான பிரகாரம் தாமதமின்றி உயர் தரப் பெறுபேறுகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கான அனுமதிக்கான வெட்டுப்புள்ளியை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | 2017/2018 கல்வியாண்டிற்காக தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 2016/2017 கல்வியாண்டுடன் ஒப்பிடுகையில் 118 இனால் குறைவடைந்துள்ளதெனக் குறிப்பிடப்படுவதற்குப் பதிலாக 783 இனால் அதிகரித்துள்ளதென திருத்தப்படல் வேண்டும். அத்துடன், 2017/2018 கல்வியாண்டில் பல்கலைக்கழகக் கல்விக்காக தகைமை பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதித்துக் கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 18% என குறிப்பிடப்பட்டுள்ள அளவு 19% என திருத்தப்படல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| (இ)2011 ஜனவரி 25 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது உத்தேச மொத்த மாணவர் எண்ணிக்கையில் 0.5மு மாணவர்களை சேர்த்துக்கொள்வதற்கு முடியுமாக இருப்பதுடன், கடந்த 05 வருட காலப் பகுதியினுள் உத்தேச மற்றும் ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையை கவனத்திற் கொள்ளும்போது உத்தேச மாணவர்களின் எண்ணிக்கையில் அனுமதித்துக்கொள்ளப்பட்ட எண்ணிக்கை 09% - 50% இற்கிடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | சில பாடநெறிகளுக்காக உத்தேச மொத்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்காக விண்ணப்பித்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை, அநேகமான பாடநெறிகளுக்கு எந்தவிதமான விண்ணப்பமும் கிடைக்காமை, குறைந்த தகைமையை பூர்த்தி செய்திராத மாணவர்களின் விண்ணப்பங்களை நிராகரிக்க வேண்டியேற்பட்டமை. தெரிவுக்குழு மற்றும் ஏற்புடைய பீட சபை திருப்தியடையும் பெறுபேறுகளை விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளாமை காரணமாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டமை மற்றும் உத்தேச மொத்த ஸ்தானங்களின் எண்ணிக்கைக்கு ள் உள்ளடக்கப்படும் கொழும்பு நகருக்கு வெளியே அமைந்துள்ள பல்கலைக்கழகங்களுக்கு அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெறும் வெளிநாட்டு மாணவர்கள் விருப்பம் தெரிவிக்காமை போன்ற விடயங்கள் காரணமாகியது. | வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 0.5% மாணவர்களை அனுமதித்துக்கொண்டதன் பின்னர் மேலும் நிலவும் வெற்றிடங்களுக்காக உள்நாட்டு மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். | வெளிநாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 0.5% மாணவர்களை அனுமதித்துக்கொண்டதன் பின்னர் மேலும் நிலவும் வெற்றிடங்களுக்காக உள்நாட்டு மாணவர்களை அனுமதித்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

85

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| (ஈ)2012 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைக்கு புறம்பாக 13 அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் நடாத்தப்பட்டுவரும் 25 பாடநெறிகளுக்கு நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு மேலதிகமாக தகுதி சோதனையின் பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அந்தக் கொள்கையை களணிப் பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறிக்காக நடைமுறைப்படுத்தியமையினால் அந்தப் பாடநெறிக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் "Z" புள்ளியைப் பார்க்கிலும் அதிக "Z" புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் தகுதி சோதனையின்போது 70 - 82 இற்கிடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தபோதிலும் அவ்வாறான 09 மாணவர்களுக்கு இந்தப் பாடநெறியைப் பயிலுவதற்கான வாய்ப்பு இழக்கப்பட்டிருந்தது. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கு பதில் அளிக்கும் வகையில் களணிப் பல்கலைக்கழகம் 2017/2018 கல்வியாண்டிற்காக நடாத்தப்பட்ட பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறிக்கான மாணவர்களின் பெயர் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது. அதற்கமைய, அந்தப் பெயர்ப் பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த மாணவர்களின் Z புள்ளிகளின் வரிசைக்கிரமம், அவர்கள் பாடநெறிகளுக்காக காட்டிய விருப்பத்தின் வரிசைக்கிரமம் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்து பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறிக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கைக்கமைய 2017/2018 கல்வியாண்டில் களணிப் பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறிக்காக மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறியின் செயன்முறை ∴ தகுதி சோதனையில் 70% அல்லது அதனிலும் அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களை மாத்திரம் சோதனையில் சித்தியடைந்த மாணவர்களாகக் கருதுமாறு களணிப் பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு நேரடியாக அறிவிக்கப்படாததனாலும், 2018 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 992 ஆவது கூட்டத்தொடரின்போது 2017/2018 கல்வியாண்டில் களணிப் பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் விஞ்ஞானப் பாடநெறிக்குத் | நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளை கவனத்திற்கொண்டு பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ள வேண்டும். | பல்கலைக்கழகங்களினால் தனித் தனியாக நடாத்தப்படும் தகுதி / செயன்முறை சோதனையை நடாத்தாமல் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும் க.பொ.த (உயர் தரம்) பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் Z புள்ளிகளின் அடிப்படையில் 2019/2020 கல்வியாண்டிலிருந்து பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக அனுமதிக்கான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானம் இந்த அறிக்கையின் இலக்கம் 3.4.1 (ஈ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு இணங்கவேயாகும். |

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
| --- | --- | --- | --- |
| | தெரிவு செய்துகொள்ளப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் அந்தப் பாடநெறியைப் பயிலுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. | | |
| (உ) இணையத்தளம் ஊடாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் முறை ஆரம்பிக்கப்பட்ட 2014 / 2015 கல்வியாண்டில் இணையத்தளம் ஊடாக பொதுவான முறையின் கீழும் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆயினும் 2017/2018 கல்வியாண்டின்போது பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்களை அனுப்புவதற்குப்போன்றே தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இணையத்தளம் ஊடாக பதிவுசெய்துகொள்ளுதலும் கட்டாய தேவையொன்றென விதிக்கப்பட்டுள்ளது. இந்த இணையவழி முறைக்காக மீளாய்வாண்டு வரை ரூ.9,347,750 செலவிடப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு முதல் ஒரு வருடத்திற்கு ரூ.700,000 பராமரிப்புச் செலவை மேற்கொள்ள வேண்டியிருந்தமையை அவதானிக்க முடியுமாக இருந்தது. இந்த முறையின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும்போது 2015/2016 கல்வியாண்டில் 1081 ஆக நிலவிய சிக்கல்களின் எண்ணிக்கை 2018/2019 கல்வியாண்டாகும்போது 5602 வரை அதிகரித்திருந்தது. | இணையத்தளம் ஊடாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்காக 2014/2015 கல்வியாண்டைப் பார்க்கிலும் 2015/2016 கல்வியாண்டில் ஆர்வத்தை மாணவர்கள் காண்பித்தமையினால் அந்த நிலைமையைக் கவனத்திற்கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 2016/2017 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பங்களை இணையத்தளத்தினூடாக மாத்திரம் கோருவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.<br><br>2015/2016 கல்வியாண்டு முதல் பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை பதிவு செய்துகொள்ளும் நடவடிக்கையை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணையத்தளத்தினூடாக மாத்திரம் மேற்கொண்டது. அதனூடாக பாடநெறிகளில் மாணவர்கள் பதிவு செய்துகொள்ளாமையின் காரணமாக ஏற்படும் வெற்றிடங்களை மிக விரைவில் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்ததுடன் அதனூடாக வெற்றிடங்களை மிக விரைவில் நிரப்புவதற்கு முடியுமாகியது. | இணையவழி முறைமையைப் பயன்படுத்தி இணையத்தளத்தினூடாக பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரிகள் முகங்கொடுக்கும் சிக்கல்களை குறைத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | இணையவழி முறைமை ஊடாக விண்ணப்பிக்கும்போது ஏற்படும் தொழில்நுட்ப ரீதியிலான சிக்கல்களைக் குறைத்துக்கொள்வதற்கு மற்றும் தொலைபேசிக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 3.2 நிதியத்தின் குறை பயன்பாடு<br><br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் பேணிவரப்படும் மொத்தம் 39.2 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க நிதியத்தின் மீதி பல வருடங்களாக செயற்படாதிருந்தது. | ஆராய்ச்சி நிதியம் சம்பந்தமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>* அன்பளிப்புக்கள் நிதியத்தின் கீழ் புலமைப் பரிசில் வழங்கும் 14 நிதியங்கள் உண்டு. 2018 ஆம் ஆண்டில் அதன் கீழ் 30 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கற்கைப் பிரிவினால் தொடர்ந்தும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்காக பல்கலைக்கழக மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.<br><br>*மத்திய ஆராய்ச்சி நிதியம் சில வருடங்களாக செயற்பாடின்றிக் காணப்பட்டமையினால் 2018.04.05 ஆம் திகதி நடைபெற்ற 984 ஆவது கூட்டத் தொடரில் அதன் மீதியை பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்காக நிதியுதவியை வழங்கும் செலவுத் தலைப்புக்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது.<br><br>* சுனாமி நிதியம் அமைக்கப்பட்டதுடன் அந்த புலமைப் பரிசில் வழங்குதல் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய 2018.07.12 ஆம் திகதி நடைபெற்ற 990 ஆவது கூட்டத் தொடரின்போது இந்த நிதியத்தின் மீதி பல்கலைக்கழக புலமைப்பரிசில் நிதியத்திற்கு மாற்றுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. | நிதியத்துடன் தொடர்பான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | • அன்பளிப்புக்கள் நிதியம்<br><br>கற்கைப் பிரிவுகளினால் தற்போது கீழ் குறிப்பிடப்படும் அன்பளிப்புக்கள் புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு தேவையான விண்ணப்பங்கள் 2016/2017 கல்வியாண்டுடன் தொடர்பாக கோரப்பட்டுள்ளது.<br><br>1. UGC Scholarship Fund<br>2. Kathalin Doris Weerasuriya Scholarship Fund<br>3. Sri Lanka America Society Scholarship Fund<br>4. Nalini Madugalle Scholarship Fund<br>5. Magee Mendis Scholarship Fund<br><br>• அந்த விண்ணப்பங்களிடையே ருபுஊ ளுஉாழடயசளானி குரனெ புலமைப்பரிசில் நிதியத்தின் கீழ் புலமைப் பரிசில் பெற்றுக்கொள்ளும் 14 பேருக்கு கற்கை கால எல்லைக்கு புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு 2019.09.18 ஆம் திகதி நடைபெற்ற 1018 ஆவது ஆணைக்குழுக் கூட்டத்தொடரில் தீர்மானிக்கப்பட்டது.<br><br>இது தவிர 2017/2018 கல்வியாண்டுடன் தொடர்பாக UGC Scholarship Fund புலமைப் பரிசில் நிதியத்தின் கீழும் 2016/2017 கல்வியாண்டுடன் தொடர்பாக Police C.W.C. Benefits Scheme புலமைப் பரிசில் நிதியத்தின் கீழும 2019 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி முதல் 2020 யூலை மாதம் 31 ஆம் திகதி வரையான கற்கைக் காலப் பகுதியுடன் தொடர்பாக Mitsubishi Corporation International Scholarship Fund புலமைப் |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
| --- | --- | --- | --- |
| | | | பரிசில் நிதியத்தின் கீழும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.<br><br>• ஆராய்ச்சி நிதியம்<br><br>984.3.2. ஆம் இலக்க ஆணைக் குழுத் தீர்மானத்திற்கமைய இந்த மீதி 2019 ஆண் ஆண்டினுள் பட்டப்பின் படிப்பு செலவுத் தலைப்புக்கு (Doctoral Projects) மாற்றப்பட்டுள்ளது.<br><br>• சுனாமி நிதியம்<br>990.3.2. ஆம் இலக்க ஆணைக் குழுத் தீர்மானத்திற்கமைய இந்த நிதியத்தின் மீதி UGC புலமைப்பரிசில் நிதியத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| (ஆ) 20 நிதியக் கணக்குகளின மொத்தம் 33.6 மில்லியன் ரூபா குறைபணன்பாடாக நிலியது. | Central Research நிதியத்தின் மீதியை 2018 ஆம் ஆண்டில் பட்டப பின படிப்புக்காக வழங்கப்படும் செலவுத தலைப்புக்கு மாற்றுவதற்கு ஆணைக்குழு அங்கீகாரத்தை வழங்கியது. எனவே அந்த நிதியத்தின் மீதி முதலீடு செய்யப்படவில்லையென்பதுடன , நிலையான வைப்பு 2019.01.17 ஆம திகதி முதிர்ச்சியடைந்ததன் பின்னர் அந்த செலவுத் தலைப்புக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். Bond Violation நிதியத்தின் மீதியில் 90% ஆன தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. Flood Relief நிதியம் வெள்ளம் மற்றும மண் சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு வழங்கப்படும் நிதியில் மீளச செலுத்தப்படும் தவணைகளின் கூட்டுத்தொகையாகும். இது சம பந்தமாக திறைசேரியிடம் வினவப்பட்டதன் பின்னர் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது இந்த நிதி நாளாந்தம் Overnight Investment ஆக முதலீடு செய்யப்படுகின்றது. தேசிய விஞ்ஞான அமைப புடன் இணைந்து UNESCO நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கமைய உயர் கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள சம்பந்தமான குறிகாட்டிகளை தயாரிப்பதற்காக National | நிதியத்தின் ம ீதிகளை ஏற்புடைய நோக்கங்களுக்குப பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | இந்த நிதியம் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் முதலீடு செய்யப்பட்டுள்ளது பயன்படுத்தப்பட்டுள்ளது. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | Science Fund அமைக்கப்பட்டுள்ளது. இது தேசிய விஞ்ஞான அமைப புடன் இணைந்து மேற்கொள்ளப்படும் திட்டமொன்றாக இருப்பதனால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அதில் நிதி முதலீடு மேற்கொள்ளப்படுவதில்லை | | |
| 3.3 பெறுகை முகாமைத்துவம்<br><br>(அ) தேசிய பெறுகை முகவர் நிறுவனங்கள் சம்பந்தமான 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 08 இன 6.2.2 ஆம் பிரிவின் பிரகாரம் சந தை விலை முன்கணிப்பு முறையின் கீழ் அவசர பெறுகைகள் தவிர ஏனைய விலை மனுக்கோரலுக்கான குறைந்த கால எல்லை 07 நாட்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் ஆணைக்குழு ரூ.762,805 பெறுமதிமக்க எழுது பொருட்களை 02 சந்தர்ப பங்களில் கொள்வனவு செய்யும போது அதற்கமைய அலுவல் மேற்கொண்டிருக்கவில்லை. | 2018.06.25 ஆம் திகதி காகிதாதிகள் (A 4 கடதாசி) 2018.06.21 ஆம திகதி நிரல் அமைச்சின் ஊடாக ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளை பாராளுமன்றத்தில் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருக்குமாறு விடுக்கப்பட்ட எழுத்து மூலமான அறிவித்தலுக்கமைய அந்த அறிக்கைகளின் பிரதிகளை தயார் செய்துகொள்வதற்காகவே கொள்வனவு செய்யப்பட்டது. இந்த அலுவல் அவசர தேவையுர்கு இருப்பதனால் இலங்கை ரெலிகொம் ரெயின்போ பக்கங்களில் மூன்று பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட (சீல் வைக்கப்பட்ட) விலை அளவுகளைப் பெற்று இந்த அலுவல் நிறைவேற்றப பட்டது. 2018.10.03 ஆம் திகதி காகிதாதிகள (A 4 கடதாசி) எமது நிறுவனத்தின் | அவசர அலுவல்களுக்குப் பயன்படுத்துவதற்குத் தேவையான இருப்பை பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | எப்போதும் அவசர கொள்வனவுகளைக் குறைத துக்கொள்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் போதுமானளவு இருப்பை பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டபோதிலும் சில விசேட கல்விசார் செயலமர்வுகள், கல்விசார் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத தும்போது அவசர கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. இந்த நிலைமையை மேலும் குறைத துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப பட்டுள்ளது. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| | எமது நிறுவனத்தின் கீழ் நிலவும் பாலின சமத துவம் ∴ நியாயம் சம்பந்தமான நிலையத்தினால் நடாத்தப்பட்டுவரும் " Study on ragging and sexual and Gender based on violence in the Sri Lankan University System" எனும் திட்டத்திற்காக நிதிசார் பங்களிப்பை வழங்கிய யுனிசெப நிறுவனத்தின் அறிவித்தலின் அடிப்படையில் நிதி சார்ந்த தீர்த தல் அலுவல்களை 2018 ஒக்டோபர் 09 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ள வேண்டியேற்பட்டமையினால் கொள்வனவு செய்யப்பட்டது. | | |
| (ஆ)தேசிய பெறுகை முகவர் நிறுவனங்கள் சம்பந்தமான 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 08 இன் 2.14.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூ. 500,000 இலும் அதிகளவு பெறுமதியைக் கொண்ட பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சந்தை விலை முன்கணிப்பு முறையின் கீழ் பிரதேச பெறுகைக் குழுவொன்றின் ஊடாக பிரசித்தப்படுத்தப்பட்ட விலை மனுக்கோரலை மேற்கொண்டு 05 பேரிலும குறையாதோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனுக் | கணக்காய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.973இ365 பெறுமதிமிக்க காகிதாதிகளைக் கொள்வனவு செய்வதற்காக 03 சந்தர்ப பங்களில் சந்தை விலை முன்கணிப்பு முறையின் கீழ் முத்திரை (சீல்) இடப பட்ட விலை அளவுகளைப் பெற்று பெறுகைக் கையேட்டின் அனுபந்தம் 34 வெளியீட்டின அதிகார எல்லையின் கீழ் இந்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டவைகளாகும். இங்கு, இந்த பெறுகை அலுவல்களுக்கு 10 நிறுவனங்களுக்கு விலை மனுக்கள் கோரப்பட்டு 08 நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை அளவுகள் கிடைக்கப் பெற்றன. இங்கு குறிப்பிட்ட கொள்வனவுகள் எப போதும் குறைந்த | ஒரே வகையான பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தனித் தனியாக விலை மனுக்களை கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமல் ஒரே பெறுகை நடவடிக்கையாக கருதி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஊடாக சுட்டிக்காட்டப்பட்டுள ளதன் பிரகாரம் ஒரே வகையான பெறுக்கைகளை மேற்கொள்ளும்போது ஒரே அலுவலாகக் கருதி பெறுகை அலுவல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| கோரல் ஊடாக மேற்கொள்ளுதல் வேண்டும். ஆயினும், ரூ.973இ365 பெறுமதிமிக்க எழுது பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பிரசித்தப்படுத்தப்பட்ட விலைமனுக் கோரலின்றி 2018 பெப்ரவரி 02 ஆம் திகதி 10 நிறுவகங்களுக்கு 03 சந்தர்ப பங்களில் விலை மனுக்கோரல் கடிதங்கள் வெளியிடப்பட்டிருந்தன. | விலை அளவுகளை முன்வைத்த வழங்குநர்களிடமிருந்தே கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று பெறுகை அலுவல்களும் உரிய அங்கீகாரங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (இ)தேசிய பெறுகை முகவர் நிறுவனங்கள் சம்பந்தமான 08 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 08 இன் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம தேவையான முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு போதுமானளவு காலத்தைப் பெற்றுக்கொடுக்கும் வகையில் விலை அளவுகள் மதிப்பீட்டு அலுவலை கூடியவிரைவில் மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், பெறுகை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கால கட்டத ிற்குள் விலை அளவுகளை மதிப்ப ீட்டுக்குட்படுத்தல் வேண்டும். ஆயினும 2018.-2019 ஆண்டுகளுக்காக சுத்தப்படுத்தல் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக கோரப்பட்டிருந்த விலை அளவுகள் 2018 பெப்ரவரி 14<br><br>ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தபோதிலும் அவ்வாறு திறக்கப்பட்ட விலை | 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி இந்தப் பெறுகை தொடர்பான விலை மனுக்கள் திறக்கப்பட்டாலும் 2018 பெப்ரவரி இறுதி வாரம் முதல் கல்விசாரா ஆளணி அங்கத்தவர்கள் 60 நாட்களிலும் அதிகளவு காலம் வேலை நிறுத்தத்தில் போன ற நடைமுறைக் காரணங்களின் அடிப்படையில் இந்த மதிப்பீட்டு நடவடிக்கையில் தாமதங்கள் ஏற்பட்டன. | ஆணைக்குழுவுக்கு பொருளாதார ரீதியாக குறைந்த செலவு ஏற்படும் வகையில் பெறுகை அலுவல்களை மேற்கொள்ள முடியுமான பிரகாரம் பெறுகை செயற்பாடுகளை கால தாமதமின்றி மேற்கொண்டு குறிப்பிட்ட குழுவின் த ீர்மானங்களைப் பெற்றக்கொடுத்தல் வேண்டும். | 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி இந்தப் பெறுகை தொடர்பான விலை மனுக்கள் திறக்கப்பட்டாலும் 2018 பெப்ரவரி இறுதி வாரம் முதல் கல்விசாரா ஆளணி அங்கத்தவர்கள் 60 நாட்களிலும் அதிகளவு காலம் வேலை நிறுத்தத்தில் போன ற நடைமுறைக் காரணங்களின் அடிப்படையில் இந ்த மதிப்ப ீட்டு நடவடிக்கையில் தாமதங்கள் ஏற்பட்டன. தொடர்ந்தும பெறுகை அலுவல்களை கால தாமதமின்றி மெற்கொண்டு உரிய குழுத் தீர்மானங்களை வழங்குவதனை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| அளவுகளை மதிப்பீட்டுக்குட்படுத்தி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் த ீர்மானத்தை வழங்குவதற்கு சுமார் 100 நாட்கள் தாமதப்படுத்தப பட்டிருந்தது. | | | |
| ( விலை மனுக்கோரல், விலை மனுக்களைத் திறத தல், மதிப்ப ீட்டுக்குட்படுத்தல் போன்ற பெறுகை செயற்பாடுகளில் பலவீனங்கள் நிலவியது. எனவே மீண்டும் விலை மனுக்களைக் கோரி மூன்றாவது குறைந்த விலையை முன்வைத்திருந்த விலைமனுதாரருக்கு ஒப பந்தப்பணியை ஒப்படைத தமையினால் சுத்தப்படுத்தல் சேவைக்காக ரூ.1இ812இ873 அதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டின சுத்திகரிப்பு அலுவல்களுக்காக பெறுகை வழிகாட்டிக் கோவைக்கமைய விலை மனுக்களைக் கோரி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்பணிதாரர் ஒப்பந்தத்தின் பிரகாரம் திருப்திகரமான சேவையை வழங்காமையின அடிப்படையில் அந்த ஒப்பந்தப்பணிதாரரின் சேவையை ஆணைக்குழுவின அனுமதியுடன் நிறைவு செய்யப்பட்டது. | விலை அளவுகளை முன்வைத்த விலைமனுதாரர்களிடையே சிறப்பான வகையில் விலை அளவுகளை முன்வைத்த விலை மனுதாரரரை தெரிவுசெய்யும்போது முன்வைக்கப்பட்ட ஏல விலைக்கு மேலதிகமாக ஒத்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட சேவைகளின் தரத்தை கவனத்திற்கொண்டு பெறுகைக்குழு அங்கத்தவர்கள் சிறந்த த ீர்மானங்களை எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப பட்டுள்ளதன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகளை வெளிப்படைத தன்மையுடன் மற்றும் பொருளாதார ரீதியில் விளைதிறன்மிக்க வகையில் பேணி வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (உ) 5 கணனிகளை கொள்வனவு செய்வதற்காக 2017 ஆம் ஆண்டில் விலை மனுக் கோரப்பட்டு மீளாய்வாண்டில் தொழில்நுட்ப மதிப்ப ீட்டுக் குழுவின பரிந்துரைகள் வழங்கப்பட்டிருந்தபோதிலும் பெறுகைக் குழுவினால் அந்த பரிந்துரைகளைக் கவனத்திற்கொள்ளாமல் தொழில்நுட்ப மதிப்ப ீட்டுக் குழுவின் ஒரு அங்கத்தவரால் முன்வைக்கப்பட்டிருந்த தொழில்நுட்பம்சார் சிக்கலின் அடிப்படையில் குறைந்த விலை அளவு நிராகரிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இரண்டாவது குறைந்த விலை அளவை முன்வைத்தவரிடமிருந்து வாடகை அடிப்படையில் கணனிகள் கொள்வனவு செய்யப்படவில்லை. குறைந்த விலை அளவுகளை முன்வைத்திருந்த னுயவய Core Lanka (Pvt) Ltd. ஊடாகவே கணனிகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த அனைத்து விபரங்களும் கணக்காய்வுக்காக முன்வைக்கப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பெறுகை அலுவல்களை மேற்கொள்ளல் வேண்டும். | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வாடகை அடிப்படையில் கணனிகளைப பெற்றுக்கொள்வதற்கான காரணம் அந்தச் சந்தர்ப பத தில் நிதிப் பிரிவினால் அறிமுகஞ் செய்யப்பட்ட கணக்கியல் கணனி முறைமையை தாபிக்கும் அலுவல்களை தொடர்ந்து மேற்கொள்வதற்கான தேவையின் அடிப்படையிலாகும். கணக்கியல் முறைமையை அறிமுகஞ்செய்த நிறுவனம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள ஆணைக்குழுவுக்கிடையிலான |

| கணக்காய்வு அவதானிப்புக்கள | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| பெறுகைக் குழுவினால் மீண்டும் விலை மனுக் கோருமாறு விடுக்கப்பட்ட பரிந்துரையை செயற்படுத்தாமை காரணமாக 1.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு 10 மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் கணனிகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | | ஒப்பந்தத்திற்கமைய அந்த அலுவலை தாமதப்படுத்துவதற்கு முறைமையை அறிமுகஞ் செய்தலுடன் தொடர்பான பெறுகைத் த ீர்மானத திற்கமைய மேற்கொள்ள முடியவில்லை. அதற்கமைய மிகவும் சிறந்த த ீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது |

## பல்கலைக்கழ ஓய்வூதிய நிதியம்

## 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2018<br>&. | 2017<br>&. |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம் | 775,591,633 | 702,289,420 |
| கூட்டுக ∴ (கழிக்குக): | | |
| திறைசேரி முறிகள் மீதான கழிவு ∴ உபரித்தொகை | 16,224,048 | 14,729,100 |
| விற்கப்பட்ட திறைசேரி முறிகள் மீதான லாபம் ∴ நட்டம் | - | (190,811) |
| ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை | 9,601,246 | 8,329,530 |
| வருமான வரி ஒதுக்கீடு | 137,921,120 | 22,039,603 |
| | 939,338,047 | 747,196,843 |
| தொழிற்பாட்டு மூலதனம் செயற்பாட்டு நிதியங்களின் மாற்றல்கள் | | |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் (அதிகரிப்பு) ∴ குறைவு | 388,924,629 | (139,263,113) |
| நானாவித கடன் வழங்குனர்களின்(அதிகரிப்பு) ∴ குறைவு | 499,383 | 57,568 |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசு உருவாக்கம் | 1,328,762,058 | 607,991,297 |
| கழிக்குக : செலுத்திய வருமான வரி | (114,218,902) | (12,511,047) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | 1,214,543,157 | 595,480,250 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி | 3,463,000,000 | 150,000,000 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | (4,810,000,000) | (900,000,000) |
| விற்பனை- திறைசேரி முறிகள் | - | 49,544,130 |
| கடன் பத்திரங்கள் கொள்வனவு | (500,000,000) | - |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | (332,444,815) | (562,303,612) |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | **(2,179,444,815)** | **(1,262,759,482)** |
| நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| பங்களிப்புத் தொகை பெறுகை | 1,041,009,429 | 805,363,096 |
| பங்களிப்புத் தொகை மீளச் செலுத்தல் | (69,651,817) | (72,192,977) |
| வாழ்க்கைச் செலவுப்படி செலுத்தல் | - | (44,306) |
| ஓய்வூதியம் செலுத்துதல் | (58,129,830) | (50,597,359) |
| நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | **913,227,782** | **682,528,454** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | (51,673,876) | 15,249,223 |
| ஆரம்ப காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 72,156,016 | 56,906,793 |
| இறுதி காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 20,482,141 | 72,156,016 |
| வங்கிப் பணம் | (1,576,849) | (3,917,862) |
| கூட்டுக: நிதிய முகாமைத்துவக் கணக்குகள் மீதி | | |
| குறுகிய கால வைப்புக்கள் முதலீடு | - | 60,000,000 |
| ஒரு நாள் இரவுநேர வைப்புக்கள் | 16,000,000 | 8,000,000 |
| நிதிய முகாமைத்துவக் கணக்கு | 6,058,990 | 8,073,878 |
| | **20,482,141** | **72,156,016** |

## பல்கலைக்கழ ஓய்வூதிய நிதியம்

### 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றல் கூற்று

| | பங்களிப்பு நிதியம் | ஓய்வூதிய நிதியம் | திரட்டிய | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2017.01.01 ஜனவரி 01 ஆம் திகதியன்று மீதி | 5,804,727,361 | 198,242,140 | 390,253,357 | 6,393,222,859 |
| 2017 ஆம் ஆண்டிற்கான மேலதிகம் | - | - | 702,289,420 | 702,289,420 |
| வருமானத்திற்கான சீர்படுத்துகை | (950,242) | - | 950,242 | - |
| பிழையான பங்களிப்புத் தொகையை சீர்செய்தல் | (11,950) | - | - | (11,950) |
| நிலுவை ∴ கிடைக்கப்பெறாத பங்களிப்புத் தொகை | 2,364,522 | - | - | 2,364,522 |
| நடப்பு ஆண்டின் வருமானத்தின் ஊடான பரிமாற்றல் | - | 8,329,529 | - | 8,329,529 |
| ஓய்வூதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்புத் தொகை | - | 76,269 | - | 76,269 |
| நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம் | 769,784,377 | - | - | 769,784,377 |
| பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல | (32,102,375) | - | - | (32,102,375) |
| பங்களிப்பு நிதியத்தை ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல் | (72,739,982) | 72,739,982 | - | - |
| பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல் | (40,110,697) | - | - | (40,110,697) |
| 2017 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் | - | (50,597,359) | - | (50,597,359) |
| ஓய்வூதிய நிதியத்தின் ∴ பங்களிப்பு நிதியத்தின் வட்டி | 612,512,249 | 19,542,140 | (632,054,389) | - |
| 2017 டிசம்பர் 31 ஆம் திகதின்று மீதி | 7,043,473,263 | 248,332,702 | 461,438,632 | 7,753,244,597 |
| 2018 ஆம் ஆண்டிற்கான மேலதிகம் | - | - | 775,591,633 | 775,591,633 |
| வருமானத்திற்கான சீர்படுத்துகை | (938,326) | - | 938,326 | - |
| பிழையான பங்களிப்புத் தொகையை சீர்செய்தல் | (21,762) | - | - | (21,762) |
| நிலுவை ∴ கிடைக்கப்பெறாத பங்களிப்புத் தொகை | 4,211,133 | - | - | 4,211,133 |
| நடப்பு ஆண்டின் வருமானத்தின் ஊடான பரிமாற்றல் | - | 9,601,246 | - | 9,601,246 |
| ஓய்வூதியகாரர்களுக்காக பெற்ற பங்களிப்புத் தொகை | - | 5,660 | - | 5,660 |
| நடப்பு ஆண்டின் பங்களிப்பு நிதியம் | 1,049,908,010 | - | - | 1,049,908,010 |
| பூரணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் தொகையை மீளப் பெற்றுக்கொடுத்தல | (50,471,342) | - | - | (50,471,342) |
| பங்களிப்பு நிதியத்தை ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுதல் | (59,042,755) | 59,042,755 | - | - |
| பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு மாற்றுதல் | (17,287,279) | - | - | (17,287,279) |
| 2018 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் செலுத்துதல் | - | (58,129,830) | - | (58,129,830) |
| ஓய்வூதிய நிதியத்தின் ∴ பங்களிப்பு நிதியத்தின் வட்டி | 752,493,441 | 22,344,110 | (774,837,551) | - |
| | 1,678,851,120 | 32,863,941 | 1,692,408 | 1,713,407,469 |
| 2018 டிசம்பர் 31 ஆம் திகதின்று மீதி | 8,722,324,383 | 281,196,642 | 463,131,040 | 9,466,652,065 |

## பல்கலைக்கழ ஓய்வூதிய நிதியம்

## 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்புக்s | 2018 ரூ. | 2017 ரூ. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 5 | 20,482,140 | 72,156,016 |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் | 6 | 236,873,136 | 196,809,752 |
| பெறப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை | 7 | 50,791,661 | 37,698,050 |
| முதலீடுகள் | 8 | 1,340,000,000 | 675,000,000 |
| | | 1,648,146,938 | 981,663,817 |
| நடைமுறையல்லாத சொத்துக்கள் | | | |
| முதலீடுகள் | 8 | 7,716,321,550 | 6,218,100,783 |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் | 6 | 183,965,280 | 612,953,294 |
| | | 7,900,286,830 | 6,831,054,077 |
| மொத்தச் சொத்துக்கள் | | 9,548,433,768 | 7,812,717,895 |
| **பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| நானாவித கடன் வழங்குநர்கள் | 9 | 1,007,211 | 507,828 |
| அங்கத்தவர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை | 10 | 4,797,356 | 2,163,317 |
| சேமலாப நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | 11 | 155,889 | 4,683,124 |
| செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படிகள் | 12 | 31,618 | 31,618 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 13 | 75,789,629 | 52,087,411 |
| | | 81,781,703 | 59,473,298 |
| **மொத்த தேறிய சொத்துக்கள்** | | **9,466,652,065** | **7,753,244,597** |
| **அங்கத்துவ நிதியம் மற்றும் இருப்புக்கள்** | | | |
| பங்களிப்பு நிதியம் | | 8,722,324,383 | 7,043,473,263 |
| ஓய்வூதிய நிதியம் | | 281,196,642 | 248,332,702 |
| ஒட்டுமொத்த வருமானம் | | 463,131,040 | 461,438,632 |
| **நிதியத்தின் தேறிய பெறுமதி** | | **9,466,652,065** | **7,753,244,597** |

ஒப்பம் :
ஆர்.ஏ.யூ.ரணவீர
கணக்காளர்

ஒப்பம் :
கலாநிதி பிரிந்த பிரேமகுமார
செயலாளர்

ஒப்பம் :
பேராசிரியர் மொஹான் டி சில்வா

ஒப்பம் :
பேராசிரியர் மலிக் ரணசிங்க

## பல்கலைக்கழ ஓய்வூதிய நிதியம்

## 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகை கூற்று

| | | குறிப்புக் | 2018 &. | 2017 &. |
|---|---|---|---|---|
| வருமானம் | | | | |
| முதலீட்டு வருமானம் | | 14 | 923,990,432 | 733,205,736 |
| கழிக்குக: | வருமான வரிக்கான ஒதுக்கீடு | | (137,921,120) | (22,039,603) |
| வரி நீங்கலான தேறிய வருமானம் | | | 786,069,312 | 711,166,133 |
| கழிக்குக: | செலவுகள் | | | |
| | ஓய்வூதிய நிதியத்தின் சீர்படுத்துகை | 15 | 9,601,246 | 8,329,530 |
| | தொழிற்பாட்டுச் செலவுகள் | 16 | 876,433 | 547,183 |
| | | | 10,477,679 | 8,876,713 |
| செலவுகளை கழித்த பின்னர் தேறிய வருமானம் | | | 775,591,633 | 702,289,420 |
| கூட்டுக: | வருமானத்துக்கான சீர்படுத்துகை | | 938,326 | 950,242 |
| | முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இ | | 461,438,632 | 390,253,359 |
| **பங்கிட முடியுமான தேறிய வருமானம்** | | | **1,237,968,590** | **1,093,493,021** |
| கழிக்குக: | அங்கத்துவர் வட்டி | | | |
| | பங்களிப்பு நிதியத்திற்கான வட்டி | | 752,493,441 | 612,512,249 |
| | ஓய்வூதிய நிதியத்திற்கான வட்டி | | 22,344,110 | 19,542,140 |
| | | | 774,837,551 | 632,054,389 |
| முன்கொணரப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் | | | 463,131,040 | 461,438,632 |

HED/A/UGC/FA/18

2019 மே 29 ஆம் திகதி

செயலாளர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2018 டிசம்பர் 31 ஆம் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியிலான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் சம்பந்தமாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) ஆவது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமைக் கூற்று, அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றல் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்பான குறிப்புக்கள், பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரைப் பிரகாரம் எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

நிதியத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல்இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மை மற்றும் நியாயமான நிலைமையை எடுத்தியம்புகின்றதென்பது எனது கருத்தாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் மற்றும் ஆளுகையை மேற்கொள்ளும் தரப்பினர்களின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமான முறையில் முன்வைத்தல் மற்றும் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிக்க முடியுமாக இருப்பதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது நிதியத்தை தொடந்தியங்கும் இயலுமையை (இருப்பை) தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைத்துவிடுவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலே தவிர தொடர்ந்தியங்குதல் எனும் அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் நிதியத்தின் தொடர்ச்சியான இருப்புடன் (தொடர்ந்தியங்குதலுடன்) தொடர்பான விடயங்களை வெளிப்படுத்திக்கொள்வதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கைப்படுத்தல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிர்வகிக்கும் தரப்பினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சம்பந்தமாக உரிய பிரகாரம் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிவரல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக, நிதிக் கூற்று ஊழல் மற்றும் தவறுகளால் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது எப்போதும் அது பொருண்மையான தவறான கூற்றுக்களை வெளிப்படுத்திக்கொள்வதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி மற்றும் தவறுகள் தனி அல்லது கூட்டான அழுத்தம் காரணமாக பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க முடியுமாக இருப்பதுடன் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு பயனர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது., மேலும்,

- மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தை இனங்கண்டுகொள்ளும்போது மற்றும் மதிப்பீட்டின்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடல் ஊடாக மோசடிகள் அல்லது தவறு காரணமாக ஏற்படும் ஆபத்துக்களை தவிர்த்துக்கொள்வதற்கு, போதுமானளவிலான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் மோசடிகளால் ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தவிர்த்தல் மோசடி ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

- சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக நிறுவகத்தின் உள்ளக நிர்வாகம் தொடர்பான அறிவைப் பெற்றுக்கொண்டபோதிலும் உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்தை தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு சம்பந்தமாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டிற்கான நிறுவகத்தின் தொடர்ச்சியான இருப்பு (தொடர்ந்து இயங்குதல்) சம்பந்தமான அடிப்படையை பயன்படுத்திக்கொள்ளும் ஏற்புடைமை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை நிலவுவதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தைச் செலுத்த வேண்டியுள்ளதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயத்தை திருத்தியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடைய நேரிடலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டதுடன் அதற்காக அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமை தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக நிர்வகிக்கும் (ஆளுகை) தரப்புக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் பற்றிய அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழ் குறிப்பிடப்படும் தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (III) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய நிதியத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இயைந்துள்ளது.
- 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (i) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கமைய கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், முன்வைக்கப்பட்டிருக்கும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இயைந்திராமை

1996 ஜனவரி 03 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆஜணக்குழுவினால் கட்டுப்படுத்தப்படும் ஓய்வூதிய முறையொன்றை அமைத்தல் வேண்டும் என்ற பிரேரணையின் அடிப்படையில் இந்த ஓய்வூதிய முறை 1999 யூன் மாதம் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டு பேணி வரப்பட்டுள்ளது.

ஆயினும், 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 97 ஆவது பிரிவின் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்தை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக் குழுவினால் கட்டளை விதிமுறையொன்றை தயாரிக்க வேண்டியிருந்தபோதிலும்இதுவரை அவ்வாறான கட்டளை விதியொன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கவில்லை.

### 3.1 செயலாற்றுகை

கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றது.

(அ) ஓய்வூதியத்தைப் பெறுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 172 இலிருந்து 279 வரை அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 28 மில்லியன் தொடக்கம் ரூபா 58 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதற்கிணங்க, ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட தொகையில் தொடர்ச்சியான அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் பயனாளிகளின் தனிப்பட்ட கணக்குகளில் மீதி எதுவும் காணப்படாத போதிலும்

ஓய்வூதிய நிதியத்திலிருந்து ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 33 இலிருந்து 60 வரை அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்கு செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 4.4 மில்லியனிலிருந்து ரூபா 9.1 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

(இ) ஓய்வூதிய நிதியத்தின் எதிர்கால இருப்பு மற்றும் பாதுகாப்புக்காக நிதியத்தின் அங்கத்தவர்களின் உயிர் தரவு கணக்கெடுப்பு மதிப்பீடொன்று 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும் அதனை அடிப்படையாகக்கொண்டு நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லையென்பதுடன் 2014 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டின் இறுதி வரை உயர் தரவுக் கணக்கெடுப்பு மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

டப்ளியு.பீ.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| **1.6** சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இயைந்திராமை<br><br>1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 97 ஆம் பிரிவு<br><br>1999 யூன் 10 ஆம் திகதிய 747 ஆம் இலக்க ஆணைக்குழுச் சுற்றறிக்கைப் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பேணப்படுகின்ற ஓய்வூதியத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஓய்வூதிய நிதியத்தை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவத்திற்காக ஆணைக்குழுவால் கட்டளை விதி (Ordinance) உருவாக்கப்படக்கூடியதாக இருந்தபோதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 மே 31 வரையிலும் கட்டளைவிதி உருவாக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை | வரைபு ஓய்வூதியக் கட்டளை விதி 2019 மார்ச் 05 இல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அவதானிப்புக்காக அனுப்பப்பட்டிருந்தது. அத் திருத்தங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டங்கள் மற்றும் ஆவணமாக்கல் பிரிவு மற்றும் ஓய்வூதியப் பிரிவின் அவதானிப்புக்களுடன் மீண்டும் 2019 ஏப்ரல் 01 இல் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் சட்ட வரைஞர் திணைக்களத்தின் இறுதி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் ஓய்வூதிய கட்டளை விதிகள் வெளியிடப்படும். | நிதியத்தை முறைப்படுத்தல், நிர்வகித்தல் மற்றும் அதன் செயற்பாட்டிற்குத் தேவையான கட்டளை விதிகள் உடனடியாக வெளியிடப்படல் வேண்டும். | ஓய்வூதியக் கட்டளை விதிகளின் இறுதி வரைபு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சட்டங்கள் மற்றும் ஆவணமாக்கல் பிரிவின் அவதானிப்புக்களுடன் 2019 ஏப்ரல் 01 இல் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்கான இறுதி அங்கீகாரம் கிடைத்ததன் வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதன் நடவடிக்கைகள் சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 2. நிதி மீளாய்வு<br>2.1 நிதி விளைவுகள் | மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூ. 775,591,633 மிகையொன்றாகக் காணப்பட்டதுடன் ஒப்பிடும்போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூ.702,289,420 ஆக இருந்தது. அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூ. 73,302,213 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முதலீட்டு வருமானத்தில் ஏற’பட்ட அதிகரிப்பே இந்த வளர்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது. | - | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆண்டின் செயற்பாட்டு விளைவுக்கமைய ஆண்டின் மேலதிகம் கடந்த ஆண்டின் மேலதிகத்தைப் பார்க்கிலும் விருத்தியடைவதற்கு முதலீட்டு வருமானம் அதிகரித்தமை பிரதான காரணியாக இருந்தது. |
| 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு | மீளாய்வாண்டின் முதலீட்டு வருமானமான ரூ. 923,990,432 இனை முன்னைய ஆண்டின் முதலீட்டு வருமானமான ரூ.733,205,736 உடன் ஒப்பிடும்போது ரூ. 190,784,696 அதாவது 26% மான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. திறைசேரிப் பிணை முறிகளிலிருந்தான வருமானம் மற்றும் நிலையான வைப்புக்கள் மீதான வட்டி என்பன அதிகரித்தமை இந்த நிலைமைக்கான பிரதான காணரமாகக் காணப்பட்டது. மேலும், மீளாய்வாண்டிற்கான ரூ. 10,477,679 செலவினத்துடன் ஒப்பிடும்போது மன்னைய ஆண்டிற்கான ரூ. 8,876,713 செலவினத்தில் 18% இனை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூ. 1,600,966 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின்போது ஓய்வூதியதாரர் நிதியக் கணக்குகள் தொடர்பாகமேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களின் பெறமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு அதற்கான பிரதான காரணமாக காணப்பட்டது. | - | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆண்டின் முதலீட்டு வருமானம் கடந்த ஆண்டைப் பார்க்கிலும் 26 % இனால் அதிகரித்தமைக்கு பிரதானமாக திறைசேரி முறிகள் மற்றும் நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானம் அதிகரித்தமை காரணமாகும். அத்துடன் ஆண்டின் செலவுகள் கடந்த ஆண்டைப் பார்க்கிலும் 18% இனால் அதிகரிப்பதற்கு ஓய்வூதியம் பெறுபவர்களின் கணக்குகளுக்கு இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த சீர்படுத்துதல்கள் பிரதான காரணமாகும். |
| 2.3விகிதப் பகுப்பாய்வு | மீளாய்வாண்டிற்கான நடைமுறை விகிதம் 20:2:1 ஆகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 22% அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. | - | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நடைமுறை விகிதம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 22% இனால் அதிகரித்துள்ளது. |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
|---|---|---|---|
| 3. செயற்பாட்டு மீளாய்வு<br><br>3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்<br><br>(அ) சேவையிலிருந்து ஓய்வுபெற்றபின்னர் ஓய்வூதியத்தைப் பெறுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2014 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை 172 இலிருந்து 279 வரை அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 28 மில்லியன் தொடக்கம் ரூபா 58 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. அதற்கிணங்க, ஓய்வூதியக் கொடுப்பனவுக்காக நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட தொகையில் தொடர்ச்சியான அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. | பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பணியாற்றி வருடாந்தம் ஓய்வு பெறுகின்ற ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதனால் வருடாந்தம் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையும் அதிகரித்துள்ளது. | நிதியத்தின் அங்கத்தவர்கள் தொடர்பாக உண்மையான கணக்கெடுப்பை மேற்கொண்டு ஓய்வூதியப் பயனாளிகளின் ஆயுட் கால எதிர்பார்க்கைக்கமைய நிதியத்திற்கு மேற்கொள்ள வேண்டிய சீர்படுத்தல்களை மேற்கொண்டு நிதியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும். | (1) வருடாந்தம் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களில் பணியாற்றி ஓய்வுபெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் அவர்களுக்குச் செலுத்தப்படும் ஓய்வூதியத் தொகையும் வருடாந்தம் அதிகரிக்கின்றது.<br>(2) 2018 திசெம்பர் 31 ஆம் திகதியன்று காணப்படும் அங்கத்தவர்கள் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்தி உயர் தரவுகள் கணக்கெடுப்பு மதிப்பீடொன்று இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படுவதுடன் அந்த அறிக்கையின் அறிவுறுத்தல்களை அடிப்படையாகக்கொண்டு நிதியத்திற்குத் தேவையான சீர்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும். |

சம்பந்தமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6) உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துத் தெரிவிப்பு | பரிந்துரை | உத்தேச நடவடிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமை மற்றும் செயற்பாடு |
| --- | --- | --- | --- |
| 3. செயற்பாட்டு மீளாய்வு<br><br>3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்<br><br>(ஆ) ஓய்வூதிய நிதியத்தின் எதிர்கால இருப்பு மற்றும் பாதுகாப்புக்காக நிதியத்தின் அங்கத்தவர்களின் உண்மையான மதிப்பீடு (Actuarial Valuation) ரூ. 365,000 தொகை செலவிடப்பட்டு சுமார் 04 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தபோதிலும் அதனை அடிப்படையாகக்கொண்டு நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018 ஆம் ஆண்டின் இறுதியளவில் தனிப்பட்ட கணக்குகளில் மீதி எதுவும் காணப்படவில்லை. எனினும் ஓய்வூதிய நிதியத்திலிருந்து ஓய்வூதியம் செலுத்தப்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 33 இலிருந்து 60 வரை அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்கு செலுத்தப்பட்ட ஓய்வூதியத்தின் பெறுமதி ரூபா 4.4 மில்லியனிலிருந்து ரூபா 9.1 மில்லியன் வரை அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கொரு தடவை உயிர் தரவு கணக்கெடுப்பு ஆலோசகர் ஒருவர் ஊடாக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2017.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உயிர் தரவு கணக்கெடுப்பு அறிக்கை 2018.12.31 இன் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட வேண்டுமென ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. அதற்கான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதுடன் அந்த மதிப்பீடு ஊடாக கிடைக்கும் அறிக்கைகளைப் பயன்படுத்தி அங்கத்தவர்களின் அனுகூலங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்படவுள்ளது. | நிதியத்தின் அங்கத்தவர்கள் தொடர்பாக உண்மையான கணக்கெடுப்பை மேற்கொண்டு ஓய்வூதியப் பயனாளிகளின் ஆயுட் கால எதிர்பார்க்கைக்கமைய நிதியத்திற்கு மேற்கொள்ள வேண்டிய சீர்படுத்தல்களை மேற்கொண்டு நிதியத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் வேண்டும். | (1) 1999 உயிர் தரவுகள் கணக்கெடுப்பு ஆலோசகரின் பரிந்துரையை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்ட ஓய்வூதிய நிதியத்திலிருந்து அங்கத்தவர்களுக்கு குறிப்பிட்ட ஓய்வூதியம் பெறுபவர்களின் வரவு மீதியை அடிப்படையாகக்கொள்ளாமல் மொத்த ஓய்வூதிய நிதியத்தை அடிப்படையாகக் கெண்டே ஓய்வூதியம் செலுத்தப்படுகின்றது.<br><br>(2) 2018.12.31 ஆம் திகதியன்று காணப்படும் அங்கத்தவர்கள் தொடர்பான தரவுகளைப் பயன்படுத்தி நிதியத்தின் உயிர் தரவு கணக்கெடுப்பு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது. அதற்காக போட்டி அடிப்படையிலான விலைமனுக்கள் கோரப்படுதல் ஊடாக உயிர் தரவு கணக்கெடுப்பு ஆலோசகர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அந்த மதிப்பீட்டின் ஊடாக கிடைக்கப்பெறும் பயன்படுத்தி அங்கத்தவர்களுக்குரிய அனுகூலங்கள் மீளாய்வுக்குட்படுத்தப்படவுள்ளது. |

# பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2018 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2018 ஆம் ஆண்டு ரூபா | (மீள் கூற்று) 2017 ஆம் ஆண்டு ரூபா |
|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| வரி மற்றும் செலவுக்குப் பின்னரான தேறிய வருமானம் | 2,957,647,689 | 3,041,748,120 |
| சீர்படுத்தல்கள் | | |
| திறைசேரி முறிகள் மீதான கழிவு ∴ உபரித்தொகை | 88,595,375 | 82,019,967 |
| திறைசேரி முறிகள் விற்பனை மீதான லாபம் ∴ நட்டம் | - | (8,848,340) |
| ஆண்டின் தேய்மானம் | 208,673 | 200,940 |
| பதிவழிப்புக்கள் | 250,000 | - |
| வருமான வரி | 690,769,584 | 113,374,123 |
| தொழிற்பாட்டு மேலதிகம் ∴ குறைவு | 3,737,471,322 | 3,228,494,810 |
| தொழிற்பாட்டு மூலதன மாற்றங்கள் | | |
| இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்கள் | (104,524) | 30,322 |
| பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமான மாற்றம் | 3,254,657,049 | (236,976,995) |
| கடன் மாற்றங்கள் | (3,046,747) | 18,879,390 |
| செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப்படி மாற்றம் | (1,382,537) | (26,794,308) |
| நானாவித கடன் வழங்குனர்களின் மாற்றம் | 2,907,988 | (443,250) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் ஈட்டிய காசு | 6,990,502,551 | 2,983,189,970 |
| ஆண்டினுள் செலுத்திய வருமான வரி | (432,292,656) | (95,254,577) |
| தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | 6,558,209,894 | 2,887,935,392 |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| நிலையான வைப்புக்களின் முதிர்ச்சி | 14,590,000,000 | 1,950,000,000 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | (17,030,000,000) | (5,500,000,000) |
| திறைசேரி முறிகள் விற்பனை ∴ முதிர்ச்சி | - | 1,722,706,862 |
| கடன் பத்திரங்கள் கொள்வனவு | (4,300,000,000) | - |
| திறைசேரி முறிகள் கொள்வனவு | (971,757,463) | (1,511,587,807) |
| சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (2,484,557) | - |
| சேமலாப நிதியக் கடன் வழங்குதல் மற்றும் தீர்த்தல் | (1,030,458,854) | (528,709,115) |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | (8,744,700,874) | (3,867,590,060) |
| நிதி நடவடிக்கைகள் மூலமான காசுப் பாய்ச்சல் | | |
| அங்கத்துவப் பணம் வரவு | 4,092,254,036 | 3,368,634,892 |
| அங்கத்துவப் பணம் செலுத்தல் | (2,141,253,575) | (2,256,874,655) |
| நிதி நடவடிக்கைகள் மூலமான தேறிய காசுப் பாய்ச்சல் | 1,951,000,461 | 1,111,760,237 |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு | (235,490,519) | 132,105,569 |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 261,663,620 | 129,574,612 |
| ஆண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 26,173,101 | 261,680,180 |

# பல்கலைக்கழக சேமலாப நிதியம்

## 2018.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமை மாற்றல் கூற்று

| | அங்கத்துவ மீதி செயற்பாடு | அங்கத்துவ மீதி செயற்பாடற்ற | செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்கிற்கான ஒதுக்கீடு | கோரப்படாத அனுகூல இருப்பு | நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம | மொத்த தேறிய சொத்துக்கள் |
|---|---|---|---|---|---|---|
| 2017.01.01 ஆம் திகதியன்று மீதி (மீள் கூற்று) | 33,008,155,616 | 44,126,524 | 8,000,000 | 6,965,536 | 220,553,517 | 33,287,801,192 |
| ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம் | 3,260,500,191 | - | - | - | - | 3,260,500,191 |
| அங்கத்துவ வட்டி | 2,998,524,289 | - | - | - | (2,998,524,289) | - |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | - | - | 3,844,262 | - | (3,844,262) | |
| அங்கத்துவப் பணம் மீளச் செலுத்தல் | (2,259,257,647) | - | - | - | - | (2,259,257,647) |
| ஓய்வினை விடுப்புக்கான அறவீடுகள் | (9,081,420) | - | - | - | - | (9,081,420) |
| சீர்படுத்தல்கள் | (10,004,215) | (5,661,355) | (3,844,262) | 1,772 | 19,508,060 | 1 |
| 2017 ஆம் ஆண்டின் மேலதிகம் (மீள் கூற்று) | - | - | - | - | 3,041,748,120 | 3,041,748,120 |
| 2017.12.31 ஆம் திகதியன்று மீதி (மீள் கூற்று) | 36,988,836,814 | 38,465,169 | 8,000,000 | 6,967,307 | 279,441,147 | 37,321,710,437 |
| ஆண்டிற்குரிய அங்கத்துவப் பணம் | 4,144,292,305 | - | - | - | - | 4,144,292,305 |
| அங்கத்துவ வட்டி | 3,251,211,956 | - | - | - | (3,251,211,956) | - |
| செயற்பாடற்ற அங்கத்துவக் கணக்குகளுக்கான வட்டி | - | - | 1,655,402 | - | (1,655,402) | - |
| அங்கத்துவப் பணம் மீளச் செலுத்தல் | (2,146,290,058) | - | - | - | - | (2,146,290,058) |
